புன்னகை
ஸ்பெஷல்

கல்கி

KALKI 4.8.2002
ரூ. 6.00





அதிக
பக்கங்கள்

வைரவிழா
சிறப்பிதழ்

பாபா II
–ரஜினி மகள் எடுக்கும் படம்

உள்ளே...





கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



நம்பர் ஒன்

‘மென் இன் ப்ளாக் II’ படத்தில் அப்படியென்னதான் இருக்கிறதோ தெரியவில்லை. டாப் டென் மூவீஸில் இதுதான் நம்பர் ஒன். பன்னிரண்டு நாள் வசூல் மட்டும் 133.3 மில்லியன் டாலர். இரண்டாவது இடத்தைக் கைப் பற்றியிருக்கிறது ‘ரோட் டு பெர்டிஷன்’ என்ற படம். ‘மென் இன் பிளாக்’ படம் ஓடும் தியேட்டர்களின் எண்ணிக்கையில் பாதி அளவு அரங்குகளில்தான் இது ஓடிக்கொண்டிருக்கிறது.




• மென் இன் ப்ளாக் II

அப்பவே சாக்லெட்!

‘சாக்லெட் தின்னா அடிப்பேன்’ என்று குழந்தைகளை இனி திட்டாதீர்கள். ஏனென்றால் இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பே சாக்லெட் சாப்பிட்டிருக்கிறார்களாம் நம் மக்கள். அமெரிக்காவில் ‘கோல்ஹா’ என்ற இடத்தில் எடுக்கப்பட்ட பதினான்கு பீங்கான் ஜாடிகளைச் சோதனையிட்டதில், அதனடியில் சாக்லேட்டில் பயன்படுத்தப்படும் தியோப்ரோமின் இருப்பது தெரிய வந்திருக்கிறது.




• பீங்கான் ஜாடி



வோக்னா!

ரஷ்ய விண்வெளி ஆய்வு மையம் மத்திய தஜிகிஸ்தானில் ‘ஓக்னோ (OKNO) மையம் ஒன்றைத் துவக்கியிருக்கிறது. இந்த மையம் பூமியிலிருந்து நாற்பதாயிரம் கி.மீ தொலைவில் விண்வெளியில் உள்ள ஒவ்வொரு பொருளையும் கண்டறிந்து


நியூஸ் ஜூஸ்



ஆராய்ச்சி செய்யுமாம். 1972ம் ஆண்டிலேயே இதற்கான வேலைகள் ஆரம்பித்து விட்டாலும், பல்வேறு அரசியல் பிரச்னைகள் காரணமாக இப்போதுதான் இம் மையத்தைத் திறந்திருக்கிறது ரஷ்யா. இதே போன்று மூன்று மையங்கள் அமெரிக்காவிடம் இருக்கின்றன.

சினிமாவுக்கு?


இங்கிலாந்து புட்பால் கேப்டன் டேவிட் பெக்கம் சினிமாவில் நடிக்கப் போகிறாரென்று ஊரெல்லாம் பேச்சு. அவரிடமே போய்க் கேட்டால், "சின்ன ரோல்தான். இப்போதைக்கு வேண்டாமென்று விட்டேன்" என்கிறார். இவரில்லாவிட்டால் என்ன? விம்பிள்டன் முன்னாள் பிளேயர் வின்னி ஜோன்ஸை வளைத்திருக்கிறது சம்பந்தப்பட்ட பட நிறுவனம்.



• டேவிட் பெக்கம்

ஊசி இல்லை!

மலேரியா நோயைத் தடுக்க, தடுப்பூசி கண்டுபிடிப்பது சிரமமான விஷயம் என்று சொல்லியிருக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். 'கொசுவின் சக்தி வலுவாக இருக்கிறதாம். மலேரியாவை உண்டாக்கும் கொசுக் கிருமியை நோண்டி நோண்டி ஆராய்ச்சி செய்வதே பெரும் பாடாக இருக்கிறதாம். இப்போதைக்குத் தடுப்பூசி கிடைக்காதாம். கொசு போடும் ஊசிதான் இந்தத் தலைமுறைக்குக் கொடுத்து வைத்திருக்கிறது போலும்!



• மலேரியா

• லக்ஷ்மி நடராஜன்

இந்த இதழில் இடம் பெற்றுள்ள க.சுவாமி சொல்லாத கமெண்ட் கற்பனை: சாரு




நீச்சல் மாஸ்டர்!

வாழ்க்கையில நடந்த ஏதாவது காமெடியான விஷயம், அடிக்கடி நம்ம மனசுக்குள்ள வந்து கிச்சுகிச்சு மூட்டுமில்லையா? அது மாதிரியான விஷயத்தைச் சில பிரபலங்களிடம் கேட்டோம்.

நடிகர் சார்லி: "எங்க ஊர் குளத்துல தண்ணீர் நிறையறது அத்திப் பூத்த மாதிரி. மழை, தண்ணி மாதிரியான விஷயமே அப்படித்தான். எங்க வீட்டுக்குப் பின்பக்கம் பெரிய குளம் இருந்தது. ஒருநாளு என் தோழன் தேவதாஸ், "எலேய், குளத்துல தண்ணி நிரம்பி வழியுது; நீச்சல் கத்துத் தாரேன் வர்றியா?"ன்னான். வீட்ல அடம் பிடிச்சு, அனுமதி வாங்கி நடையைக் கட்டுனேன் அவன்கூட.

"கரையில நின்னுட்டிருந்தோம். அவன் பொத்தடீர்னு தண்ணியில விழுந்து நீந்தி, கொஞ்சம் தள்ளி இருந்த திட்டுல நின்னுகிட்டான். என்னையப் பார்த்து குதிக்கச் சொன்னான். "குதிச்ச உடனே கைய கால டப் டப்புனு அடி; அவ்வளவுதான் நீச்சல்"ன்னு வேற சொன்னான். நான் 'பொத்'துனு தண்ணியில விழுந்தது தான் தெரியும். கையையும் காலையும் அடிச்சா மேல வர முடியலை. தரைய நோக்கி கிழ போய்ட்டிருக்கேன். மூச்சு முட்டுது. 'இனுமே அவ்வளவுதான். நாம காலின்னு



நினைச்சிட்டிருக்கும்போது, தெய்வம் மாதிரி தேவதாஸ் கை அகப்பட்டது. டப்புனு புடிச்சேன். கை மரக்கட்டை மாதிரி இருந்தது. அவன் கை இப்படி இருக்காதேன்னு யோசிக்கவா இது நேரம்? அடுத்த நொடி அவன் முதுகை புடிச்சேன். கரடு முரடா இருந்தது. என்னடா இதுன்னு ஆச்சர்யத்தோட, தண்ணிக்கு மேல வந்து மூச்சு வாங்கினேன். யப்பா உயிர் வந்ததே! 'தேவதாஸு நீ நூறு வருஷம் வாழணும்டா'ன்னு சொல்லிட்டே திரும்புனா, நான் ஏறியிருந்தது எருமை மாட்டு முதுகு! தேவதாஸைத் தேடி தேடிப் பார்த்தேன். ம்ஹூம் காணலை. என் உயிரைக் காப்பாத்தின, எருமை மாட்டுக்குப் 'பெரிய கும்புடு' போட்டேன். காசு வாங்காமலேயே நீச்சல் கத்துத் தந்த மாஸ்டராச்சே! இதை இப்ப நினைச்சாலும் சின்னதா ஒரு புன்னகை. எனக்கு நானே சிரிச்சுக்குவேன்."

- அப்பு



போலீஸ் ஸ்டேஷன்னா சிரிப்புதான்!

விவேக் :-

மதுரை டி.வி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிச்சிட்டிருந்தேன். அப்பா கல்வி அதிகாரி. அவரோட சைக்கிளை எடுத்துக்கிட்டுதான் சுத்துவது, கடைக்குப் போவது மாதிரியான வேலைகளையெல்லாம் செய்வேன். வீட்டுக்கு இட்லி மாவு அரைத்து வர்ற வேலையைத் தினமும் என் தலையில் கட்டிடுவாங்க. பள்ளிக்கூடம் முடிஞ்சு வந்ததும் உடனே அரைச்சுட்டு வந்துடலாம்னா அரிசியும், உளுந்தும் சரிவர ஊறியிருக்காது. பொழுது சாஞ்ச பிறகு ஆறரை மணி வாக்கில், ஊற வைத்த அரிசியைத் தூக்கு வாளியிலயும், கையில ஒரு டார்ச் லைட்டையும் கொடுத்து அனுப்புவாங்க. ஒருமுறை மாவு அரைச்சதும், தூக்கு வாளியை சைக்கிள் ஹேண்டில் பாரில் மாட்டிக் கிட்டு குரங்கு பெடல் மிதித்தபடியே வந்துட்டிருந் தேன். திடீர்னு நான் வந்துட்டிருந்த தெருவில் கரண்ட் கட். ஒரே இருட்டு.



எனக்குக் கையில டார்ச் இருக் கேங்கற சந்தோஷம். டார்ச் லைட்டை எடுத்து சாலையில் அடிச்சேன். உடனே மனசுக்குள்ள குறும்பான எண்ணம். தெருவில இரண்டு புறமும் இருக்கும் வீட்டு வாசல்களில் டார்ச் வெளிச்சத்தைத் திருப்பினால் என்ன?ன்னு. அவ்வளவுதான் உற்சாகம் தொற்றிக் கொள்ள, வீட்டுக் கதவுகள் வழியே எனது டார்ச் ஒளி பாய்ஞ்சுது. "டேய் எவன்டா அவன்! ராஸ்கல்"னு வந்த குரல்கள் கொஞ்சம் பய மூட்டினாலும் நாம்தான் சைக்கிள்ல போறோமேங்கற துணிச்சல். ஆனால் ஒரு வீட்லயிருந்து ஆட்கள் ஓடி வந்து "அவனைப் பிடிங்க. விடாதீங்க"னு துரத்த ஆரம் பிச்சாங்க. அவ்வளவுதான் டார்ச் லைட்டை அந்த இடத்திலேயே போட்டுட்டு சைக்கிளை வேகவேகமாக மிதிக்க ஆரம்பிச்சேன். மேலயும் கீழயும் ஒரு மேட்டில் ஏறும்போது 'டமார்'னு சிதறி கீழே விழுந்து தூக்குவாளி உடைஞ்சுட்டுது. மாவு போனா போகட்டும்னு சைக்கிளை வேகமா மிதிக்க ஆரம்பிச்சேன். ஒரு இடத்துல கபக்குனு கோழிக் குஞ்சை அமுக்கற மாதிரி அமுக்கிட்டாங்க. "எவ்வளவு தைரியமிருந்தா போலீஸ் ஸ்டேஷனுக் குள்ளேயே டார்ச் அடிப்பே"ன்னு அடிக்க கையை ஓங்கும்போது கரண்ட் வந்திடுச்சு. என்னைப் பிடிச்சிருந்தவங்க போலீஸ்காரங்க. நான் டார்ச் அடிச்சது மதுரை திருநகர் போலீஸ் ஸ்டேஷன்ல. கல்வி அதிகாரி மகன்ங்கறதால மன்னிச்சு விட்டாங்க. இப்ப போலீஸ் ஸ்டேஷனை எங்க பார்த்தாலும் மனசுக்குள்ள சிரிச்சுக்குவேன்.


— ஜெ.



விட்டா பிடிச்சுக்குவீங்களா?

டாக்டர் மாத்ருபூதம் :

மருத்துவப் படிப்பு முடிந்து ஹவுஸ் சர்ஜனா நான் இருந்தபோது, அவசர சிகிச்சை பிரிவுக்கு வரும் நோயாளிகளைக் கவனிக்கணும். அதில் ஆஸ்த்துமாவுக்கு ஊசி போட்டுக் கொள்ள வரும் நோயாளிகளும் இருப்பாங்க. நரம்பு ஊசி போடணுமா, சதை ஊசி போடணுமான்னு அவங்களே சொல்லிடுவாங்க. அப்படி ஓர் அம்மா வந்தார் ஒரு நாள். கொஞ்சம் டெஸ்ட் பண்ணிட்டு எல்லாரிடமும் சொல்றதுபோல, 'நல்லா மூச்சை இழுத்து விடுங்கம்மா'னு கொஞ்சம் அழுத்தமாச் சொல்லிட்டேன். அந்த அம்மாவுக்குக் கோபம் வந்துடுச்சு. முறைச்சுப் பார்த்துட்டு 'நான் மூச்சை நல்லா இழுத்து உடறேன். நான் உட்டா நீ பிடிப்பியாய்யா?''னு சப்தம் போட்டுட்டார். எனக்கு அந்த நிலைமையிலும் 'குபுக்'குனு சிரிப்புப் பொத்துக்கிட்டு வந்துடுச்சு. இப்போகூட அந்த நிகழ்ச்சியை நினைச்சு சிரிச்சுக்குவேன்.



மன அழுத்தத்துக்கு ஆளாகி, தற்கொலை எண்ணத்துடன் ஒருவர் வந்தார். மனச்சோர்வுக்கு மருந்திருக்கு. மனம் தளரக்கூடாது. என்ன வந்துடப் போகுது? வாழ்ந்து சாதிக்கலாம்னு அவருக்கு உற்சாகம் தருகிற மாதிரி பேசிட்டு, "சாவை சாவே தீர்மானிக்கட்டும், வாழ்வை நாம் தீர்மானிப்போம்"னு சொன்னேன். அவர் எழுந்து போய்விட்டார். ஃபீஸ் தரவே இல்லை! அவரைக் கூப்பிட்டு, பீஸ் எங்கய்யா?'ன்னு கேட்டேன். 'பீஸை, பீஸே தீர்மானிக்கட்டும். சிகிச்சையை நீங்க தீர்மானிங்க''னு ஒரு போடு போட்டார். அவருடைய ரசனையைப் பாராட்டிட்டு, பீஸைத் தர வேண்டாம்னு அனுப்பி வைச்சேன்.

— சித்தார்த்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன்: 276 0612.
City Office: No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன்: 371 4942.

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 180 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (180 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்
நல்லாசியுடன்
இறைவன் தொண்டில்
A.ராஜா பக்கிரிசாமி M.Sc., M.Ed.,
மேனேஜிங் டிரஸ்டி.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.



பாபா படம் எப்படி எடுக்கப்படுகிறது என்பதையே படமாக எடுத்துக் கொண்டிருக்கிறார் ரஜினியின் மூத்த மகள் ஐஸ்வர்யா. இந்தப் படம் பற்றி கண்களில் மின்னலும் உதட்டில் புன்னகையுமாகப் பேசினார் ஐஸ்!

"ஆஷ்ரம் ஸ்கூல் ஆஃப் லா வில் மூன்றாவது வருடம் சட்டப் படிப்பு படிக்கிறேன். போட்டோகிரபியில் எனக்கு ரொம்ப ஆர்வம். பாபா படம் ஆரம்பிக்கும் முன்பாக 'உன்னிடம் நல்ல கிரியேடிவிடி இருக்கிறது. அதை வைத்து பாபா எப்படி எடுக்கப்பட்டது என்று ஒரு படம் எடு' என்றார் அப்பா. ஒரு டிஜிடல் மூவி கேமராவும் வாங்கிக் கொடுத்தார். பாபா படம் பூஜைக்கு முன்பே என்னுடைய படம் சம்பந்தப்பட்ட வேலைகளை ஆரம்பித்து விட்டேன். அப்பாவின் அட்வைஸ் படி நானாகவே ஒரு ஸ்கிரிப்ட் தயார் செய்தேன். 'பாபா' டிஸ்கஷன், 'அருணாசலா'வில் நடக்கிறபோதே நான் படம் எடுக்க ஆரம்பித்துவிட்டேன். அதுதான் நான் எடுத்த முதல் காட்சி.





• ஐஸ்வர்யா

பிறகு, ஏவிஎம் ஸ்டுடியோவில், அப்பா, பாபாவாக மேக்அப் போட்டுக் கொண்டது, பூஜை நடந்த இடத்துக்கு அவர் வந்தது, பூஜை காட்சிகள், முதல் ஷாட் என்று எதையும் விடவில்லை.

பாபா படத்தின் படப்பிடிப்பு நேரம் கூட எனக்கு மிகவும் சௌகரியமாக இருந்தது. காலை எட்டு மணிக்கு ஆரம்பித்து, பகல் ஒரு மணிக்கு எனக்கு காலேஜ் முடிந்துவிடும். அதன்பின் படப் பிடிப்புக்குப் போய் விடுவேன். விடுமுறை நாட்களில் ஷூட்டிங் நடந்தால், நான் முழுக்க அங்கேதான் கழிப்பேன். 'ஒன் மேன் ஆர் மி' போல, பாபா உருவான கதையை நான் மட்டுமே டிஜிடல் கேமராவில் படம் பிடிப்பேன். எனக்கு அசிஸ்டென்ட் என்று யாரையும் வைத்துக் கொள்ளவில்லை. எனக்கு நானே சில விதிமுறைகளை வகுத்துக் கொண்டேன். அவற்றில் மிகவும் முக்கியமானது, நான்

—ரஜினி மகள் பேட்டி

பாபா II

ரஜினியின் மகனாக இருந்தாலும்கூட என்னால், படப்பிடிப்புக்கு எந்தவிதமான இடைஞ்சலும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதுதான். மொத்த படப்பிடிப்பிலும் மிகத் தீவிரமாய் இதைக் கடைபிடித்தேன்.

இரண்டு நாட்களுக்குச் சராசரியாக நூற்று அறுபது நிமிடப் படப்பிடிப்பு என்கிற கணக்கில், மொத்தம் சுமார் நாற்பத்தைந்து நாட்கள் நான் ஷூட் பண்ணி வைத்திருக்கிறேன். ஒவ்வொரு நாளும் படப்பிடிப்பிலிருந்து வந்தவுடன், அன்றைக்கு எடுத்த மொத்த காட்சிகளையும் மறுபடி ஒரு தடவை பார்த்து எந்தெந்த காட்சிகள் மிக முக்கியம் என்று எனக்குத் தோன்றுகிறதோ அவற்றையெல்லாம் எத்தனை நிமிடம் என்ற குறிப்புடன், மார்க் பண்ணி வைத்து இருக்கிறேன்.



இந்த உருவாக்கத்தில் நான் ஈடுபட்டதிலிருந்து சினிமா உலகம் குறித்து சில உண்மைகளைப் புரிந்து கொண்டேன். வெளியிலிருந்து பார்க்க, சினிமா ரொம்ப கிளாமராகத் தோன்றினாலும் ஒவ்வொரு பிரேமுக்கும் பின்னால் பலருடைய கடுமையான உழைப்பு இருக்கிறது. ஒரு படத்தின் வெற்றியில் இவர்கள் ஒவ்வொருவருக்கும் பங்கு இருக்கிறது என்று புரிந்து கொண்டேன். சினிமாவில் நிறைய பொறுமை அவசியம் என்பதை உணர்ந்து கொண்டேன். அங்கே கற்றுக் கொள்ளுவதற்கு தினம் தினம் அதிக விஷயங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு நாளும் ஏற்பட்ட அனுபவங்கள் வித்தியாசமானவை என்றாலும், சில சந்தர்ப்பங்களை என்னால் மறக்கவே முடியாது. பாபா படத்தின் கேமராமேன் சோட்டா நாயுடு, ஒரு பாடல் காட்சியைப் படம் பிடித்துக் கொண்டிருந்தார். நான், அந்தப் பாடல் காட்சியுடன்கூட அதைப் படம் பிடிக்கும் கேமராக் குழுவினரையும் சேர்த்து கம்போஸ் செய்து ஒரு கோணத்தில் படம் பிடித்தேன். அதைப் பார்த்துவிட்டு, நாயுடு, என்னை மிகவும் பாராட்டினார். ஒரு அனுபவசாலியான கேமராமேன் முதல் தடவையாக கேமரா பிடித்த என்னுடைய ஓர்க்கைப் பாராட்டியது எவ்வளவு பெரிய விஷயம்?

பாபா படப்பிடிப்பு முடிந்து, பூசணிக்காய் உடைத்த காட்சியை நான் படம் பிடித்தபின், போஸ்ட் புரொடக்ஷன் வேலை ஆரம்பமானது. அதையும் நான் ஷூட் பண்ணி வைத்திருக்கிறேன்.

பாபா படத்தின் ரிலீசை, தியேட்டர்களில் ரசிகர்கள் எப்படிக் கொண்டாடுகிறார்கள் என்று படம் பிடிக்கப் போகிறேன். இந்தப் படத்தில் பங்கேற்றவர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வார்கள்.

அனைத்தையும் நேர்த்தியாக எடிட் செய்து, ஒன்னரை மணி நேரம் வரும்படியான சி.டியாக உருவாக்கப் போகிறேன்.

"அது எப்போ ரிலீஸ் ஆகும்?"

"பாபாவின் நூறாவது நாள் விழாவில்!"

பாபா - II !



சந்திப்பு : எஸ்.சந்திரமௌலி
அட்டை, படங்கள் : யோகா
ரஜினி படம் : ஷங்கர்

எம்மிடம் சிகிச்சைபெற்று குணமடைந்தவர்களில் ஒருவரின் பாராட்டுரை!

ஆரோக்கியம் தரும் அடையார் நேச்சர் க்யூர் சென்டரே வாழ்க! வளர்க

தர்மத்தாய் இத்தரணிக்கு தாரை வார்த்து
தந்த தாயுள்ளம் கொண்ட தயாநிதியே!
தனக்கென வாழாமல் பிறர்க்காக வாழும்
பெருமைமிக்க பேருள்ளம் கொண்ட பெருந்தகையே!
நலிந்தோரின் நற்பொருளே! நடமாடும் தெய்வமே!
மானுடத்தை மனதார நேசிக்கும் மனிதநேயரே!
மாளாத நோயையும் மாளவைக்கும் மருத்துவரே!
மண்ணில் மலர்ந்த மனிதவுயிர் காப்பதற்கு
இப்பூமிக்கு வராது வந்த ஒருமாமணியே!
குளிர் தருவே! குறிஞ்சி மலரே!
மக்கள் போற்றும் மருத்துவத்தின் மணிமகுடமே!
பூமித்தாய்க்கு புகழ்சேர்க்கும் புனிதரே! அய்யாபுருஷோத்தமரே!
தீராத நோய்களுக்கும் தீர்வுகாணும் தென்னாட்டுத்தீரரே!
அடையார் அளித்த அற்புதமே! அருளாளரே!
மருத்துவத்தில் தனக்கென தனிப்பாதை வகுத்து
அடையார் நேச்சர் க்யூர் சென்டரென்ற
மக்கள் நலம் காக்கும் மருத்துவமனை
அமைத்து மக்களுக்கு ஆரோக்கியம் அளித்துவரும்
அருட்கொடையே! ஆராதனைக்குரிய அய்யா அவர்களின்
அருட்புதசிகிச்சையால் என்மகள் நலம் பெற்றமைக்காக
என்னிதயத்தில் எழுந்த எண்ணங்களை எழுத்தாக்கி
நன்றிமலராய் மாணிக்க மாலையாய் தங்களுக்குஅணிவிக்கிறேன்
மருத்துவ சிகிச்சையில் சாதனையின் சிகரமே!
மகத்தான மருத்துவத்தை தொழிலாகச் செய்யாமல்
தொண்டாக செய்துவரும் மத்தான சேவையை
மக்களுக்கு அமுதமாக அள்ளி வழங்கிவரும்
அடையார் நேச்சர் க்யூர் சென்டர்
அருகுபோல் வேரோடி ஆல்போல் தழைத்து
ஆயிரமாயிரம் ஆண்டுகள் நிலைத்து நின்று
வரலாற்றில் வாடாமலராக மணம் வீசிடவும்
எல்லாம் வல்ல இறைவன் திருவருளால்
தாங்கள் ஆயுள்பலம் பெற்று மனிதகுலத்திற்கு
மகத்தான மருத்துவத் தொண்டை சிறப்பாகசெய்வதற்கு
பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்து ஆண்டுகள்
வாழ்க! வாழ்க! வாழ்கவென வாழ்த்துகிறேன்.

இடம்: வாசுதேவநல்லூர்
நாள்: 15.7.2002

இப்படிக்கு
என்றென்றும் நன்றியுள்ள

15.7.2002

இ. பிள்ளையார்
தலைமை ஆசிரியர் (ஓய்வு) 47, சங்கிலிவீரன் தெரு,
வாசுதேவநல்லூர் அஞ்சல், 627 758 சிவகிரி வட்டம்
திருநெல்வேலி மாவட்டம்.
தொலைபேசி எண்: 04636 - 4418089



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி, தமாஷ் ஹைகூ போட்டி முடிவுகள்:



• கல்கி பதிப்பாளர் கி. ராஜேந்திரன், எல். வைத்தீஸ்வரன், தமிழன்பனுடன் கல்கி ஆசிரியர்.



• பாஸ்கர் சக்தி, பால்யூ



• தாமரை

ஆயிரக்கணக்கான வாசக எழுத்தாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்த இவ்வாண்டு சிறுகதைப் போட்டிக்கு, எழுத்தாளர்கள் பால்யூ, பாஸ்கர் சக்தி, பாடலாசிரியர் தாமரை ஆகியோரும், ஹைகூ கவிதைப் போட்டிக்கு எல். வைத்தீஸ்வரன் மற்றும் தமிழன்பனும் நடுவர்களாக இருந்தனர். இவர்களுடன் கல்கி ஆசிரியரும் இணைந்து இறுதிச் சுற்று கதைகளைப் பரிசீலித்ததில் கீழ்க்கண்ட சிறுகதைகளும், ஹைகூகளும் பரிசுக்குரியதாகத் தேர்வாயின.

முதல் பரிசு ரூ. 10,000

'ஊசி இலை மரம்'

ரெ. கார்த்திகேசு, பினாங்கு, மலேசியா

இரண்டாவது பரிசு ரூ. 7500

'மூவர்'

சத்தியப் பிரியன், சேலம்

மூன்றாம் பரிசு ரூ. 5000

'செங்கிப்பட்டிக்கு இரண்டு டிக்கெட்'

ரிஷபன் (ஆர். சீனிவாசன்)

ஸ்ரீரங்கம், திருச்சி - 6

(இரண்டு) ஆறுதல் பரிசுகள்:

தலா ரூ. 1250

'மாயமான் வேட்டை'

தேவ விரதன், சென்னை - 20.

'விடிகிற நேரம்' இ.ஜே. தீன்.

திருநள்ளாறு

ஹைகூ

முதல் பரிசு ரூ. 1000

தளவை இளங்குமரன்,

செங்கல்பட்டு

இரண்டாம் பரிசு ரூ. 750

லிடியா இம்மானுவேல்,

திருக்காட்டுப்பள்ளி

மூன்றாம் பரிசு ரூ. 500

ச. முருகேசன், மதுரை.

(மூன்று) ஆறுதல் பரிசுகள்

தலா ரூ. 250

ப்ரணா, தஞ்சை.


கோவி. லெனின், சென்னை - 5.

ஜெயகிருஷ்ணன், சென்னை - 78.

- முதல் பரிசு பெற்ற கதையும் ஹைகூவும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன.
- பிரசுரத்துக்குத் தேர்வான கதைகளின் பட்டியல் அடுத்த இதழில்
- பரிசு பெற்றோருக்கு வாழ்த்துக்கள்

கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி! நன்றி!

— ஆசிரியர்





கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
- பாரதியார்.

மோடியின் மோசடி!


குஜராத் கலவரங்களுக்குப் பின் ராஜினாமா செய்ய மறுத்த மோடி, காலம் கடந்து இப்போது திடீரென்று ராஜினாமா செய்து, குஜராத்தில் தேர்தலும் நடத்தப் பரிந்துரைத்திருப்பது மகா மோசடி.

அவரது நடவடிக்கையைத் துணைப் பிரதமர் அத்வானி முழுக்க முழுக்க ஆதரித்து, 'மோடிக்கு உங்கள் நற்சான்றிதழ் தேவையில்லை' என்று எதிர்க்கட்சிகளின் வாயை அடைப்பதோ அபாயகரமான யதேச்சதிகாரப் போக்கு.


மத்திய அரசின் இந்தப் போக்குக்கு மற்றொரு உதாரணமும் காட்டலாம்:

'அம்னெஸ்டி இன்டர்நேஷனல்' என்ற சர்வதேச அமைப்பு, உலகெங்கும் மனித உரிமைகளைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டது. இந்தியா வந்து, குஜராத் நிலவரத்தை எடைபோட இவ்வமைப்பின் குழு முயன்றபோது, 'விஸா' அளிக்க மறுத்துவிட்டது இந்திய அரசு.

"குஜராத்தில் நடந்த வன்முறைகள் யாவும் மாநில அரசால் திட்டமிடப்பட்டு அரசின் ஆதரவுடன் அரங்கேறியிருக்கின்றன என்கிற



2002 ஆகஸ்ட் 4
சித்ரபானு ஆடி 19
மலர் : 61
இதழ் : 1



எங்களது சந்தேகம் வலுவடைந்திருக்கிறது" என்கின்றனர் 'விஸா' மறுக்கப்பட்ட 'அம்னெஸ்டி' குழுவினர்.

கோத்ரா சம்பவங்களைத் தொடர்ந்து குஜராத் சென்று கள ஆய்வு செய்த தன்னார்வ அறிஞர் குழுவும், இதே கருத்தை ஏற்கெனவே தெரிவித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய மனித உரிமை கமிஷன் அறிக்கையையும், குஜராத் அரசோ மத்திய அரசோ மதிக்கவே யில்லை.


தற்போது குஜராத் அரசின் ஆட்சிக் காலம் முடிய எட்டு மாதங்கள் இருக்கும் நிலையில் எந்தக் காரணமும் கூறாமல் சட்டசபையைக் கலைக்கிறார் முதல்வர். 'நான் கடந்த காலத்தில் தவறு செய்திருந்தால் மன்னியுங்கள்' என்று நாடகமும் ஆடுகிறார்.

ஆட்சிக் கலைப்பை நியாயப்படுத்த மோடி முயற்சிகூட செய்யவில்லை. 'ஆட்சியைக் கலைக்க அதிகாரம் உண்டு; கலைக்கிறேன்' என்பது மட்டுமே அவரது வாதம்!

அரசியல் சாசன விதிகள்படி ஆறுமாத இடைவெளிக்குள் சட்டசபையின் இரு கூட்டங்கள் அமைந்தாக வேண்டும். அதன்படி, அக்டோபர் ஆறாம் தேதிக்குள் குஜராத் சட்டசபை கூடியாக வேண்டும் என்பதால் செப்டெம்பரில் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என்பது இவர்கள் திட்டம். ஆனால், இது தவறான வாதம் என்றும், ஓர் ஆட்சி நடக்கையில்தான் இந்த ஆறுமாத இடைவெளிக் கணக்கு பொருந்தும்; இரு ஆட்சிகளுக்கு இடையே அல்ல என்றும் சட்ட நிபுணர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

சட்டத்தை இவர்கள் தப்பர்த்தம் பண்ணிக் கொண்டது ஒருபுறமிருக்க, குஜராத்தில் இன்றுள்ள நிலைமையில் தேர்தல் நடத்துவது சிறுபான்மையினருக்கு அநீதி இழைப்பதாகும். கோத்ரா சம்பவங்களைத் தொடர்ந்து நடந்த வன்முறையில், பெரும்பாலான மைனாரிட்டி வகுப்பினர் இடம் பெயர்ந்து விட்டனர். உடல் காயங்களும் மனக்காயங்களும் ஆறாமல் இன்னமும் அஞ்சி அஞ்சி வாழ்கின்றனர். நிவாரண முகாம்கள் இன்னும் முற்றிலுமாக மூடியபாடில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேர்தல் நடத்தலாகாது என எதிர்க்கட்சிகள் வாதிட்டால், 'ஜகன்னாத் யாத்திரையை குஜராத்தில் அமைதியாக நடத்திக் காட்டவில்லையா? அதே போல் தேர்தலையும்



நடத்துவோம். மாநிலத்தில் அமைதி திரும்பிவிட்டது' என்று பி.ஜே.பி. சார்பினர் வாதிடுகிறார்கள்.

அடிப்படைவாதச் சார்புள்ள அரசின் பாதுகாப்புடன் போலீஸும் துணை நிற்க, யாத்திரை நடத்த முடியும்; ஆனால் தேர்தல் நடத்தி மக்கள் – குறிப்பாக முஸ்லிம்கள் – அச்சமின்றி வாக்களிக்க இந்தச் சூழ்நிலையில் முடியுமா...! நிச்சயம் அது நடவாது என்பதால் குஜராத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவர வேண்டும் என்கின்றன எதிர்க்கட்சிகள். 'கூடாது, அதை அனுமதிக்க முடியாது' என்று சொல்லிவிட்டார் அத்வானி.

தேர்தல் நடத்த தேர்தல் கமிஷன் அனுமதிக்குமா அனுமதிக்காதா?...

அவ்வாறு அனுமதி மறுக்க கமிஷனுக்கு அதிகாரம் உள்ளதா இல்லையா?...

குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவர அரசியல் சாசனம் இடங்கொடுக்குமா கொடாதா..?

– இது போன்ற சட்டச் சிக்கல்களில் புகுந்து விடை தேடும் முன், தார்மிகக் கேள்விகளுக்கு விடைசொல்லியாக வேண்டும்:

மோடி எதற்காக இப்போது ராஜினமாமா செய்தார்?...

தாம் தவறு செய்திருந்தால் மன்னிக்கும்படி கேட்பவர், ஏன் அதை முன்னமே செய்யவில்லை?

சிறுபான்மையினர் அஞ்சி வாக்களிக்காமலே இருந்துவிட்டால் ஹிந்து வோட்டுகளைப் பெற்று மீண்டும் பதவிக்கு வந்துவிடலாம் என்று மோடி கணக்கு போடுவதை தேசமே வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மாயிருப்பதா?...

குஜராத்தில் தேர்தல் நடத்துவதை தேர்தல் கமிஷன் ஒத்திப்போடுவது தவறான முன்னுதாரண மாகிவிடும் என்று வாதாடும் மோடி, உரிய காலத்துக்கு எட்டு மாதம் முன்பே தக்க காரணம் இன்றி சட்டசபையைக் கலைத்து, தேர்தல் சிபாரிசு செய்வதன் மூலம் ஒரு மிகத் தவறான முன்னுதாரணம் படைக்கவில்லையா...?

மெஜாரிட்டி பலம் இருக்கும்போது, இவர் முன்பே ராஜினாமா செய்து வேறொருவரை முதல்வர் பதவி ஏற்கச் செய்திருக்கலாமே!

– குஜராத் முதல்வர் தமது மனச்சாட்சியைக் கேட்டு பதில் சொல்லட்டும் – அவருக்கு மனச்சாட்சி என்பதாக ஒன்று இருக்குமானால்! ○

'சினி பூ'



வாரம் ஒரு சின்ன 'பூ' பற்றி (அதாங்க 'பு'!) சினிமா நட்சத்திரங்கள் இங்கே பேசுவார்கள். இந்த வாரம் தலைப்பு பற்றி பேசுகிறார் கே. பாக்யராஜ்.



"சுவரில்லாத சித்திரங்கள்', 'ஒரு கை ஓசை' ஆகிய என்னுடைய சினிமா தலைப்புகள் நெகட்டிவ் தலைப்புகள் என்று விமர்சனம் செய்யப்பட்டன. கதையைப் பற்றி முடிவு செய்வதற்குள் முடிவு செய்யப்பட்ட பெயர் 'தூறல் நின்னு போச்சு', அசோக்குமார் காமிராமேன் என்று முடிவு செய்யப்பட்டதும், அழகான மலைப் பிரதேசங்களில் படப்பிடிப்பு, மாடர்ன் கதைக்களம் என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டது. பெயரும் 'டார்லிங்... டார்லிங்... டார்லிங்' என்று வைத்து விட்டோம். டைட்டில் மிகவும் பிடித்துவிட்டது என்பதற்காக வைத்தது 'மௌன கீதங்கள்'. 'சுந்தரகாண்டத்திற்கு முதலில் வைத்த பெயர் 'ஸார் ஐ லவ் யூ'. 'நீ சிரித்தால் நான் சிரிப்பேன்' என்ற தலைப்பு வைத்து சினிமாவுக்குக் கதை உருவாக்கினேன். சில காலத்துக்குப் பிறகு, எனக்கே அந்தப் பெயர் பிடிக்காமல் போய்விட்டது.

'பாக்யா' என்று பத்திரிகைக்குப் பெயர் வைத்தது எனது பெயரோடு தொடர்பு படுத்தித்தான். அதில் வரும் கதைகளுக்கு என் உதவியாசிரியர்களே அவசியம் ஏற்பட்டால் தலைப்புகளை மாற்றுவார்கள். பெரும்பாலும் கதை விஷயத்தில் தலையிடுவது கிடையாது.

நான் மிகவும் அக்கறை எடுத்து சிந்தனை செய்து கேள்வி பதில் பகுதிக்குப் பொருத்தமான தலைப்பை வைப்பேன். அது பெரும்பாலும் வாசகரின் ஒரு கேள்வியாகவே இருக்கும். அவசியமேற்பட்டால், கேள்வியின் பொருள் மாறாமல் கொஞ்சம் கவர்ச்சியாக கேள்வியை மாற்றுவேன். போஸ்டர்களில் பெரும்பாலும் இந்தக் கேள்வி - தலைப்புதான் இடம் பெறும்.

சிறிய வயதில் என் அம்மா புடைவைத் தலைப்பைவிட, பாட்டி, அத்தை ஆகியோருடைய தலைப்பைப் பிடித்து வளைய வந்ததுதான் அதிகம். பள்ளி விடுமுறையின் போதுதான் அம்மாவைப் பார்ப்பேன். என்னுடைய 'முந்தானை முடிச்சு' புடைவை தலைப்போடு தொடர்பு கொண்ட பெயர்தானே! புடைவைத் தலைப்புகளால் பல தலைநகர்கள் கவிழ்ந்திருக்கின்றன; தலைவர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். இத்தோடு நிறுத்திக் கொள்வோம்.

ஆமா, இந்தக் கட்டுரைக்கு என்ன தலைப்பு?

— கௌசி

படம்: ராஜன்



நெஞ்சில் நிலைத்த கோமல்...



• விஜயலட்சுமி



• கோமல்



• செந்தில்நாதன்

உண்மையான நட்பைத் தெரிவிக்கும் அன்பு ததும்புகிற விழிகள். வெள்ளிக் கம்பியாய்க் கழுத்து வரை நீண்ட தலைமுடி. கதர் வேட்டி. சற்று இறுக்கமான கதர் ஜிப்பா. இப்போதும் அவர் பிரியத்தை நினைக்கிறபோது, கண்பனிக்கச் செய்கிறார் கோமல். என்ன பெருந்தன்மை! அடுத்தவர் கொள்கைகளுக்கும் சம அந்தஸ்து கொடுக்கிற வகையிலான என்ன நியாய உணர்ச்சி! பல உயர்ந்த நற்குணங்களின் அபூர்வமான கலவை அவர்.

ஆனால் வியாதி யாரை விட்டது! பரமஹம்சருக்கும், ரமணருக்கும், ராம்சுரத்குமாருக்கும் வந்த அதே வியாதி. நண்பர்களிடமெல்லாம் தன் வியாதியைச் சொல்லாமல் ஒளித்தே வாழ்ந்தார். அவர் இறப்பதற்குச் சில மாதங்கள் முன் தான் அவர் நோய்வாய்ப்பட்டிருப்பதே மற்றவர்களுக்குத் தெரியும். சுபமங்களாவின் துணையாசிரியர்களான கீதப்பிரியன், வண்ண நிலவன், இளைய பாரதி போன்றோருக்குக்கூடத் தாமதமாகத்தான் அந்தச் செய்தி தெரியும் என அறிந்தபோது திகைத்தேன். நோயாளியாகத் தம்மைக் காட்டிக் கொள்ளக் கோமல் இறுதி வரை விரும்பவில்லை.

கதிர், திரைப்பட நூற்றாண்டுச் சிறப்பிதழுக்கு அவரிடம் ஒரு கட்டுரை கேட்டேன். புதல்வி தாரிணியிடம் டிக்டேட் செய்து அனுப்பிவிடுவதாகச் சொன்னார். (அனுப்பிவிட்டார்.) ஏன் எழுதாமல் டிக்டேட் செய்ய வேண்டும் என விசாரித்தபோது தான் தகவல் தெரிந்தது, எழுதச் சக்தியில்லாமல் அவர் படுத்திருக்கிறார் என்று. அவர் வசித்த போஸ்டல் காலனிக்கு அதிர்ச்சியோடு விரைந்தேன். அவர் மனைவி திருமதி விஜயலட்சுமி, கண்ணைத் துடைத்துக்கொண்டு கோமல் படுத்திருந்த அறையைக் காட்டினார். உள்ளே சென்றேன். அரை மணி இலக்கிய மயமான பேச்சு. பாம்பு கடித்த நளமகாராஜன் மாதிரி அவர் உடல், நிறம் மங்கிக் கறுத்திருந்தது. அவரது கடைசிக் கட்டுரையை வெளியிட்டு அவர் எழுத்து வீச்சின் தாக்கத்தைக் கதிர் புலப்படுத்திக் கொண்டிருந்தது. அதேநேரம் மருத்துவரீதியான கதிர் வீச்சின் தாக்கத்தை அவர் உடல் புலப்படுத்திக் கொண்டிருந்தது. பார்த்துப் பார்த்து நெக்குருகினேன். அவர் உற்சாகமாகத்தான் பேசினார். விடைபெற்று வெளியே வந்தேன். மீண்டும் அவர் தம் உடல் வேதனையை உணரத் தொடங்கினார். 'ராமா ராமா!' என வலி தாளாமல் அவர் அரற்றிய குரல் செவிகளில் மோதி நெஞ்சைக் கிழித்தது.

கோமல் காலமானபோது சென்னை போஸ்டல் காலனி ஓர் அரை சென்டிமீட்டர் தாழ்ந்திருக்கக் கூடும். அவ்வளவு கூட்டம். சி.சு. செல்லப்பா உள்பட எண்ணற்ற இலக்கியவாதிகள் குழுமினார்கள். திரைப் பிரமுகர்களில் ஒருவர் பாக்கி இல்லை. பொதுவுடைமைக் கட்சி இளைஞர்கள் ஏராளம். சத்தியமூர்த்தியும் ரவியும் மட்டுமா கோமலின்

திருப்பூர் கிருஷ்ணன்

புதல்வர்கள்! வந்த இளைஞர்களெல்லாம் அவர் மீது தந்தைப் பாசம் வைத்திருந்த பிள்ளைகளே அல்லவா! மலர் மாலைகளால் கூடம் நிறைந்தது. பொதுவுடைமைவாதியான கோமல், உறைந்துபோன இறுதிப் புன்முறுவலோடு கிடத்தப் பட்டிருந்தார். வழக்கறிஞர் செந்தில்நாதன் உள்படப் பலர் 'கோமல் புகழ் வாழ்க!' என முழக்கமிட்டு முன் செல்ல, உடல் சென்ற பாதையில் எல்லோரும் வழி நடந்தோம். விருப்பு வெறுப்பின்றி இலக்கியத்தின் எல்லாச் சார்பையும் அங்கீகரித்த கலைத்துறை சார்ந்த ஓர் இலக்கியவாதியின் பொன்னுடல் மயானத்தில் எரியூட்டப்பட்டது. ஒரு சகாப்தம் நிறைவடைந்தது.



• வண்ணநிலவன்

கோமல் காலமாவதற்குச் சில ஆண்டுகள் முன் என்.ஆர்.தாசன் காலமானார். தாசனுக்கான இரங்கல் கூட்டத்தில், என் நண்பர் தாசன் பற்றி ஓர் அஞ்சலிக் கட்டுரை வாசித்தேன். அன்று சக பேச்சாளராக கோமல் மேடையில் வீற்றிருந்தார். வாசித்த கட்டுரையைக் கையோடு வாங்கிச் சென்றுவிட்டார். மறுமாதம் சுபமங்களாவில் அந்தக் கட்டுரை இடம் பெற்றது. 'தி.ஜா. நாவல்களில் பெண்கள்' என்றொரு கட்டுரை. இலக்கியச் சிந்தனைக் கூட்டமொன்றில் வாசித்தேன். அங்கும் கோமல் வந்திருந்தார். என் கட்டுரையை உரிமையோடு கையிலிருந்து பறித்துக்கொண்டார். சுபமங்களாவின் அடுத்த இதழில் பிரசுரித்தார். நான் சுபமங்களாவில் எழுதிய பல படைப்புகள் இப்படிப் பிரசுரமானவையே. என் எழுத்தின் மேல் அவர் செலுத்திய அன்பும் என்னிடம் அவர் எடுத்துக்கொண்ட உரிமையும் நான் விரும்பி ரசித்து மகிழ்ந்தவை. கூட்டங்களைக் கூர்மையாகக் கவனித்துக்கொண்டிருந்தவர்களில் கோமல் ஒருவர். நாகநந்தியின் பாரதி ஆய்வுச் சொற்பொழிவுகளைச் சீதாலட்சுமி விஸ்வநாத் மூலம் அவர் தொகுத்து வெளியிட்டது குறிப்பிடத்தக்க இலக்கிய பணி.

கல்கி பொன்விழா நாடகப் போட்டி. நானும் கோமலும் நீதிபதிகள். கல்கி ராஜேந்திரன் இல்லத்தில் ஒருநாள் கூடினோம். இறுதிப் பரிசிலனை வரை வந்திருந்த நாடகங்களைப் படித்து மதிப்பெண் போட்டோம். தனித்தனியே வாசித்துப் போட்ட மதிப்பெண்கள். அதிர்ஷ்டவசமாக நான் தேர்ந்தெடுத்த மூன்று நாடகங்களையே கோமலும் தேர்ந்தெடுத்திருந்தார். ஆனால் நான் முதல் பரிசுக்குக் கருதிய நாடகத்தைக் கோமல் இரண்டாம் பரிசுக்கும், நான் இரண்டாம் பரிசுக்குக் கருதிய நாடகத்தைக் கோமல் முதல் பரிசுக்கும் தேர்வு செய்திருந்தார். 'இளைஞர்கள் கருத்துத்தான் சரியாக இருக்கும். திருப்பூர் சொன்னபடியே முடிவெடுங்கள்!' என்று கல்கி ஆசிரியரிடம் சொன்னார் கோமல். 'இல்லை. கோமல் கருத்துத்தான் சரியாக இருக்கும். அதன்படி முடிவெடுங்கள்!' என்றேன் நான். இப்போது என்ன செய்வது? நானே ஒரு யோசனை சொன்னேன். நீதிபதிகளில் கல்கி ஆசிரியரும் ஒருவர். அவ்வகையில் அவர் கருத்துக்கும் இடம் உண்டே! அவர் எங்களில் யார் கருத்தைச் சார்ந்திருக்கிறாரோ அவருக்கு முதல் பரிசு வழங்கலாம் என்றேன். இது ஒப்புக் கொள்ளக் கூடிய நியாயமான ஏற்பாடாகத் தெரிந்தது. பிறகு நானே கல்கி ஆசிரியரிடம் கோமல் கருத்துக்கே அவர் வாக்களிக்க வேண்டும் என்று விண்ணப்பம் வைத்தேன்! அவரும் கோமலும் சிரித்தவாறே உடன்பட்டார்கள். கோமல் கருத்துப்படி முடிவு வெளிவந்ததில் எனக்கு அளவற்ற திருப்தி.

(தொடரும்)



வைவஸ்வத முனியின் மகனான, சன்யாதி மகாராஜா, அடிக்கடி வேட்டையாடச் செல்வது வழக்கம். அப்படியொரு முறை அவர் காட்டுக்குச் சென்றபோது, அவரது மகள் சுகன்யா, தன்னையும் அழைத்துப் போகச் சொல்லி அடம் பிடித்தாள். செல்ல மகளின் கோரிக்கையைத் தட்டிக் கழிக்க இயலாத, மகாராஜா அவ்வாறே செய்தார்.

காட்டில் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்த சுகன்யா, ஓர் எறும்புப் புற்றுக்குள் விளையாட்டாக எட்டிப் பார்த்தாள். இருண்டு காணப்பட்ட அந்த புற்றுக்குள்ளே, கண்ணைப் பறிக்கும் இரண்டு வெளிச்சத் துண்டுகளைப் பார்த்து அதிசயப்பட்டாள். நீண்ட குச்சியை எடுத்து, புற்றுக்குள் விட்டு குத்திப் பார்த்தாள். குச்சியின் முனையில் ரத்தம்! பயந்து போன சுகன்யா, அழுதுகொண்டே ஓடி வந்து விட்டாள்.



இதற்கிடையே, வேட்டையில் ஈடுபட்டிருந்த மகாராஜாவுக்கும், அவரது பரிவாரத்துக்கும் திடீரென்று மூத்திர பந்தம் ஏற்பட்டது. 'இது ஏதோ தெய்வ குற்றம்' என்று சந்தேகப்பட்டனர். பாம்புப் புற்றுக்குள் ரத்தம் வடிந்த விஷயத்தை சுகன்யா சொன்னதும், சன்யாதி மகாராஜாவின் ஆட்கள் பாம்புப்புற்றை அகற்றிப் பார்த்தார்கள். அங்கே... 'ஷ்யவனர்' என்ற வயது முதிர்ந்த மகரிஷி தியானத்தில் இருந்ததையும், அவரது ஒளி பொருந்திய கண்கள் குத்தப்பட்டு, குருடாகி இருந்ததையும் கண்டு பதைத்தனர். தமது மகளால் இழைக்கப்பட்ட இந்தக் கொடூரச் செயலுக்கு, பிராயச்சித்தமாக, சுகன்யாவையே, ஷ்யவனருக்கு மணம் முடித்து வைத்தார் மகாராஜா. அவளும் ஷ்யவனரை, ரிஷிபதியாக ஏற்று, சகலவிதமான பணிவிடைகளையும் மனம் கோணாமல் செய்து வந்தாள்.

சுகன்யாவின் பதிபக்தியைக் கண்டு மனமிரங்கிய அஷ்வினி தேவர்கள், ஷ்யவனருக்கு இளமையைத் திரும்பச் செய்யும் சிகிச்சை தர முன்வந்தனர். நெல்லிக்காயை அடிப்படையாகக் கொண்டு, அரிய மூலிகைகள் கலந்த தேல மருந்தைத் தயாரித்து, ஷ்யவனருக்குத் தந்தார்கள். ஒரு மண்டல காலம் முடிந்ததும், சித்தர் குளத்தில் மூழ்கி வெளியே வந்த ஷ்யவனர் இளமையும், அழகும் கொண்ட இளைஞராக மாறியிருந்தது கண்டு சுகன்யா மனமகிழ்ந்தாள்.

சில காலம் கழித்து, தம் மகளைக் காண வந்த சன்யாதி மகாராஜா, சுகன்யா யாரோ ஓர் இளைஞனுடன் நெருக்கமாக இருப்பதை பார்த்து சினங்கொண்டார். உடனே ஷ்யவனரும், சுகன்யாவும் நடந்ததையெல்லாம் சொல்லி, மகாராஜாவின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றனர்.

ஷ்யவன முனிவர், மிகப் பெரிய யாகம் செய்து,



டாக்டர் எல். மகாதேவன்

தேவ மருந்து



அஷ்வினி தேவர்களுக்கு வந்த னம் தெரிவித்தார்.

இளமையை மீட்டுத் தரும் லேகியத்துக்கு ஷ்யவனரின் பெயர் சூட்டப்பட்டு, 'ஷ்யவன பிராஷ்' ஆன கதை இதுதான். இனி நெல்லிக்காயைப் பார்க்கும்போதெல்லாம், அதை முதன் முதலில் சாப்பிட்டுப் பயன் பெற்ற ஷ்யவனர் கதையும், அதை நமக்குத் தந்த ஆயுர் வேதத்தின் சிறப்பும் நினைவுக்கு வரும்தானே!

ஆயுர்வேதம்! அதன் தொன் மையும் பழைமையும் தெய்வீக மானது.

பாரத தேசத்தின் பொக்கிஷ மான இந்த ஆயுர்வேதம் மிகவும் விஞ்ஞானபூர்வமானது.

பாவம், ராகம், தாளம் என்ற மூன்றும் சேர்ந்து 'பாரதம்' ஆனது போல, ஆயுர்வேதத்தில் வாத, பித்த, கபத்தைச் சொல் கிறார்கள்.

பாவம் என்றால் உணர்ச்சியின் வெளிப்பாடு. (expression). இது கபத்தைக் குறிக் கும். ராகம் என்பது உணர்ச்சி (emotion) இது பித்தத்தைக் குறிக் கும். தாளம் என்பது ரிதம்... (rhythm) வாதத்தைக் குறிக்கும்.

மனிதனுடைய வாழ்க்கையே வாத, பித்த, கபத்தினால் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்த்தும் சாஸ்திரம் தான் ஆயுர்வேதம்.

ஆதி காலத்தில் அதர்வண ரிக் வேதங்கள், மருத்துவப் பகுதிகளை வைத்து தம்மை மேம் படுத்திக் கொண்ட சிகிச்சைமுறையே ஆயுர்வேதம்.

'ஆயுர்வேதம்' என்றால் வாழ்க்கை பற்றிய அறிவு என்று அர்த்தம். ஆயுர் - வாழ்க்கை; வேதம் - மெய்யறிவு!

வாழ்க்கைக்கும், வாழ்வின் உயர்ந்த லட்சியங்களை அடை வதற்கும் ஒரு மனிதனுக்கு என்ன தேவை...? மிக முக்கியமாக ஆரோக்கியமும், ஆயுளும்தானே! பழங்காலத்தில் வாழ்ந்த ரிஷிகள், தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் (அறம், பொருள், இன்பம், வீடு) எனப்படும், நான்கு பேறுகளை அடைவதற்கு ஆரோக்கியமான உடல்நிலை, மனோநிலை மிகவும் அவசியம் என உணர்ந்தே இம் மருத்துவக் கலையை மேம்படுத்தியிருக் கிறார்கள்.

ஆரோக்யம் என்றால் என்ன?

ஆரோக்யஸ்ய **பாவஹ!** (அதாவது ரோகம் இல்லாத தன்மை, ஆரோக்ய பாவஹ. நோயற்ற தன்மையை ஆயுர் வேதம் ஸ்வஸ்த்தம் என்று சொல்கிறது. ஸ்வஸ்த்தம் என்றால் தன்னிலையை உணர்ந்திருத்தல் என்று அர்த்தம். தன்னை உணர உதவும் ஆன்மிக வாழ்க்கைக்கும், ஆன்ம வளர்ச்சிக்கும் ஆரோக்கியமான உடல்நிலையே மூல காரணம் என்பதை ரிஷிகள் உணர்ந்தே, பலவிதமான சிகிச்சை முறைகளைக் கண்டறிந்தனர்.

எத்தனையோ மாமுனிகள் இருக்க, ஆயுர்வேதத்தைத் தேவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்த தேவரிஷி யாராக இருக்கும்? தெரிந்தால் எழுதிப் போடுங்கள். சரியான விடை எழுதும் ஒருவருக்குப் பரிசு உண்டு...

(தொடரும்)

ஆஹா, ஆயுர்வேத தொடர் - 1



சினிமா வக்கீல்!

இயக்குனர் கஸ்தூரி ராஜாவின் 'வாசுகி' படப்பிடிப்பு. சென்னை ஆல்பர்ட் தியேட்டரில் நடந்துகொண்டிருக்கிறது குரூப் டான்ஸ். ஆடிக் கொண்டிருந்த ஒருவர் மட்டும் கொஞ்சம் டென்ஷனோடு ஆடிக் கொண்டிருந்ததுபோல் தோன்றியது மாஸ்டருக்கு. ப்ரேக்கின்போது "என்ன தம்பி... என்னாச்சு... ரொம்ப கவலையா இருக்கீங்க" என்று கேட்க, "இன்றைக்குச் சட்டப்படிப்பு நுழைவுத் தேர்வு எனக்கு!" என்று தயங்கி பதில் சொல்கிறார் அந்த இளைஞர். "என்னப்பா... இதை முதலிலேயே சொல்லக் கூடாதா?'' டைரக்டரிடம், மாஸ்டர் விஷயத்தைச் சொல்ல, அவர் 100 ரூபாயைக் கொடுத்து ஆட்டோவில் விரைந்து செல்லச் சொல்கிறார். வியர்க்க, விறுவிறுக்க, மேக் அப் மற்றும் அதே காஸ்டியூமோடு கல்லூரிக்குச் சென்று தேர்வு எழுதி சட்டக் கல்லூரியில் இடம் பிடித்தார் அந்த இளைஞர்.

நடிகை ரோஜா வழக்கில் ஆஜராகும் வழக்கறிஞர் சிவாதான் அந்த இளைஞர். ரோஜாவுக்கு மட்டுமல்ல; பாரதிராஜா, ஆர்.சி. சக்தி, சுரேஷ்கிருஷ்ணா மற்றும் பல நடிகைகளுக்கும் இவர்தான் வழக்கறிஞர்.

சோழவந்தான் சுந்தர்ராஜ சேர்வையை உங்களுக்குத் தெரியுமா? (பட்டிக்காடா, பட்டணமா படத்தில் சிவாஜிகூட அவரது பெயரை உச்சரிப்பார்) அந்தச் சுந்தர்ராஜ சேர்வையின் வாரிசுகளில் ஒருவர்தான் சிவா. மதுரை வக்ப் போர்டு கல்லூரியில் பி.ஏ படிக்கும்போது 'அலைகள் ஓய்வதில்லை' படம் பார்த்து, பாரதிராஜா பைத்தியம் பிடித்து, சினிமா ஆசையில் சென்னைக்கு ஓடி வந்துவிட்டவர் சிவா. அதற்கு முன் ஒருமுறை காலில் சக்கரம் கட்டிக் கொண்டும் சென்னைக்கு வந்திருக்கிறார் அவர். ஆம்! சிவாவுக்கு ரோலர் ஸ்கேட்டிங் தெரியும்!

"வழக்கமாகச் சினிமாத் துறையில் சேரத் துடித்து சென்னை வரும் இளைஞர்கள் என்னென்ன சவால்களைச் சந்திப்பார்களோ அத்தனையும் என் வாழ்க்கையிலும் உண்டு" என்று ஆரம்பித்த சிவா, "நடிகர் சங்கத்தில் கலா மாஸ்டர் நடனப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்தேன். ஏராளமான படங்களில் குரூப் டான்ஸில் தலை காட்டும் வாய்ப்பு. வயிற்றுப் பிரச்னை தீர்ந்தது. நடிகர் சங்கத் தலைவராக இருந்த ராதா ரவியின் பழக்கம் ஏற்படவே தக்க வழிகாட்டுதல் உருவானது. நடிப்புக் கல்லூரியில் சேர்ந்து



நடிப்புக் கலையையும் பயின்றேன்; அதை முடித்தவுடன் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்ட மேற்படிப்பு; பின்னர்தான் சட்டக்கல்லூரி" என்று சொல்கிறார் சிவா.

உயர்நீதிமன்ற வட்டாரத்தில் இவரை 'சினிமா வக்கீல்' என்றுதான் அழைக்கிறார்கள்.

படைப்பாளி - ஃபெப்ஸி தகராறின்போது பாலச்சந்தர் மீது வழக்கு போட்டார் சிவா. அப்போது கோர்ட்டில் பரபரப்பான நீண்டவாதத்தின்போது, நீதிபதி அசோக் குமார், "சிவா ஒரு டான்ஸ் போடுங்க... கொஞ்சம் ரிலாக்ஸ் ஆகலாம்" என்றாராம் தமாஷாக!

சினிமா கலைஞர்களுக்காக 'தமிழ்நாடு திரைப்படத்துறை சட்ட ஆலோசனை மையம்' என்ற அமைப்பு ஒன்றைத் துவக்க இருக்கிறாராம் சிவா.

சந்திப்பு: ப்ரியன்
படம்: ராஜன்


எக்ஸ்க்யூஸ் மீ... பூமிக்குப் போகணும் கொஞ்சம் லிஃப்ட் கிடைக்குமா?
ஏலேய் மொக்கராசு! நான் சனிக்கிரகத்துலயிருந்து சுடலை பேசுதேன். நிலவுல எப்படியிருக்கே... நம்ம செவலை கன்னு போட்டிருச்சா?

ஏலேய் மொக்கராசு!



- ஏக்ஜி



இருபது ரூபாயால்



"அப்பா, மதர்டங்க் அப்படின்னு போட்டிருக்கே, என்ன எழுதணும்?" விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கொண்டிருந்த மகன் தந்தையிடம் கேட்டான்.


அவர் 'ரொம்ப நீளம்னு போடு' என்றாராம். எப்போதும் பேசிக்கொண்டே இருக்கும் அவரது மனைவியை நினைத்து எரிச்சலோடு.

அப்பாவுக்கும் பையன்களுக்கும் எப்போதுமே சிறு சண்டைகள் ஏற்படுவது வழக்கம். அதிலும் அப்பாவிடத்தில் வீட்டுக்கணக்கு (Home work) படிக்கும் பையன்கள் படும்பாடு சொல்ல முடியாது.

ஒரு பையன் அப்பாவிடத்தில் கணக்குச் சொல்லித் தருமாறு கேட்டான்.

அவருக்கு அந்தக் கணக்குச் சரியாகத் தெரியாது. உடனே கோபத்தோடு 'எங்கிட்டேயே கணக்குக் கேக்கறியா? அந்த அளவுக்குத் துணிச்சல் வந்திருச்சா' என்று அவனை நாலு மொத்து மொத்தினாராம்.

வீட்டு வாசலில் அப்பாவிடம் பையன் பாடம் படித்துக்கொண்டிருந்தான். அந்த நேரம் 'சென்சஸ்' எடுக்க வந்த ஒருவர் அப்பாவிடம் பேர் கேட்டார். உடனே அவர் தன் பெயரைச் சொன்னார்.



'உங்க பையன் பேரு?'

'அவன் பேரு சனியன்' என்றார் கோபக் குரலில். அதற்குள் உள்ளே இருந்த அவர் மனைவி, 'உங்க பேரைக் கேக்கலை; பையன் பேரைக் கேக்கிறாங்க' என்று தன் கோபத்தைக் காட்ட, சென்சஸ் அதிகாரி குழம்பிப் போய்விட்டாராம். "இந்த வீட்ல மொத்தம் எத்தனைச் சனியன்கள் என்று."

கடைவீதிக்குப் பையனோடு சென்ற தகப்பனார் கேட்டார். "உனக்கு இன்னொரு ஐஸ்கிரீம் வேணுமா?"

உடனே பையன் ஆச்சரியத்தோடு "நீ இன்னும் ஒண்ணுகூட வாங்கித் தரலையே" என்றான்.

உடனே அப்பாவும், "பொய் சொல்லாதே நீ ஒண்ணாங்கிளாஸ் படிச்சப்ப ஒண்ணு வாங்கிக் கொடுத்தேனா... இல்லையா, சொல்லு?" என்றாராம்.

பெரும்பாலும் பதினெட்டு, இருபது வயது இளைஞர்களுக்கும் அப்பாமார்களுக்கும் சண்டை அதிகமாக வருவது வழக்கம்.

ஒரு வீட்டில் அப்பா மகனைப் பார்த்து

இழந்த தாத்தா...!

தினந்தோறும், 'டேய் சோம்பேறி உன் வயசில நான் வேலைக்கு வந்திட்டேன் தெரியுமா?' என்று சொல்லிக்கொண்டே இருப்பாராம். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பையன் ஒருநாள் அப்பாவைக் கூப்பிட்டான். 'இந்தாப் பாருங்க.... என் வயசில உங்களுக்குக் கல்யாணம் ஆயிருச்சில்ல... முதல்ல அதைச் செய்யுங்க... அப்புறம் பேசுங்க" என்றானாம்.

கல்லூரியில் ரெண்டு பையன்கள் பேசிக் கொண்டார்கள்.

"டேய்... எங்கப்பா சினிமாவுக்குப் போக காசே தர மாட்டேங்கிறார்டா" என்றான் ஒருவன்.

உடனே மற்றவன், "நீ உங்கப்பனை நல்லாக் கண்டிச்சு வளர்க்கணும்டா" என்றான் கவலையோடு.

இதேபோல் கல்லூரி விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் பாசத்தோடு அப்பாவுக்குக் கடிதம் எழுதுவார்கள்.

"அன்புள்ள அப்பாவுக்கு
நலமா?
என் நலத்திற்குப் பணம் அனுப்பவும்."

திருக்குறள் போல் ரெண்டு வரியில் கடிதம் இருக்கும்.

சில இளைஞர்கள் எந்த விஷயத்தையும் மிகச் சாமர்த்தியமாகப் பேசிச் சமாளிப்பார்கள்.

ஓர் இளைஞன் ஓவியக் கண்காட்சி ஒன்றிற்குப் போனான். அங்கு பலவிதமான ஓவியங்கள் வரையப்பட்டு விற்பனைக்கு வைத்திருந்தார்கள். பார்த்துக்கொண்டே வந்த இளைஞன் ஓர் ஓவியத்தைப் பார்த்ததும் அப்படியே நின்று விட்டான். ஒரு வயதான பெரியவர் அரசனைப் போன்ற தோரணையில் பெரிய மீசையோடு, கம்பீரமாக ஓர் ஆசனத்தில் கால்மேல் கால் போட்டு அமர்ந்திருந்தார்.

அதைப் பார்த்த இளைஞன் அந்த ஓவியத்தை விலைக்கு வாங்க நினைத்து விலை எவ்வளவு? என்று விசாரித்தான்.

'300 ரூபாய்' என்றார்கள்.

இளைஞனிடம் 280 ரூபாய்தான் இருந்தது. கடன் தருவதில்லை என்று சொல்லி விட்டார்கள். உடனே இளைஞனும் வருத்தத்தோடு வீட்டிற்குத் திரும்பினான். சில நாட்கள் கழித்து 300 ரூபாயோடு ஓவியக் கண்காட்சிக்குப் போய் அந்தப் படத்தைத் தேடினான். படம் இல்லை. இளைஞனுக்கு மிகுந்த ஏமாற்றமாக இருந்தது.



மறுநாள் தன்னுடைய நண்பன் ஒருவனுடைய வீட்டிற்குப் போனான். அங்கே அந்தப் பெரியவருடைய படம் மாட்டப் பட்டிருந்தது. தன் நண்பனிடம் "இந்தப் படம் யாருடையது?" என்று கேட்டான்.

உடனே நண்பன்.

''இதுதான் எங்க ஜமீன் தாத்தா'' என்றான் பெருமையோடு.

உடனே இளைஞன் சொன்னான் "ம்... ஒரு 20 ரூபாய் மட்டும் அன்றைக்கு இருந்திருக்குமேயானால் இவர் எனக்குத் தாத்தா ஆகியிருப்பார்."

_ முனைவர் கு. ஞானசம்பந்தன் எழுதிய 'பரபரப்பு... சிரிசிரிப்பு' நூலிலிருந்து. அமுதா பதிப்பகம், A11/4 மீனாட்சி அபார்ட்மெண்ட்ஸ், அண்ணாநகர், மதுரை - 20



குறையொ

பகவான் நாராயணனுடைய பெருமையை வேத வான்மயம் நமக்கு முதலில் தெரிவிக்கின்றது. வேதத்தை அடியொற்றி, இதிகாச புராணங்கள் அவன் பெருமைகளை மேலும் நம் மனத்தில் நன்கு பதியும்படியாக விளக்கிக் காட்டுகின்றன. வேதத்தில் என்னென்ன சொல்லப்பட்டிருக்கின்றதோ, அவை அனைத்தையும் பகவான் தானே அவதார காலத்தில் நடத்திக் காட்டி, வேதார்த்தத்தை முழுமையாக்கினான். இந்த வேதம் மிகவும் உயர்ந்தது என்பதை எல்லோரும் உணர வேண்டும் என்பதற்காக, வேத மந்திரங்களையெல்லாம் தானே நடித்துக் காட்டினான்.

வேதத்தில் என்ன சொல்லப்படுகிறதோ அது மொத்தம் பகவத் சரித்திரத்தில் பிரசித்தம். ஆகையினாலே, இந்த விஷ்ணு ஸஹஸ்ரநாமம் என்று சொல்லும்படியான பகவானின் திருநாமம் மொத்தமே மந்திரங்கள்தான். மந்திரமே நாம ரூபமாக, நமக்கு பகவானை – ஏழை எளியவர்களான நாம் சொல்வதற்கு ஏற்ப – மஹரிஷிகள் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

பரமாத்மாவை 'சுத்தாத்மா, பாவனமானவன், பவித்ரமானவன்' என்கிறது வேதம்.

பகவானுடைய பாவன தன்மையினாலே, பவித்ர குணம் அவனிடம் விசேஷமாக இருப்பதனாலே, அவன் திருவடியைப் பற்றியவர்கள் அத்தனைப் பேருக்கும் பவித்ர தன்மையை _ பாவன தன்மையை உண்டாக்குகிறான் பரமாத்மா.

தன் திருவடியைப் பற்றக் கூடியவர்களையெல்லாம் பூதாத்மாவாக மாற்றி அனுக்கிரஹம் பண்ணுகிறான். அந்தப் பெருமை அவனிடத்தில் இருக்கிறதனாலே வேதமானது அவனை பூதாத்மா என்று சொல்கிறது.

பூதாத்மனே நம: என்று அர்ச்சனை பண்ணுகிறோம். எந்த தோஷமும் இல்லாதவன் என்று பொருள்.

அவனிடத்திலே இருக்கக் கூடிய குணங்கள் எல்லாமே இயல்பானவை.

ஔபாஸிகம் என்று சொல்வார்கள்.

ஔபாஸிகம் என்றால், இடையிலே வந்தேறிய குணங்கள். கொஞ்சம் நாள் இருக்கும்; அப்புறம் போய்விடும். இயற்கையாகவே பகவானிடத்திலே அமைந்திருக்கும்படியான நற்குணங்கள் அப்படிக் கிடையாது. சீரிய கல்யாண குணங்களுடைய கூட்டம் அவன். எல்லாம் சேர்ந்த ஒரு சமுத்திரம்.

இந்தக் குணங்களிலேயே ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜ: என்ற ஆறு குணங்கள் இருக்கிறது பாருங்கள் – இவற்றுக்குப் பகம் என்று பெயர். பகம் எனறால் பல பொருள் உண்டு. இங்கே இந்த ஆறு குணங்களை அது குறிக்கும்.

பகவான் என்று அழைக்கிறோம் _ பகவான் என்றால் என்ன அர்த்தம்...?

பகத்தை உடையவன் பகவான்.

குணத்தை உடையவன் குணவான்.

இந்த ஆறு குணங்கள் அவனிடத்தில் விசேஷமாக இருப்பதனால்தான் அவனைப் பரமாத்மா என்கிறோம்.

ஸஹஸ்ரநாமத்தின் அடுத்த நாமம் பரமாத்மா.

இயற்கையாகவே ஞான, பல, ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ் குணங்களை உடையவன் பரமாத்மா.

முதல் குணம் ஞானம்: இந்த ஞானம் இருப்பதனாலே எம்பெருமான் இருக்குமிடத்திலிருந்தே வைகுண்டத்திலிருந்தே சமஸ்தத்தையும் உணர்கிறான். அவனுக்குத் தெரியாதது என்பதே கிடையாது.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் ஞானத்துக்கு விஷயமாகாதவையே உலகில் கிடையாது.

நம்மால் அது முடியாது. நாம் அஞ்ஞானிகள்; அறிவற்றவர்கள். அறிவிலிகள்.

சர்வக்ஞன், சர்வவிது, சர்வத்தையும் உணர்ந்தவன் என்று பகவானைத்தான் உபநிஷத் கொண்டாடுகிறது.

விஜயனுடைய ரதத்திலே முன்னே பகவான் உட்கார்ந்திருக்கிறான். விஜயன் யுத்தம் பண்ண மாட்டேன் என்று முடிவு செய்து விடுகிறான். பகவானின் கிட்டே உட்கார்ந்தால் அவன் ஹிம்ஸை பண்ணப் போகிறானே என்று தூரத்தில் போய் உட்கார்ந்து கொள்கிறான்.

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

ன்றுயில்லை 1



பகவான் திரும்பி அர்ஜுனனின் அவல நிலையைப் பார்த்தான். அவனிடம் சென்றான்.

"அர்ஜுனா! நீ இப்படிப் பண்ணலாமா? யுத்தத்துக்காக தைரியமாய் வந்தாய். வந்த இடத்திலே இப்படி கோழையாய் இருக்கிறாயே நீ! கோழையாய் இருப்பாய் என்று நான் நினைக்கவில்லை. இந்த மாதிரி கோழையாய் இருந்தாயானால் உன் பெயர் நிலைக்காதே. பெயரிலுள்ள வெற்றி சித்திக்காதேயடா!'' என்றான்.

"விஜயன் என்ற பெயர் உனக்குப் போய் விடும். நாளையிலிருந்து யாரும் விஜயன் என்று உன்னைக் கூப்பிட மாட்டார்கள். விசேஷமாக ஜெயத்தோடு வரக்கூடியவன் அல்லவா நீ! எடுத்துக் கொண்ட காரியத்தில் - அது எது வாகவேனுமிருக்கட்டும் _ அபஜயம் தோல்வி உனக்கு உண்டோ! இப்படி இருந்தால் விஜயன் என்கிற பெயர் போய்விடும்'' என்றான் பகவான்.

''விஜயன் என்கிற பெயர் போனால் போகட்டும்!'' என்றான் அர்ஜுனன். "விஜயன் என்கிற பெயர் யாருக்கு வேண்டும். மீதி பெயர் கள் நிலைத்தால் போதும். விஜயன் என்ற பெயர், எனக்கு வேண்டியதில்லை" என்றான்.

"விஜயன் என்ற பெயர் வேண்டாமென் றால் விஜயம் கிட்டாதே!''

'விஜயமும் வேண்டியதில்லே'' என்றான் அர்ஜுனன்.

''விஜயம் வேண்டியதில்லை என்றால் ராஜ்ஜியம் எப்படிக் கிடைக்கும்!'' – பகவான் கேட்டான்.



''ராஜ்யமும் வேண்டியதில்லை..''

''ராஜ்யம் இல்லையானால் சந்தோஷம் எப்படியடா கிடைக்கும்?''

''சந்தோஷம் வேண்டியதில்லை.''

'நீ சொல்லிவிட்டால் ஆகிவிட்டதா? உன் னோடு கூட பிறந்த சகோதரர்கள்_ அவர்கள் சொல்ல வேண்டாமா?..''

''எங்களுக்குள் அபிப்ராய பேதம் வராது.. ஒருத்தர் சொன்னால், அதைத்தான் எல்லோ ரும் கேட்போம்.'' – தவறாகக் கூடப் பேசினான் அர்ஜுனன். ''பிச்சை எடுத்து நாங்கள் ஜீவிப் போம்!'' என்றான்.

அதற்கு மேலும் பகவான் அவனை விடவில்லை...

''உள்ளூர உனக்கு ராஜ்ஜியத்தில் இஷ்ட மில்லையா? உள்ளூர போகத்தில் உனக்கு இஷ்டமில்லையா...?'' என்று கேட்டான். ''ஆனந்தத்தில் இஷ்டமில்லையா?'' என்றான். ''உன் நெஞ்சைத் தொட்டு எனக்குச் சொல்'' என்றான்.

அதற்கு அர்ஜுனன் சொல்கிறான்:

''இவ்வளவு தூரம் நீ என்னைக் கேட்க வேண்டுமா...? நான் என்ன நினைக்கிறேன் என்று உனக்குத் தெரியாதா!''

இவ்வளவு பேச்சு பேசி வாதம் பண்ணிய அர்ஜுனன் கடைசியிலே என்ன சொன் னான்...? ''நான் என்ன நினைக்கிறேன் என்பது உனக்குத் தெரியாதா...?'' என்று கேட்டுவிட் டான் பகவானை!

அப்படியானால் என்ன அர்த்தம்..?

''சர்வக்ஞனான உன் ஞானத்துக்குப் புறம்பாக, உன்னுடைய ஞானத்துக்கு அகப் படாததை நான் நினைக்க முடியுமா...?'' என்கிறான்.

''நான் என்ன நினைப்பேன் என்று தெரிந்து தானே நீ கேட்கிறாய்!''

கோவிந்தா என்ற சொல்லிலே 'கோ'என்றால் இந்திரியங்கள் என்று பொருள். இந்திரியங்களுக்கெல்லாம் முதல் இந்திரியமாக நம் மனத்திலே உட்கார்ந்து கொண்டு **அவன்**

" 'பஸ்ஸெல்லாம் ஓடாது... ஸ்டிரைக்னு அறிவிச்சுட்டாங்களே... எப்படிப் பிழைப்பை நடத்தறதுன்னு அந்த ஆளு ரொம்ப நொந்து போயிட்டாரு..."

"யார் அவர்? டிரைவரா, கண்டக்டரா?"

"பிக்பாக்கெட் ஆசாமி!"

— அசோக் ராஜா

பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனுக்குச் சர்வமும் தெரியும்.

அப்படிப்பட்ட, ஞான சங்கோசமில்லாதவன் பகவான்.

வைகுண்டத்தில் இருந்தாலும் சரி, அவதார காலத்திலும் சரி... எத்தனை முறை என்ன அவதாரம் எடுத்தாலும் அவனுடைய ஞானத்துக்குக் குறைவில்லை.

இப்படிப்பட்ட ஞானம் என்கிற உயர்ந்த குணம் எம்பெருமானிடத்திலே இருக்கிறது.

பலம் அடுத்த குணம். என்ன பலம்..? எல்லாவற்றையும் தாங்கும்படியான பலம்.

பரமாத்மா– ஸ்ரீயஃப்பதியான நாராயணன், பிரும்மா முதலானவர்களெல்லாம் தோன்றும் முன்பே தோன்றியவன்.

மூலாதாரமாக இருக்கும்படியான ஒருவன் இருந்தான் என்கிறது உபநிஷத்.

"நான்முகனை நாராயணன் படைத்தான்" என்கிறார் ஆழ்வார்.

சமஸ்தத்துக்கும் மூலமாக இருக்கக் கூடியவன் எம்பெருமான். அப்படிப்பட்ட எம்பெருமான், ப்ருத்வி அனைத்தையும் தாங்குகிறான். தாங்கும்படியான பலம் அவனுக்கு இருக்கிறது. ப்ருத்வி என்றால் பூமி மட்டும் அல்ல... அந்தரிக்ஷம்; சமஸ்த லோகங்கள், அண்ட சராசரங்கள். இவை மொத்தத்தையும் தாங்குகிறான் அவன் என்று வியாக்யானம் பண்ணுகிறார்கள் ஆசார்யர்கள்.

'அப்படி அனைத்தையும் தாங்குகிற எம்பெருமானை உத்தேசித்து அல்லாமல் வேறு யாருக்காக – யார் பொருட்டு – இந்த ஹவிஸ் சமர்ப்பிக்கப்படுகிறது?' என்று வேதம் கேள்வி எழுப்புகிறது. சமஸ்தத்துக்கும் மூலாதாரமான அவன் பொருட்டுத்தான் எல்லாமே!

இதைத்தான் விஷ்ணுபுராணத்திலே சொல்லியிருக்கிறது. அபார பார ஸ்தோத்திரம் என்று பெயர். இதைத் தினமும் சொல்லக் கூடியவர்களுக்கு நல்ல ஞானம் பிறக்கும்.

அந்த ஸ்தோத்திரம் சொல்கிறது:

எல்லாவற்றைக் காட்டிலும் மேம்பட்டவன் அவன். மேம்பட்டது என்று சொல்லக் கூடியதைக் காட்டிலும் மேம்பட்டவன்.

பரமார்த்த ரூபி. அவன் ஒருவனே பரமார்த்தன். வேறு எதுவும் பரமார்த்தம் ஆகாது.

எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டும் அவற்றின் உள்ளேயும் வெளியேயும் இருக்கிறான். சமஸ்தத்துக்கும் மூலமாய், பெருமை மிக்கவனாய் விளங்குகிறான். அவனிடத்திலிருந்துதான் எல்லாமே தோன்றுகிறது.

அவனே பார் இடந்தான், பார் உமிழ்ந்தான், பார் கிடந்தான், பார் நடந்தான்! இந்த உலகை அவன் எதுதான் செய்யவில்லை! நடந்தான், கிடந்தான், தூக்கிக் கொண்டு நின்றான்... எல்லாவற்றுக்கும் அவனேதான் அதிகாரி.

நரசிம்மாவதாரத்தில் நிறைந்தான்; வாமனாவதாரத்தில் நடந்தான். சமஸ்தமும் அவனுடையது என்று காட்டிக் கொண்டு பிரகாசித்தான்.

இப்படிப்பட்ட பரமாத்மா நமக்கு ஆத்ம பலத்தைக் கொடுக்கிறான். எல்லா பலத்தையும் கொடுத்து தன்னையும் தாழ இட்டுக் கொள்கிறான்; இறங்கி வருகிறான்.

தன்னை நாமெல்லாம் அனுபவிக்கும்படியாக அவனே பண்ணுகிறான்.

அவனை எப்படி எடுத்தாள்வது என்று நமக்குத் தெரியாது. அவனை எப்படிப் பூஜை பண்ணுவது? எப்படி ஆராதிப்பது? என்ன சொன்னால் அவனுக்குத் திருப்தி ஏற்படும்...? – எப்படியெல்லாம் அவனைக் கையாளுவது என்பதே அஞ்ஞானத்தினால் நமக்குத் தெரியாது.

பகவான் என்ன பண்ணுகிறான்..? நமக்குப் பலத்தைக் கொடுத்து, தன்னை அனுபவிக்கும்படியாகப் பண்ணுகிறான். அவன் அப்படிச் செய்யவில்லையானால் அவன் கிட்டே நாம் போக முடியுமோ...!

அவன் உதவி மட்டும் இல்லாவிட்டால் பரம ஏழைக்கு இரண்டாயிரம் யானை கிடைத்த கதைதான்.

அது என்ன கதை என்பதைப் பார்ப்போமா...?

(வளரும்)

அமுதசுரபி

சிறுகதைப் போட்டி - 2002

'அமுதசுரபி'- தொடங்கி 55ஆண்டுக் காலத்தில் பலமுறை சிறுகதைப் போட்டி, நாவல் போட்டி, குறுநாவல் போட்டிகளை நடத்தி, பல சிறந்த எழுத்தாளர்களைத் தமிழ்நாட்டிற்கு அறிமுகப் படுத்தியிருக்கிறது. அதுபோல் 55ஆவது ஆண்டு விழாவைச் சிறப்பிக்கும் நோக்கத்தில் 2002ஆம் ஆண்டில் சிறுகதைப் போட்டியை அறிவிக்கிறது.

மொத்தப் பரிசு ரூ. 15,000

முதற் பரிசு	ரூ. 5,000
இரண்டாவது பரிசு	ரூ. 5,000
(ரூ. 2500 வீதம் இரண்டு பரிசுகள்)	
மூன்றாவது பரிசு	ரூ. 3,000
(ரூ. 1000 வீதம் மூன்று பரிசுகள்)	
தேர்ந்தெடுக்கப்பட்ட 4 கதைகளுக்கு 250 வீதம்	ரூ. 1,000

தவிர - பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட பத்து சிறுகதைகளுக்கு ரூ. 100 வீதம் ரூ. 1000

நிபந்தனைகள்

1) சிறுகதைகள் எழுத்தாளரின் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இருக்கக் கூடாது.

2) அமுதசுரபி அச்சுப் பக்கங்களில் 5 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது அவசியம்.

3) தெளிவாக காகிதத்தில் ஒரு பக்கத்தில் எழுதப்பட வேண்டும்; தட்டச்சாக இருந்தால் சிறப்பு.

4) ஓர் எழுத்தாளர் பல கதைகள் எழுதலாம். ஆனால் ஓர் எழுத்தாளருக்கு ஒரு பரிசுதான் உண்டு.

5) அமுதசுரபி ஆசிரியர் நியமிக்கும் நடுவர்குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்கேற்ற கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

6) ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

7) போட்டிக்கு அனுப்பப்படும் கதைகளுக்கு நகல் ஒன்று கைவசம் வைத்துக் கொள்ளுதல் நலம். தேர்ந்தெடுக்கப் படாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது.

8) போட்டி தொடர்பாக எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளக் கூடாது.

9) சிறுகதைகளின் காபிரைட் உரிமை எழுத்தாளர்களையே சாரும் என்றாலும் சிறுகதைத் தொகுப்பில் சேர்க்கப்படும்போதோ கதை வெளியிடும்போதோ அமுதசுரபி அலுவலகத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

10) பரிசு பெற்ற கதைகள் அமுதசுரபி தீபாவளி மலரிலோ அல்லது மாத இதழ்களிலோ வெளிவரும்.

11) சிறுகதைகள் அமுதசுரபி அலுவலகத்திற்கு **7. 9.2002** தேதிக்குள் வந்து சேருமாறு அனுப்பப்படவேண்டும்.

தமிழ்ச் சிறுகதை இலக்கியம் உலக அளவில் நிமிர்ந்து நடைபோடும் அளவிற்குச்சிறந்த படைப்புகளை எழுத்தாளர்கள் அனுப்பி, சிறுகதைப் போட்டி மிகச் சிறப்பாக நடைபெற உதவும்படி கேட்டுக் கொள்கிறோம்.

1.6.2002
சென்னை-102

ஆசிரியர்
அமுதசுரபி

கதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர் அமுதசுரபி , ஸ்ரீராம் டிரஸ்ட், ஏ-7, இரண்டாவது அவின்யூ
அண்ணா நகர், சென்னை-600 102. தொலைபேசி : 6286869/6287879

சாமுராய்



படம் முழுக்க மசாலா தூவப்பட்டாலும், சமூக நோக்கோடு எடுக்கப்படும் தமிழ்ப் படங்களை இரண்டு வகையாகப் பிரித்து விடலாம். இயக்குனர் சொல்ல வந்த மெசேஜ், சாம்பாரில் கரைத்த பெருங்காயம் மாதிரி ஆகிவிடுவது முதல்வகை. எத்தனை மசாலாவிலும் எடுப்புச் சாப்பாடு மாதிரி, மெசேஜ் தூக்கலாகத் தெரிவது இரண்டாம் வகை. சாமுராய் இரண்டாவது ரகம்.

சக மனிதர்களுக்கும், சமுதாயத்திற்கும் இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டு பொறுக்க முடியாமல் குமுறுகிறார் விக்ரம். இவரது எரிமலைக் குமுறலின் பின்னணிக்குக் காரணமாகக் காட்டப்படும், சினிமாத்தனமற்ற, உணர்ச்சிகரமான ப்ளாஷ்பேக் நம்மை உலுக்குகிறது. ஆனால் க்ளைமாக்ஸ் தெலுங்குப்பட நெடியோடு திகைக்க வைக்கிறது.

விக்ரம் அன் கோவின் ஒவ்வொரு கடத்தல் காட்சிகளும், ரசிகனை இருக்கை நுனிக்குக் கொண்டு வருவதிலிருந்தே, இயக்குனரின் உழைப்பு புலப்படுகிறது. கடத்தலின் இறுதியில் காவல்துறையிடம் சிக்கி மரண அடி வாங்கும் விக்ரம், இரத்தம் சொட்டச் சொட்ட, தன்னைத் துன்புறுத்தும் போலீஸ் அதிகாரியைப் பார்த்து, "ஊழல் பண்ணினவங்க யாரையாவது இப்படி விசாரிச்சிருக்கீங்களா?" என்று காலணியால் அடித்த மாதிரி கேட்கிறபோது தியேட்டரில் ஐந்து நிமிடம் தொடர் கரவொலி.


டிஸ்கோத்தே தோழர்கள் பலாத்காரம் செய்ய வரும் காட்சியில் புதுமுகம் அனிதா பொங்கித் தாக்குவது இன்றைய பெண்மைக்குத் தன்னம்பிக்கை தரும் காட்சி.

"சொந்தத்துலே யாராவது பாதிக்கப்பட்டாதான் பொங்குவீங்களா?" என்றபடி தன்னை எரித்துக்கொண்டு, விக்ரமிற்குள் தீக்குச்சி கொளுத்திப் போடும் ஜெயாசீலின் உணர்ச்சிகரமான நடிப்பு, எல்லோரது நடிப்பையும் ஒன்றுமில்லை என்றாக்கிவிடுகிறது. படத்தில் தனித்துத் தெரியும் மற்றொருவர் ஒளிப்பதிவாளர் சேது ஸ்ரீராம். ஒவ்வொரு ப்ரேமிலும் சந்தோஷ்சிவனின் உதவியாளர் என்பதை நிறுவியிருக்கிறார்.

அங்கிங்கெனாதபடி எங்கும் புரையோடிப் போயிருக்கும் ஊழலின் ஊற்றுக் கண்களில் ஒரு சிலவற்றை மேலோட்டமாகப் பார்க்காமல் ஆழமாய் அணுகியிருக்கும் படம்.

— விஷுவல்தாசன்

● ஆவெரஜ்



பாண்டிபஜாரில் அந்த ஹோட்டல் இருக்கிறது.

நான் வாணி மஹாலிலும், பாரத் கலாசாரிலும் கச்சேரிக்குப் போனபோது தொடர்ந்து நான்கு ஐந்து நாட்கள் அங்கு சென்று டிபன் சாப்பிட்டேன்.

நான் தொடர்ந்து போன நான்கு நாட்களில் ஓர் இளைஞன் – கல்லாவில் உட்கார்ந்திருப்பான். மாநிறம். நல்ல களையான முகம். வரிசை தவறிய பல்லானாலும் சிரிப்பில் ஒரு கவர்ச்சியும், நட்பும் இருக்கும். பார்த்தாலே புன்னகை செய்யச் சொல்லும் முகம்.

பரிச்சயப் புன்னகை எங்களை இணைத்தது. பேச்சுவார்த்தை ஏதும் கிடையாது. வெறும் புன்னகை பரிமாற்றம்தான்.

அந்தப் புன்னகையில் எனக்கென்னமோ பேசிய திருப்தி ஏற்படும்.

எத்தனையோ சம்பாஷணைகள் வாய் திறக்காமலே நிகழ்ந்துள்ளன. நான் அடிக்கடிப் போவதில்லை என்றாலும் கச்சேரிக்கோ, முப்பாத்தம்மன் கோவிலுக்கோ, வேறு வேலையாக, பாண்டி பஜார் போனாலோ இந்த ஹோட்டலில்தான் காபியோ, டிபனோ.

காபி டிபனை விட போகப் போக எனக்கு இந்தப் புன்னகைப் பிடித்தது. மனசின் திருப்தியோ சந்தோஷமோ, உபசரிப்போ மென்மையாகத் தெரியும் புன்னகை. அந்த முகம்; அந்தப் புன்னகை விரியும்போது ஒரு பூ விரியும் அழகு தெரியும். நாசிக்கு எட்டாமல் மனசுக்குள் மாத்திரம் தனியாகச் செல்லும் மணம் பரவும். நட்புக்குப் பேச்சுத் தேவையா? தேவையில்லை என்றுதான் தோன்றுகிறது. நான் அந்த இளைஞனிடம்



மானசீகமாக நட்புகொண்டேன். அவனும் என்னோடு நட்பு கொண்டிருக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறேன். இல்லாவிடில் ஹோட்டலுக்கு வரும் அத்தனைப் பேரையும் பார்த்தல்லவா அவன் புன்னகைக்க வேண்டும்? எனக்கு மட்டும்தானே அது பிரத்யேகமாக விரிகிறது?

காணாமலே காதல், அது, இது என்று திரைப்படங்களில் 'ரீல்' விடுகிறார்களே அதோடு பார்த்தால் இந்தத் தோழமை எந்த விதத்தில் குறைந்தது? ஏன் இருக்க முடியாது?

இருந்தது... இருந்து கொண்டிருந்தது. போன மாதம்வரை...

போன மாதம் நான் போனபோது அந்த இளைஞன் வழக்கம் போல் கல்லாவில் இருந்தான். நான் பில்லை எடுத்துக் கொண்டு கல்லா அருகில் வரும்போதே என் முகமும், மனமும் புன்னகைக்காக விரிந்து கொண்டிருந்தன. பில்லையும், பணத்தையும் மேசை மேல் வைத்தேன். ஆனால்...

அவன் என்னைப் பார்க்கவில்லை. பில்லுக்கான பணத்தை எடுத்துக் கொண்டு மீதிக் காசை வைத்து நகர்த்தினான். என் மனம் சுருங்கியது. ஏன் இப்படி? கவனிக்கவில்லையோ?

"என்ன சௌக்கியமா?" என்ற கேள்வி நாக்கு நுனிக்கு வந்தது.

ஆனால் வெளிவரவில்லை.

எங்கள் பாஷை மொழியல்லவே - புன்னகைதானே?

கண்ணில் விழுந்த மணல் துகள் போல் புன்னகை தராத முகம் உறுத்தியது. ஏன் அவன் நம்மைப் பார்க்கவில்லை...? அவனுக்குள் எத்தனைப் பிரச்னைகளோ?

வீட்டில் சண்டையாக இருக்கலாம்... உடல் நலம் குறைவாக இருக்கலாம். முகத்தைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லை. மனிதனுக்கு ஆயிரம் குழப்பங்கள்... அந்த இளைஞனுக்கு என்னவோ– குறிப்பாக, அன்றைக்கு. எனக்கெப்படி தெரியும்?

எப்படித் தெரிந்து கொள்வது?

திடீரென என் மனசுக்குள் மீண்டும் போய் எப்படியாவது அந்த நட்புப் புன்னகையை

புன்னகை



மீட்டு வந்துவிட வேண்டும் என்ற வேகம் எழுந்தது.

மூன்று நாட்கள் கழித்து திரும்ப அந்த ஹோட்டலில் அவனைப் பார்த்துப் புன்னகை செய்வதற்காகவே போனேன்.

என்ன துர்அதிர்ஷ்டம்! அன்று அந்த இளைஞனைக் கல்லாவில் காணவில்லை. நான் வேண்டுமென்றே மிக மெதுவாகக் கிட்டத்தட்ட அரைமணி நேரம் எடுத்துக் கொண்டு சாப்பிட்டேன். எங்காவது கைவேலையாக எழுந்து போயிருப்பானோ, வந்து விடலாம் என்று. ஊஹும்...

அன்றைக்கு அவன் ஏதாவது காரணத்திற்காக விடுப்பு எடுத்துக் கொண்டிருக்கலாம் என்று மனச் சமாதானம் செய்துகொண்டேன். இருந்தாலும் அந்தப் புன்னகையைப் பெறாதது அந்த ஹோட்டலில் சாப்பிட்ட திருப்தியைத் தரவில்லை.

மீண்டும் உறுத்தும் மணல் துகளை அகற்ற மறுவாரம் சென்றேன். உள்ளே நுழையும் போதே பார்வை கல்லாவை நோக்கியது. அவனைக் காணவில்லை. உள்ளே போய்ச் சாப்பிட அமர்ந்தேன். சர்வர் வந்து ''என்ன ஸார் வேணும்?'' என்ற கேள்வி உறைக்க ஒருநிமிஷம் ஆயிற்று. 'ம்... இரண்டு இட்லி..' என்று சொல்லி அவனை அனுப்பினவன் இந்த சர்வரையே கேட்கலாமா... அந்த இளைஞன் எங்கே போனான் என்று...? எனத் தோன்றுகிறது.

'இது என்ன அரசாங்க வேலையா...? இதைவிட வேறு ஏதாவது ஹோட்டலில் நல்ல வேலை கிடைத்திருக்கும்... போயிருக்கலாம்... சென்னையிலோ இல்லை வெளியூரிலோ... இல்லை நீண்ட விடுமுறையில் இருக்கலாம்... உடம்பு நல்லபடி இல்லாமல் போயிருக்கலாம்... இல்லை... திடீரென நெஞ்சு நடுங்கியது... ஏதாவது ஏற்பட்டு திடீரென்று இறந்துபோய் விட்டிருப்பானோ...சீச்சீ.. என்ன குரங்கு மனசு... என்னவெல்லாம் அநாவசியமாக நினைக்கிறது...?

'இல்லை அவனுக்கு நல்ல வேலை கிடைத்து வேறிடத்திற்குத்தான் போயிருக்க வேண்டும்..'

சர்வர் சூடாக இட்லியை வைத்துவிட்டுத் திரும்பும்போது 'கேட்கலாமா' என்று மனசிலிருந்த கேள்வி, வெளியே வரவில்லை. எனது கேள்விக்கு அவன் நான் விரும்பாத பதிலைச் சொல்லித் தொலைத்துவிட்டால்...

''யாருக்கு ஸார் தெரியும்... எங்கே போனாரோ?''

''ஏன் ஸார் கேட்கறீங்க...?''

''ஆக்ஸிடென்ட் ஆயி ஆஸ்பத்திரியில இருக்கார் ஸார்..''

இப்படி என்ன பதில் வேண்டுமானாலும் வரலாம்.

ஆனால் எல்லாவற்றையும் விட லீவில் இருக்கார் ஸார்... அடுத்த மாசம் வருவார்..' என்கிற பதில் எனக்கு ரொம்பத் திருப்தியாக இருக்கும். அந்தப் பதிலையே மனசில் வைத்துக் கொள்வோம்.


'என்ன ஸார்... ஏதாவது கேட்டீங்களா?' என்றான் சர்வர்.

'ம்..' என்று திடுக்கிட்டு அவனைப் பார்த்தவன், 'ஒன்றுமில்லை... காப்பி..' என்றேன்.

பில்லையும், பணத்தையும் கல்லாவில் வைக்கிறேன். இவனும் ஓர் இளைஞன்தான். என்னை ஒருமுறை பார்த்துவிட்டு மீதிப் பணத்தை வைக்கிறான். அவன் முகத்தைப் பார்த்தபடி சில்லறையை எடுத்துக் கொள்கிறேன். நகரும்போது, 'என்ன ஸார்... இன்னும் ஐம்பது ரூபாய் வாங்காமல் போறீங்களே...?' என்று கூப்பிட்டு என்னைப் பார்த்து புன்னகை செய்கிறான்.

நானும் 'தாங்க்ஸ்..' என்றபடி புன்னகை செய்கிறேன்.

ஜி. ஸ்வாமிநாதன்


ஐயையோ, இனிமே எப்படி காதல் பண்றது?
கவலைப்படாத சீதா! கோயில் வந்தா சௌகரியம் தான்
ஹரே ராமா பட்டாணி சுண்டல்!
எனக்கு அந்த தாத்தாப் போட்டிருக்கிற மாலைதான் வேணும்!
''பகவான் என் கனவிலே வந்து மெரீனாவில் எனக்குக் கோயிலெழுப்பு என்று எண்பது வருடங்களுக்கு முன் சொன்னார். அதற்காகவே உயிரோடு இருக்கிறேன்... கோயிலைக் கட்டியே தீருவேன்...''
தண்ணீல மிதக்கிற மாதிரி கோயில் கட்டினா படா ஜோக்கா இருக்கும் நைனா...

மெரீனாவில் அயோத்தி!


"மெரீனாவில் கோயில் கட்டுவது பற்றியோ கொட்டகை போடுவது பற்றியோ, நான் கருத்துக்கூற விரும்பவில்லை. திராவிடத் தூண் அண்ணா, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். சமாதிகள் இருக்குமிடத்தில் கோயில் தேவைதானா என்பதே என் கேள்வி. இதை, 'கோயில் கட்ட கருணாநிதி எதிர்ப்பு' என்று திரித்து எழுதி என்னைச் சிக்கலில் ஆழ்த்தி விடாதீர்கள்."
கட்டுவோம் கட்டுவோம், கட்டியே தீருவோம்!
..சென்னையை அயோத்திக்கு மாத்திடுவாங்களோ!
கற்பனை : அம்மு
கார்ட்டூன் : நடனம்



எங்கோ தொலைந்து போயிருந்த மழையை, 'மோஸ்ட் வாண்டட்' பகுதியில் போடாத குறையாகத் தேடிக் கொண்டிருந்தோமா? திடீரென்று இதோ இருக்கிறேன்? என்று முகம் காட்டி மகிழ்வித்துக்கொண்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் மும்பை, பூனே எக்ஸ்பிரஸ் ஹைவேயில் பயணிப்பவர்கள், ஸ்விட்ஸர்லாந்தையும், ஆஸ்திரியாவையும் மறந்தே விடுவார்கள்! 'ப்பூ... அங்கே என்ன இருக்கிறது? இந்தப் பூலோக சொர்க்கத்தைப் பாருங்கள்!' என்று மார் தட்டுவார்கள். அப்படி ஒரு இயற்கை எழில் இருபுறமும் பச்சை வெல்வெட்டாக விரிந்து கிடக்கிறது. மும்பை மலைப் பகுதிகளிலெல்லாம் இந்த சீசன் "மரம் நடு காலம்! ஐ க்ரீன் மும்பை' இயக்கத்தின் தலைவர் சாவந்த் வேறு, "சத்தியவான் மயங்கியதும் சாவித்திரி அவனை ஓர் ஆல மரத்தடியில் கொண்டு கிடத்தினாள்; அந்த மரத்திலிருந்து வெளிப்பட்ட ஆக்ஸிஜன் உதவியால்தான் சத்தியவான் உயிர் பெற்றெழுந்தான் என்பது விஞ்ஞான பூர்வமான உண்மை" என்று புதுக்கதையைக் கிளப்பி விட்டிருக்கிறார். மரங்களின் மவுசு கூடுவதற்குக் கேட்கவா வேண்டும்? பழமையும் புதுமையிட்டுத்-புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்!





வெற்றியின் ரகசியத்தைத் தெரிந்து வைத்திருந்தால் 'பாபா' ஆகிவிடலாம் போலும்! பாருங்களேன்.. பாந்த்ராவிலுள்ள ஒரு 'பெங்காலி பாபா', அம்பர்நாத்திலுள்ள ஒரு டெய்லர், வாழ்வில் வெற்றி பெற வேண்டுமென்றால், ஒரு ஒன்பது வயசுப் பையனைப் பலி கொடுக்க வேண்டும் என்ற விஷயத்தை ரகசியமாக வெளியிட, அவன் காதும் காதும் வைத்தாற் போல் பக்கத்து வீட்டுப் பையனைக் காவு கொடுத்து விட்டான். விஷயம் அம்பலமாகி, பாபாவும் டெய்லரும் கம்பி எண்ணிக் கொண்டிருக்க, இன்னொரு 'பெங்காலி பாபா' முளைத்தார். தஹிசரிலுள்ள மஹேந்த்ர ஜயின் என்ற வியாபாரி இரவோடிரவாக பணக்காரனாவதற்கு, ஒரு சிறுவனைப் பலி கொடுக்க வேண்டும் என்று ரகசியமாகச் சொல்லியிருக்கிறார். ஜயின், டெய்லர் அளவு துணிந்தவரில்லை, சிறுவனென்ன... அதற்குப் பதில் இரண்டு மிருகங்களைப் பலியிடவே பயந்திருக்கிறார். கடைசியில், நான்கு லட்சம் கொடுத்தால், வங்காளத்துக்கே போய், கண் காணாமல், ஓர் எருமையும் ஓர் ஒட்டகமும் பலியிடுவதாகப் புது பெங்காலி பாபா வாக்கு கொடுக்க, 1.6 லட்சங்களை உடனடியாகக் கொடுத்துவிட்டு, மீதியை ஏற்பாடு செய்ய நண்பரை ஏவினார் ஜயின். நல்ல நண்பர் நேராகப் போலீஸிடம் போக, இந்த 'பாபா'வும் இப்போது ஜெயிலில். இந்த இரண்டு 'பெங்காலி பாபா'க்களை வைத்துக்கொண்டு போலீசார் விழிக்கையில், மூன்றாவதாக ஒரு 'பாபா' (சையத் ஹசரத்) குர்லாவில் தோன்றியிருக்கிறார். தன்னை நாடி வந்த ஷபீர் தம்பதிகளைச் செல்வந்தர்களாக்க,

குளிர்ச்சியில் சிவ்

பிறக்கும்போது கால் முதலில் வெளியே வந்த குழந்தையைப் பலியிட வேண்டுமென்றிருக்கிறார். அந்த வட்டாரத்தில், 'பிஜ்லி' என்ற ஒரு பையன் அப்படிப் பிறந்தவன்; அவன் மீது விழுந்தது பாச வலை; கடைசி நிமிடத்தில் அவன் தப்பி ஓடி, புதிய 'பாபா'வைச் சிக்க வைத்து விட்டான். காவல் துறையே 'பாபா ப்ளாக்ஷிப்' பாடிக் கொண்டிருக்கிறது! இன்னும் எத்தனை 'பாபா'க்கள் முளைத்திருக்கிறார்களோ?

முளைத்து மூன்று இலை விடவில்லை; அதற்குள் யுவராஜ் சிங்குக்கு 'செலிப்ரட்டி' ஸ்டேடஸ்! ரேடியோ மிர்ச்சி வேறு "ஹிஸ்டாரிக் மூமெண்ட் அவார்டெல்லாம் கொடுத்து சிறப்பித்திருக்கிறதா? மனிதர் குளிர்ந்து போயிருக்கிறார். 'ஆங்கில அழகிகளெல்லாம் பார்ப்பதற்குத்தான் சுகம்; எனக்கு இந்திய ஆரணங்குகளைத்தான் பிடிக்கும்'' என்கிறார். ஆனால் 'இன்னும் ஐந்து வருடங்களுக்கு கிரிக்கெட் தான்! 26க்கு மேல்தான் திருமணம்' என்கிறாரே? அதுவரை இந்த சிங் மீது எந்த பாலிவுட் சிங்காரியின் பார்வையும் விழாமல் யார் காப்பாற்றப் போகிறார்களோ?



• யுவராஜ்

யார் காப்பாற்றப் போகிறார்களோ தேவதாசை... ஐஸ்வர்யாவா? மாதுரியா? என்ற சர்ச்சையைப் பற்றி சற்றுமே கவலைப்படாதிருக்கிறார், கணவருடன் தேவதாஸ் ப்ரீமியருக்கு மும்பை வந்த மாதுரி. மாதுரி



• மாதுரி

பேசிய டயலாக்கில் ஒரு அட்சரம்கூட நேநேவுக்குப் புரியவில்லை; 'டோலாரே' நடனமும், மாதுரியின் பேசும் விழிகளும் தான் அவர் ரசித்தவை. இந்தியே தெரியாதவரிடம், மாதுரிதான் 'கதை'த்துக் கொண்டிருந்தார். வெளிநாட்டுப் ப்ரீமியர்களில் தாம் ஓரங்கட்டப்பட்டதையும் அவர் கண்டு கொள்ளவே இல்லை. 'என் கணவர் புதிதாக மருத்துவமனை துவங்குகிறார்; அதில் நான் 'பிசி'யாகி விடுவேன்' என்று யு.எஸ். பறந்துவிட்டார்.

பறந்து விட்டார் என்றுதான் நாம் எண்ணிக் கொண்டிருந்தோம்; திரையுலகுக்கு திரும்பி விட்டாரே ஜெயப்ரதா? மரத்தைச் சுற்றாமல் வித்தியாசமான ரோல்களில் வரப் போகிறாராம். அதுவும் மராத்திப் படத்தில்தான் முதன்முதலாக மறுபிறவி எடுக்கப் போகிறாராம்! ''மஹாராஷ்ட்ராதான் எனக்கு வெற்றிகளைக் குவித்தது! ஜெய் மஹாராஷ்ட்ரா!'' என்கிறாரே? சிவசேனைக்கு மும்முரமாக ஆள் திரட்டிக் கொண்டிருக்கும் தாக்கரே காதில் விழுந்திருக்குமா? ○



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ரூ.10,000/- முதல் பரிசு பெறும் வைரவிழா வைட்டமின் சிறுகதை

வேலைவிட்டு வீட்டை அடைய மணி ஆறு ஆகிவிட்டது. காரை நிறுத்திவிட்டு இறங்கியபோதே அம்மா தோட்டத்தில் நிற்பதைக் கண்டேன். மரத்துக்கடியில் குனிந்து பார்த்துக் கொண்டிருந்தார். இறங்கி என் பிரீஃப்கேசையும் தூக்கிக் கொண்டு அம்மாவைப் பார்த்தேன்.

"என்னம்மா பார்க்கிறீங்க?"

"இல்லப்பா, இந்த மரத்த வெட்டிடலாமான்னு பாக்கிறேன்" என்றார். அது ஓர் ஊசி இலை மரம். அப்பா வைத்து வளர்த்தது. எங்கள் வீட்டின் சுற்றுவட்டத்துக்குள் வாசலுக்கு முன்னால் இருந்த சிறிய நிலத்தில் நட்ட நடுவில் அது இருந்தது. அதைச் சுற்றிலும் மல்லிகைப் புதர்களும் சாமந்திச் செடிகளும் சில சூரிய காந்திச் செடிகளும் இருந்தன.

"ஏன் அம்மா? திடீர்னு?"

"திடீர்னு இல்லப்பா. கொஞ்ச நாளா நெனைச்சிக்கிட்டுதான் இருக்கேன். சும்மா நெலத்த அடச்சிக்கிட்டு நட்ட நடுவில நிக்குது. என்ன பிரயோஜனம்? ஏதோ வெள்ளைக்காரன் வீட்டில கிறிஸ்துமஸ் மரம் நட்டது மாதிரி. எடுத்திட்டு இங்க ஒரு சின்னப் பந்தல் போட்டு முல்லைக் கொடி ஒண்ணு வளர்க்கலாமான்னு பாக்கிறேன்."

அப்பா இறந்து ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் இறப்பதற்கு ஓராண்டுக்கு முன்னால் எங்கிருந்தோ கொண்டு வந்து இதை



ஊசி இலை மரம்



நட்டார். அப்பாவின் நினைவு அம்மாவுக்கும் தீர்த்து விட்டது போல. அதுதான் அப்பாவின் ஆசை மரமாயிற்றே என்ற நினைப்பே இல்லாமல் பேசுகிறார். எனக்கும் மரத்தை எடுப்பதில் பெரிய மறுப்பு ஒன்றுமில்லை. பார்த்தால் எடுத்து விடுவதுதான் நல்லது என்று தோன்றுகிறது. அது அங்கு சுற்று வட்டத்தில் பொருந்தாமல்தான் நின்று கொண்டிருந்தது.

வாசலில் என் மனைவி மங்கை நின்றிருந்தாள். என் ப்ரீஃப்கேசை வாங்கிக் கொண்டாள். மேசையில் தேநீர் தயாராக இருந்தது. அடுப்பில் வடை பொரிந்த சப்தமும், வாசமும் வந்தன. எது செய்தாலும் அப்படித்தான், சுடச்சுட இருக்கும். நான் எந்த நேரத்தில் வந்தாலும் சுடச்சுட இருக்கும். அதெப்படி? என் கார் சாலையின் எல்லையில் வருவதை ஞானக் கண்ணால் பார்த்துவிட்டு அடுப்பில் வார்த்து எடுப்பாளோ?

சட்டையையும் சிலுவாரையும் கழற்றிப் போட்டுவிட்டு கைலியைக் கட்டிக் கொண்டு தேநீரை எடுத்து உறிஞ்சினேன். வடையோடு வந்து நின்றாள். சிரித்தேன். "ஏன் சிரிக்கிறீங்க?" என்று கேட்டாள்.

"இல்ல மங்கை, ஒரு நாளைக்கு நீ அலுப்போட வீட்டுக்கு வரும் போது நான் இப்படி சுடச் சுட வடை சுட்டு உனக்குக் குடுத்தா எப்படி இருக்கும்னு நெனச்சிப் பாத்தேன். சிரிப்பு வந்தது"

ரெ. கார்த்திகேசு

என்றேன்.

"அதுக்கு ஏன் சிரிப்பு வரணும்? எனக்கு ஒரு சிக்கு அப்படி இப்படின்னு வந்தா நீங்க செஞ்சுக் கொடுக்கத்தான் வேணும்!" என்றாள்.

"அதுக்கு அம்மா என்னை விடணுமே!" என்றேன்.

"எல்லாம் விடுவாங்க! அப்படி நடக்கும் போது பாருங்க!" என்றவள், "தம்பிகிட்ட இருந்து ஈமெயில் வந்திருக்கான்னு பாக்கச் சொன்னாங்க அம்மா!" என்றாள்.

ஒரு மூன்று வடைகளைத் தேநீரில் நனைத்துச் சாப்பிட்டுவிட்டு மீதமிருந்த தேநீரை ஏந்திக் கொண்டு கணினியில் போய் உட்கார்ந்தேன்.

அம்மாவுக்கு ஏன் இந்த அவசரம் என்பது எனக்கும் புரிந்தது. தம்பி இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்தான். பெட்ரோலியம் துறையில் டாக்டரேட் பண்ணிக் கொண்டிருந்தான். பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனம் அவனுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்திருந்தது. இன்னும் திருமணமாக வில்லை. அதுதான் அம்மாவுக்குக் கவலை.

எங்களைச் சுற்றி நடக்கின்ற தீவிரமான மாற்றங்கள் அம்மாவுக்குக் கவலையளித்ததில் வியப்பில்லை. எங்கள் தலைமுறையில் உறவுக் காரப் பிள்ளைகள் எல்லாரும் உயர் படிப்புக் காக பல்கலைக் கழகங்கள் செல்லும்போது அங்கங்கு தங்களுக்குப் பிடித்த ஒரு பெண்ணைப் பார்த்துக் கட்டிக் கொள்கிறார்கள். போன மாதம் எங்கள் அத்தையின் மகன் அசோகனின் திருமணம் நடந்தது. அவன் அமெரிக்காவில் படிக்கும்போது ஒரு பிலிப்பைன்ஸ்காரியைக் காதலித்து மணந்து கொண்டான்.

"பிலிப்பைன்ஸ்காரி" என்று அத்தை எரிச்சலோடும் இகழ்ச்சியோடும் சொன்னாலும் அவளது மகத்துவம் கொஞ்சமாகப் படிப்பறிவுள்ள அத்தையின் சிற்றறிவுக்கு ஒருபோதும் எட்ட முடியாது. குளோரியா கொன்ஸ்டன்ஸ் ரம்போயோ மருத்துவத் துறையில் தன் பல்கலைக் கழகத்தில் தங்கப் பதக்கம் வாங்கி இப்போது மூளை அறுவைத் துறையில் மேல்பட்டப் படிப்புப் படித்து வருகிறாள். சீனமும் ஸ்பானியமும் கலந்த வெளிர் மஞ்சள் நிறத்தில் தளதள என்று இருந்தாள். அசோகனும் மருத்துவத் துறையில்தான் மேல் படிப்புப் படிக்கிறான். குளோரியாவைவிட ஒரு வயது அவனுக்குக் குறைவு. இரண்டு பேரும் அத்தையின் விடாப்பிடியின் காரணமாக மலேசியா திரும்பி நல்ல பாரம்பரிய முறையில் கோயிலில் திருமணம் செய்வதற்கு ஒரு வாரம் விடுமுறை பெற்று வந்திருந்தார்கள்.

எல்லாம் பார்த்து அம்மா கொஞ்சம் ஆடிப் போயிருந்தார். எங்கே எங்கள் குடும்பப் பின்னணி கெட்டுப் போய்விடுமோ என்ற பயம்தான் அது. எங்கள் பின்னணியின் உன்னதத்தின்மீது அம்மாவுக்கு மட்டுமல்ல, எனக்கும் கூடக் கொஞ்சம் பெருமிதம் உண்டுதான். அது உன்னதமான தமிழ்ப் பின்னணி. அதைத் தக்கவைப்பதில் அப்பா மிகக் கவனமாக இருந்தார்.

அப்பாவின் அப்பாவான எங்கள் தாத்தா திருச்சி பக்கத்திலிருந்து கப்பலேறி மலேசியாவுக்குப் பிழைக்க வந்தவர். நன்கு தமிழ் கற்ற பண்டிதர். ஆனால் கிடைத்தது என்னவோ அஞ்சல்காரர் வேலைதான். மாலை நேரங்களில் தமிழ் வகுப்புகள் நடத்தி பலருக்கு மொழியறிவை ஏற்படுத்தினார். கவிதைகளும் கட்டுரைகளும் எழுதக் கற்றுக் கொடுத்தார்.

அப்பாவுக்கும் அந்தத் தமிழ்ப் பற்று பற்றிக் கொண்டது. அவர் நீதிமன்ற மொழி பெயர்ப்பாளராக இருந்தார். பினாங்கில் உள்ள அனைவருக்கும் துபாஷ் துரைசாமி என்றால் தெரியாமல் இருக்காது.

தமிழில் தோய்ந்தவர். பக்தமான். கோயில் காரியங்களில் முன் நிற்பார். தேவாரம் திருவாசகம் உருக்கமாகப் பாடுவார். எனக்கும் தம்பிக்கும் சொல்லி வைத்திருக்கிறார். ஏராள



"என்ன இது... ஒரே பீடத்துல ஏழெட்டு சிலை இருக்கு?"
"இது கூட்டணிக் கட்சித் தலைவர்களோட சிலை!"
- அம்பை தேவா

மான தமிழ் மன்றங்களில் உறுப்பினர். தமிழர் திருநாளையெல்லாம் முன்னின்று நடத்தியிருக்கிறார்.

எங்கள் வீட்டில் பெரிய நூலகமே இருந்தது. பக்தி இலக்கியங்கள் அத்தனைக்கும் அப்பா அட்டைபோட்டு வைத்திருப்பார். அதோடு கட்டுரைகள், கவிதைகள், நாவல்கள் என்று எல்லாம் வாங்கிப்படித்து எங்களுக்கும் கொடுப்பார். திரு. வி.க., மறைமலை அடிகள், வ.சு.ப. மாணிக்கம், ந.சி. கந்தையாப் பிள்ளை, அப்பாத்துரையார் என அனைவரையும் ஆழமாக அல்லாவிட்டாலும் மேற்போக்காகவாவது நானும் தம்பியும் அறிந்து வைத்திருந்தோம்.

எங்களைச் சுற்றியிருந்த மலேசிய மத்திய வர்க்கத் தமிழ்ச் சமுதாயம் தமிழைக் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து ஒரு மேற்கத்தியம் கலந்த மலேசிய முறைக்கு மாறிக் கொண்டு வந்த போது எங்கள் வீட்டில் தமிழ் மணத்தது. எங்கள் வீட்டுச் சூழ்நிலை, பண்பாட்டுச் செழுமை, விருந்தோம்புதல், தமிழுக்கும் சைவத்துக்கும் தாராளமாக கொடை வழங்குவது எல்லாம் அடுத்தவர்கள் முகம் தூக்கிப் பார்க்கும் அளவுக்குப் பிரசித்தம்.

இதற்கிடையே நானும் தம்பியும் தமிழ்ப் பள்ளிக்கும், அதன் பின் அரசாங்க மலாய்ப் பள்ளிக்கும் சென்று படித்தோம். தாத்தா, அப்பா இவர்களுக்கு ஆங்கிலம், மலாய் சரியாகத் தெரியாது என்றாலும் அவர்கள் தமிழால் பட்டை தீட்டிக் கொண்ட அறிவின் உயிரணுக்கள் எங்களுக்குள் இருந்திருக்க வேண்டும். நியூரோனுக்கு வரிவடிவத்தில் மொழி வேண்டுமா என்ன? நாங்கள் நன்றாகப் படித்தோம். எங்களுக்கு உபகாரச் சம்பள வசதிகள் கிடைத்தன. பட்டப் படிப்பு வரை படித்தோம். நல்ல வேலைகளில் சேர்ந்தோம். ஒரே தலைமுறைக்குள் எங்கள் குடும்பம் பொருளாதாரத்தில் குதிரைத் தாண்டுதலாகத் தாண்டி மத்திய வர்க்கத்துக்கு வந்துவிட்டது.

அதுதான் பிரச்னையும் ஆகியது. எனக்குத் திருமண வயது வந்தபோது அப்பாவும் அம்மாவும் எதிர்பார்த்தது போல் பெண் கிடைக்கவில்லை. நானும் காதலிக்கும் வகை அல்ல. பருவக் குறுகுறுப்பின் போது சில பெண்களைக் கொஞ்சம் வாசனை பிடித்துப் பார்த்துவிட்டு அப்புறம் பெற்றோரிடமே விட்டு விட்டேன்.

மலேசியாவின் மத்திய தர வர்க்கத்தில் பெண் பார்த்தால் ஒரு பெண்ணுக்கும் சரியாகத் தமிழ் பேசத் தெரியவில்லை. பேசத் தெரிந்தாலும் சுத்தமாகத் தமிழ்ப் படிக்கத் தெரியவில்லை. தேவாரம், திருவாசகம்? அப்படியென்றால் என்ன என்று கேட்டார்கள்.

அப்பாவுக்குத் தமிழகத் தொடர்பு இருந்ததால் அங்கு சென்று பார்த்தார். தேடி அலசி மங்கையற்கரசி என்ற மங்கையைப் பிடித்தார். அழகாக, கொஞ்சம் தளர்வாக சேலை அணிந்து வீட்டுக்கு வந்த பெரியவர்களுக்குப் பாதம் தொட்டு வணக்கம் செய்யும் பெண். தேவாரங்கள் மட்டுமல்ல, சினிமாப் பாடல்கள் கூட அழகாகப் பாடுவாள். மாநிறமானாலும் செதுக்கியது போன்ற முகம். சமையல்... ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். "யூரேக்கா" என்பதுபோல் அப்பா கடிதம் எழுதினார். "அப்படியே ஆகுக" என நான் பதில் எழுதினேன்.

ஒரு நான்கு வருஷம் அப்பா இருந்துவிட்டு ஒரு பேரப் பெண்ணையும் பார்த்து விட்டு ஒரு நாள் சொல்லாமல் கொள்ளாமல் சாய்ந்து போனார். இப்போது அம்மாதான் குடும்பத்தின் மூத்த தலைவி. தம்பிக்குக் கல்யாணம் செய்யும் பொறுப்பு அவர் கையில்.

மங்கைக்குத் திருச்சியில் ஒரு தங்கை இருந்தாள். இவளின் அச்சுதான் அழகிலும் குணத்திலும். அம்மாவுக்கு ஆரம்பதிலிருந்தே அவள் மீது ஒரு கண், இரண்டாவது மருமகள் ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று. பின் என்ன, ஐ.எஸ்.ஓ. போன்று தரச் சான்றிதழ் பெற்ற குடும்பம். ஒரு அச்சமும் இல்லாமல் பெண் எடுக்கலாம். அவர்கள் குடும்பத்திலும் அந்த ஆர்வம் இருந்தது.

தம்பிக்கு அவளைத் தெரியும். அவன் இங்கு வந்திருந்த போதெல்லாம் ஒருவருக்கொருவர் பகடி பண்ணிச் சிரித்து மகிழ்ந்திருக்கிறார்கள். இப்போது என் அத்தை பையனின்

பிலிப்பைன்ஸ்காரியுடனான கல்யாணம் நடந்த பிறகு அம்மாவுக்கு இலேசாகக் கிலி வந்துவிட்டது. போன வாரம் என்னிடம் சொல்லி தம்பிக்கு ஈமெயில் எழுதி இந்தக் கல்யாண விஷயத்தை உறுதிப்படுத்தி விடு என்று எனக்குக் கட்டளையிட்டு விட்டார். நானும் எழுதினேன். அந்த பதிலுக்குத்தான் காத்திருந்தோம்.

கணினியை உயிர்ப்பித்து ஜாரிங் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்திக் கொண்டு நெட்ஸ்கேப் மெஸஞ்சரில் என் உரிமச் சொல் கொடுத்து பார்த்தபோது மடல்கள் மடமடவென்று வந்திறங்கின. மங்கையின் வாசமிக்க தேநீரை உறிஞ்சியபடி திரையைப் பார்த்துக் கொண்டிருந்தபோது தம்பியின் மின்னஞ்சல் வந்திறங்கியது. அவசரமாகத் திறந்து பார்த்தேன். நான் எதிர்பார்த்தது போலத் தமிழில் தான் எழுதியிருந்தான். அது முதன் முறையாக.

"ஹேர அண்ணா,

இப்படித் தமிழில் உன்னைக் கூப்பிட்டு எத்தனைக் காலமாச்சு! கணினியில் தமிழ் அழகா வருது. நீ சொன்னது போல முரசு வலைத் தளத்திலிருந்து அஞ்சல் 2000 மென்பொருள் இறக்கி எஃப்12 விசையைத் தட்டினா தமிழ் அருவியாக் கொட்டுது. விசைப் பலகையெல்லாம் பழகிட்டேன். கொஞ்சம் மெதுவா தேடித் தேடித்தான் அடிக்க வேண்டி இருக்கு. ஆனா இப்பத்தான் முதல் முறையா 'டியர் பிரதர்'ஐ விட்டுட்டு 'ஹேர அண்ணா'ன்னு எழுத முடியுது.

சரி. இப்ப அம்மா சொன்ன கல்யாண விஷயம். அண்ணா, எனக்கு ஒரு உபகாரம் பண்ணு. நான் சொல்ல வர்ர விஷயத்த நீ முதல்ல புரிஞ்சிக்கணும். வாழ்த்தணும். அப்புறம் அம்மாகிட்ட மெதுவா எடுத்துச் சொல்லணும்.

இங்க என்னோட படிக்கிற பெண் ஒண்ணு இருக்கு. ஃபிரான்சிஸ்கா லோய்ட். இங்கிலாந்திலேயே பிறந்து வளர்ந்த பெண். அதுவும் இந்த பெட்ரோலியம் இஞ்ஜினியரிங்லதான் மாஸ்டர்ஸ் பண்ணிக்கிட்டு இருக்கு. ரொம்ப புத்திசாலி. இந்தியத் தத்துவம் எல்லாம் படிச்சிருக்கு. இந்தியாவுக்குப் போயிருக்கு. ஆனா என்ன, சுத்தமா வடக்கத்திய சம்பிரதாயத்திலதான் அறிவு. ஹரே கிருஷ்ணா இயக்கத்தில ரொம்ப ஈடுபாடு. தமிழ் பற்றியோ தென்னாடு பற்றியோ ஒண்ணும் தெரியாது. நாந்தான் கொஞ்சம் கொஞ்சம் சொல்லிக் குடுத்து வர்றேன். "தமிழ்ல இவ்வளவு விஷயங்கள் இருக்கா"ன்னு ஆன்னு வாய்பிளந்து என்னைக் காதலிக்க ஆரம்பிச்சிருச்சி.

அந்தப் பெண்ணைத்தான் உரிய காலத்தில் கல்யாணம் பண்ணிக்கலான்னு இருக்கேன். அதுகிட்டேயும் அவங்க பெற்றோர் கிட்டேயும் பேசிட்டேன். இதெல்லாம் முதல்ல உங்க கிட்ட பேசிட்டுத்தான் செஞ்சிருக்கணும். ஆனா இதப் பற்றி யோசிச்சுக்கிட்டே இருக்கும்போதே நிகழ்ச்சிகள் தானா நடந்திருச்சி.

ஆகவே அம்மாகிட்ட எடுத்துச் சொல்லிடு. பெட்ரோலியம் எஞ்சினியரிங் படிச்சவங்களை எந்த நடுக்கடல்ல வேலைக்கு அனுப்புவாங்கன்னு சொல்ல முடியாது. ஃபிரான்சிஸ்கா நான் போற இடமெல்லாம் வரும். என்னோட இருந்து வேலையும் செய்யும். துணிச்சலான பெண். அதோட பொழுதுபோக்கே செங்குத்

சு. சுவாமி

சொல்லாத கமெண்ட்!

தமிழக அரசு, எல்.டி.டி.இ.-ஐ ஆதரிக்கும் வைகோவைக் கைது செய்த விஷயத்தில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இது வரை ஜெயலலிதாவுக்குப் பாராட்டுத் தெரிவிக்காமைக்கான காரணம் என்ன என்று எனக்கு மட்டும்தான் தெரியும். அதை சமயம் வரும்போது வெளிப்படுத்துவேன். (அதற்குள் சோனியா அந்தக் காரணத்தை என்னிடம் தெரிவித்துவிட வேண்டும்.) இல்லாவிட்டால் சோனியாவும் எல்.டி.டி.இ.க்கும், வைகோவுக்கும் ஆதரவு கொடுப்பதாகத்தான் மக்கள் நினைப்பார்கள் என்று எச்சரிக்கிறேன்.

தான மலைகள்ள ஆணியடிச்சி கயிறுகட்டி ஏர்றதுதான். எனக்கும்கூட மலையேறக் கத்துக் குடுத்திருக்கு.

எங்க கல்யாணம் மலேசியாவிலதான் நடக்கணும்னு முடிவு பண்ணியிருக்கோம். நீயும் அம்மாவும் அண்ணியும்தான் முன்ன நின்னு நடத்தி வைக்கணும்.

அண்ணியோட தங்கச்சி ரொம்ப நல்ல பொண்ணு. அதுக்கு நல்ல மாப்பிள்ளை கிடைப்பார்.

வணக்கம்.

பின் குறிப்பு : இது முக்கியமில்ல, ஆனா ஏன் முன்னமே சொல்லலன்னு கேப்பிங் கன்னுதான் எழுதுறேன். ஃபிரான்சிஸ்கா கறுப்பினப் பெண். அவங்க பெற்றோர்கள் நைஜீரியாவில இருந்து வந்து இங்க குடியேறினவங்க.



அன்புடன்,

தம்பி"

படித்து கொஞ்சம் அயர்ந்திருந்தேன். அதிர்ச்சியாகவும் புதிராகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. தம்பி எதையோ இழக்கிறான் என்றும் எதையோ பெறுகிறான் என்றும் தெரிந்தது. சுழன்றடிக்கும் காலம் என்னும் காற்று, தம்பியை மாற்றியிருக்கிறது. அது நல்லதற்கா கெட்டதற்கா என எனக்கு அலசி அறியத் தெரியவில்லை. ஆனால் நிகழுகின்ற மாற்றம் தடுக்கப்பட முடியாதது என்று மட்டும் தெரிந்தது. அதிலும் இது காதல். காதலித்து அனுபவமில்லாத எனக்கு எப்படித் தெரியும்? அம்மாவை நினைத்துத்தான் கொஞ்சம் அதிர்ந்தேன்.

தம்பியின் மின்னஞ்சலை பிரின்டருக்கு அனுப்பி பிரதி எடுத்தேன். நல்ல வேளை அழகாகத் தமிழிலேயே எழுதியிருக்கிறான். என் பாரத்தை மிகவும் குறைத்துவிட்டான்.

தேநீர்க் கோப்பையுடன் அந்தப் பிரதியையும் தூக்கிக் கொண்டு சமையலறைக்குச் சென்று கோப்பையை வாஷ் பேசினில் வைத்துவிட்டு மங்கையிடம் பிரதியைக் கொடுத்தேன். சாப்பாட்டு நாற்காலியில் அமர்ந்து அமைதியாகப் படித்தாள். பின்னர் என்னிடம் திருப்பிக் கொடுத்தாள். முகம் தொங்கியிருந்தது.

"என்ன நினைக்கிற மங்கை?"

"நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"எப்பவும் நான் நினைக்கிறத முதல்ல தெரிஞ்சிக்கிட்டுதான் நீ நினைக்கிறத சொல்லணுமா? இன்னைக்கு நீயே சொல்!"

கொஞ்சம் பொறுத்திருந்து சொன்னாள். "மொதல்ல இது தம்பியோட வாழ்க்கை. அதுதான் முடிவெடுக்கணும். ரெண்டாவது தம்பி ரொம்ப புத்திசாலி. ஆகவே தப்பா முடிவு எடுத்திருக்காது!"

"உனக்கு வருத்தம் இல்லையா?"

"எதுக்கு? எனக்கு கெடச்ச அதிர்ஷ்டம் எல்லாருக்கும் கிடைக்குமா?"

அவளிடம் நெருங்கிச் சென்று அவள் கன்னத்தில் மெதுவாக முத்தமிட்டேன். நாணிக் குழைந்தாள். செங்குத்தான மலைகளில் ஆணி அடித்து ஏறுகின்ற இங்கிலாந்தில் பிறந்த நைஜீரியப் பெண்கள் நாணுவார்களா என்ற அர்த்தமில்லாத சந்தேகம் வந்தது.

மெதுவாக அம்மாவைத் தேடிப்போனேன். அறைக்குள் ஏதோ படித்துக் கொண்டிருந்தார். அவரிடம் கடிதத்தை நீட்டினேன். அவர் படிக்க ஆரம்பித்தபோது நான் அருகில் இருக்கவில்லை.

அம்மா அன்றிரவு முழுவதும் அறையை விட்டு வரவில்லை. சாப்பாட்டை மங்கைதான் கொண்டு கொடுத்துவிட்டு வந்தாள். அம்மா ஒன்றும் பேசவில்லை என்று சொன்னாள்.

மறுநாள் நான் எழுந்து காப்பியுடன் வாசலுக்கு வந்தபோது அம்மா அதே ஊசி இலை மரத்தின் அருகில்தான் யோசித்தவாறு நின்றிருந்தார்.

"என்னம்மா? இன்னக்கி வெட்டுறதுக்கு ஆள் கூப்பிடட்டுமா?" என்று கேட்டேன்.


பதில் சொல்லாமல் யோசித்து நின்றார். அப்புறம் "பரவாயில்லப்பா, இருந்துட்டுப் போகட்டும். அப்பா ஆசையா கொண்டு வந்து நட்ட மரம்." என்றார். ●






✉ 'விலகினாலும் கூடும் வீரியம்' கட்டுரையைப் படித்தேன். மிகவும் பயனுள்ள, தெரிந்து கொள்ள வேண்டிய தகவலை அளித்தது. சூரியனை விட்டு பூமியானது வெகு தொலைவில் உள்ளபோது 4 டிகிரி வெப்பம் கூடுகிறது என்கிற வானியல் அறிஞர்களின் கூற்று, பூமியில் சம தரையில் வெப்பம் அதிகமாகவும் மலைப்பாங்கான பிரதேசத்தில் வெப்பம் குறைவாகவும் இருப்பதை நினைவுபடுத்துகிறது.

லால்குடி.
எம். இராஜேந்திரன்



விலகினாலும் கூடும் வீரியம்!



சர்ச்சையைக் கிளப்பிய விஜி!

✉ 'சர்ச்சையைக் கிளப்பிய விஜி' கட்டுரை ஒரு பெண் பத்திரிகையாளரின் சாதனைகளை அழகாக எடுத்துரைத்தது. துணிவான அவருடைய செயல்பாடுகள் வியக்க வைத்தன.

திருச்சி - 14, ராஜிராதா

✉ திறமையானவங்க எந்த வேலைகளைச் செய்தாலும் அந்த வேலைகளில் அவர்களது திறமை முழுவதும் காட்டிவிடுவார்கள். அந்த வகையில் 'மிஸ்டர் கூல்' டிராவிட் எப்பொழுதுமே முன்னணிதான்.

மணப்பாறை – 621 306, து. ஆனந்தி ராஜா

✉ ராஜா பட விமர்சனம் பனித்துளியைச் சுமந்து நிற்கும் ரோஜாப்பூவைப் போல கும்மென்றிருந்தது.

வேலூர் - 4, வடமாலவன்

✉ 'இமயத்துடன்' டி.எம்.எஸ்ஸின் தொடரா? மகிழ்ச்சியாய் இருக்கிறது!

மதுரை – 9, இரா. கல்யாண சுந்தரம்.


✉ கிரிக்கெட் வீரர்கள் தொடர்பான பெட்டிச் செய்திகளை வெட்டியெடுத்து ஒட்டிக் கொண்டேன் எனது கிரிக்கெட் ஆல்பத்தில்!

சென்னை – 91,
கே.என். பாலகிருஷ்ணன்.

✉ கராத்தே தியாகராஜனின் அடாவடித்தனங்களுக்கு ஸ்பீட் பிரேக்கர் போட்ட உச்சநீதி மன்றத்தின் அதிரடி நடவடிக்கையை கார்ட்டூன் அசத்தலாய் உணர்த்திவிட்டது.

அயன்புரம்.
த. சத்தியநாராயணன்.

✉ தலையங்கம் படித்தேன். அரசியல்வாதிகள் எதில் ஒற்றுமை காட்டுகிறார்களோ இல்லையோ தங்களுக்கு வேட்டு




வட்ட மேஜை

முல்லை நாயகி அய்யா முல்லை நாயகி!

✉ காஷ்மீரைப் பற்றிய பல வரலாற்று உண்மைகளைக் கட்டுரை எடுத்துத் தந்தது. தாங்கள் கடைசியில் குறிப்பிட்ட முழு அமைதி வருவதற்கு இன்னும் ஒருசில ஆண்டுகள் ஆகலாம் என்பதை படித்தபோது மனத்தில் ஒரு சோக நெருடல் ஏற்பட்டது.

மதுரை - 14,

நெல்லை. தேவமைந்தன்



✉ இயற்கை எழில் கொஞ்சும் காஷ்மீர் என்ற பருவ மங்கையைக் காப்பாற்ற இந்திய அரசு பல கோடிக் கணக்கில் செலவழிக்கின்றது. இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை நாம் கண்டு விட்டால் பொருளாதாரத்திலும், மற்ற துறைகளிலும் மேம்பட்டு நிற்போம்.

மயிலாடுதுறை, ஜி.ஜி.சரவணன்

✉ காஷ்மீர் என்ற அழகிய மாநிலத்தின் சுயசரிதையையே வெகு அழகாக, துல்லியமாக ஜி.எஸ்.எஸ். கண் முன்னே கொண்டு வந்து காட்டிவிட்டார்.

வடலூர், வெ. லட்சுமி நாராயணன்

✉ காஷ்மீரின் கதையைக் கனகச்சிதமாகக் கூறியிருந்தது பயனுள்ளதாக இருந்தது! அமைதியான காஷ்மீர் என்பது சில வருடங்களுக்காவது ஒரு பகல் கனவுதான் என்ற வரிகள் தான் எவ்வளவு உண்மை!

நெய்வேலி, க. சுந்தர்.

வைக்கிற வேட்பாளர்களின் தகுதி குறித்த உச்சநீதி மன்ற ஆணையைத் துச்சமாகப் புறம் தள்ளியிருக்கிறார்கள் மகா ஒற்றுமையோடு. வழக்கம் போல் அப்பாவி வாக்காளன் ஏமாளியாக்கப்பட்டிருக்கிறான்.

மொரட்டுப்பாளையம்,

க.நா. இராஜேஸ்வரன்.

✉ கிரிக்கெட்டில் 'BALL BY BALL DESCRIPTION' என்பார்களே அதுபோல வைகோவின் 'பொடா' கைது விவகார நிகழ்ச்சிகளை ஆதி முதல் அந்தம் வரை விளக்கிய உமது கட்டுரையாளரின் முயற்சி 'ஓ' போட வைத்துவிட்டது.



சென்னை - 26, சி. மகேஷ்

✉ உச்சநீதிமன்றம் வலியுறுத்திய தேர்தல் சீர்திருத்தங்களை அமல்படுத்த முன் வந்த தேர்தல் கமிஷனைக் கண்டிக்க அனைத்து கட்சிகளும் வரிந்து கட்டி ஒன்றுபட்டதிலிருந்தே தெரிகிறது அரசியலில் கிரிமினல்களின் ஆதிக்கம் எந்த அளவில் இருக்கிறது என்பது. தலையங்கம் அரசியல் கட்சிகளுக்கு 'நச்' அடி கொடுத்தது!

பெரியகுளம், வி. சுதர்ஸன்

✉ அட்டையில் மும்பை நாயகியின் படமா? யார் சொன்னது? முல்லை நாயகி அய்யா முல்லைநாயகி!

திசையன்விளை, ஆர்.ஜி.அம்பி

சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி

முன்கதை

காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு, பல்லவ சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த மகேந்திர வர்ம சக்கரவர்த்தியின் குமாரர் மாமல்லர் நரசிம்மருக்கும் அரண்யத்தின் நடுவில் வீடு கட்டிக்கொண்டு, சிற்ப வேலை செய்து வந்த ஆயனச் சிற்பியின் மகள் சிவகாமிக்கும் காதல் ஏற்பட்டு வளர்ந்து வருகிறது.

பல்லவ ராஜ்யத்தின் மேல் படையெடுத்து வந்த வாதாபி புலிகேசியின் சைன்யத்தை எதிர்ப்பதற்காகப் பல்லவ சைன்யத்துக்குத் தலைமையேற்றுப் புறப்படுகிறார் மகேந்திரர். போகும்போது, தம் குமாரரிடம் காஞ்சிக் கோட்டைக்கு வெளியே போவதில்லை என்று வாக்குறுதி வாங்கிக் கொண்டு செல்கிறார்.

ஆயனச் சிற்பிக்காக அஜந்தா வர்ண ரகசியங்களை அறிந்துவரச் சென்ற இளைஞன் பரஞ்சோதி, வழியில் பல்லவ சைன்யத்தில் சேர்ந்து, அரும்பெரும் வீரச் செயல்கள் புரிகிறான். அவனைக் காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தமாக்கும் பொருட்டு, சக்கரவர்த்தி அனுப்பி வைக்கிறார்.

புலிகேசிக்கு முன்பே, தான் காஞ்சியை அடைய வேண்டுமென்ற துராசையோடு படையெடுத்து வரும் கங்க நாட்டு மன்னன் துர்விநீதனை முறியடிக்கும்படி சக்கரவர்த்தி ஓலையனுப்புகிறார். அதன்படி, நரசிம்மரும், பரஞ்சோதியும் புறப்பட்டுச் செல்கிறார்கள். புள்ளலூர்ப் போர்க்களத்தில், நரசிம்மர், துர்விநீதன் படைகளை எதிர்த்து வீரப் போர் புரிந்து கொண்டிருக்கும்போது, சக்கரவர்த்தியும் 'வஜ்ரபாகு' வேஷம் தரித்து, ஒரு சிறு படையுடன் வந்து துர்விநீதன் படைகளைத் தாக்குகிறார். துர்விநீதன் தோற்றோடினாலும், யுத்தத்தின் முழுப் பொறுப்பையும் தம்மிடம் ஒப்படைக்காமல் சக்கரவர்த்தியும் வந்து போரிட்டது நரசிம்மருக்கு வருத்தமளிக்கிறது.

இதற்கிடையில் நாகநந்தி என்னும் புத்த பிக்ஷு மாமல்லரைப் 'பயங்கொள்ளிப் பல்லவன்' என்றும் 'ஸ்திரீலோலன்' என்றும் கூறியதைக் கேட்ட சிவகாமி, அதிர்ச்சியடைந்து

குழம்புகிறாள். அந்தக் குழப்பத்தில், 'சிவகாமியின் புகழ் தூர தேசங்களிலும் பரவ வேண்டுமானால் பல்லவ ராஜ்யத்தை விட்டு வெளியேற வேண்டும்' என்று நாகநந்தி கூறியதைத் தந்தையிடம் வற்புறுத்தி இணங்கச் செய்து, தந்தையையும் அழைத்துக்கொண்டு நாகநந்தியோடு புறப்பட்டுச் செல்கிறாள். அசோகபுரம் என்ற ஊரிலிருந்த புத்த விஹாரத்தில் இவர்களைத் தங்கவைத்த நாகநந்தி மாயமாய் மறைந்து போகிறார்.

அவர்கள் தங்கியிருந்த புத்த விஹாரம் வெள்ளப் பெருக்கில் மூழ்கப் போகும் சமயம், நரசிம்மர் தெப்பத்துடன் வந்து காப்பாற்றி, மண்டபப்பட்டு என்னும் கிராமத்திற்குப் பத்திரமாக அழைத்துப்போகிறார். புள்ளலூர்ப் போர்க்களத்தில் நரசிம்மர் காட்டிய வீரத்தை முன்பே கேள்விப்பட்டிருந்த சிவகாமி, நரசிம்மர் மேல் மேலும் காதலாகிறாள்.

நாகநந்தி, புலிகேசியின் நம்பகமான ஒற்றன் என்பதை அறிந்திருந்த சக்கரவர்த்தி, தொடர்ந்து நாகநந்தியைக் கண்காணித்து வருகிறார். அதனால், நரசிம்மரை, நாகநந்தி கொலை செய்யத் தீட்டிய திட்டம் தோல்வியடைகிறது. அதற்காக நாகநந்தி வைத்திருந்த விஷம் தோய்ந்த கத்தியும் சக்கரவர்த்தியின் வசம் வந்துவிடுகிறது.

இதே சமயம் வாதாபிப் படைகள் காஞ்சியை நெருங்கிக் கொண்டிருந்தபடியால், நரசிம்மரையும் பரஞ்சோதியையும் உடனடியாகக் காஞ்சிக்கு அனுப்பி வைத்த சக்கரவர்த்தி, ஆயனர் தங்கியிருந்த இடத்திற்கு வருகிறார். சிவகாமியைத் தனியாகச் சந்திக்கும் சக்கரவர்த்தி, ராஜாங்க நன்மைக்காக நரசிம்மரை மறந்துவிடும்படி கேட்கிறார். சிவகாமி மறுக்கவே, 'நான் தோற்றேன்' என்கிறார் சக்கரவர்த்தி.

சிவகாமியிடம் இப்படிச் சொல்லிவிட்டுப் புறப்படும் சக்கரவர்த்தி, நெருக்கடியான நேரத்தில் பயன்படுத்திக் கொள்வதற்காக ஆயனரிடம் தாம் கொடுத்திருந்த சிங்க முத்திரையுள்ள இலச்சனையைத் திருடிச் சென்ற நாகநந்தி, அதை ரதசாரதி கண்ணபிரானிடம் காட்டி, அவனுடைய ரதத்தில் காஞ்சி நோக்கிப் புறப்படுவதைக் காண்கிறார். அதைக் கண்ட சக்கரவர்த்தியின் முகத்தில் புன்னகை தவழ்கிறது!

நாற்பத்து ஒன்பதாம் அத்தியாயம்

காஞ்சியில் கோலாகலம்

தக்குறைய அர்த்த ராத்திரியில், வராக நதிக் கரையிலிருந்து புறப்பட்ட மாமல்லரும் தளபதி பரஞ்சோதியும் காஞ்சிமா நகரை நோக்கி விரைந்து சென்றார்கள். வழியில் இரண்டு காத தூரத்துக்கு ஒன்றாக ஏற்பட்டிருந்த இராஜாங்க விடுதிகளில், அவர்களுக்காக மாற்றுக் குதிரைகள் ஆயத்தமாயிருந்தன. உணவும் சிரம பரிகாரம் செய்து கொள்ள வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இவ்வளவுடன் ஒவ்வொரு விடுதியிலும், நூறு குதிரை வீரர்கள் அணிவகுத்து ஆயத்தமாக நின்றார்கள். மாமல்லருடன் வந்த வீரர்களை ஆங்காங்கே தங்கி வரும்படி நிறுத்திவிட்டுப் புதிய துணை வீரர்களுடன் செல்வது, பிரயாணத்தின் விரைவுக்கு அநுகூலமாயிருந்தது.

இந்த முன்னேற்பாடெல்லாம் மாமல்லருக்கு மிக்க வியப்பளித்தது. அதே வழியில் முன்னால் சென்ற தம் தந்தைதான் அந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்துவிட்டுப் போயிருக்க வேண்டும் என்று ஊகித்து, மாமல்லர் அளவற்ற இறும்பூது அடைந்தார். பரஞ்சோதியிடமும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

அதற்குப் பரஞ்சோதி, ''ஆஹா! இதை ஒரு பிரமாதமாகச் சொல்லப்

போகிறீர்களே? சமுத்திரத்தின் ஆழத்தையாவது கண்டுபிடிக்கலாம்; சத்துருமல்லரான மகேந்திரரின் முன்ஜாக்கிரதைக்கு ஆழம் கண்டுபிடிக்க முடியாது. இதையெல்லாம் எட்டு மாத காலம் அவருடன் கூட இருந்து நேரிலேயே பார்த்தேன். அதனாலேதான், சக்கரவர்த்தி எது சொன்னாலும் அதற்கு மாறாக என் மனத்தில் நினைப்பதுகூட இல்லை!'' என்றார்.

வடபெண்ணையாற்றங்கரையில் பல்லவ சைனியத்தோடு எட்டு மாதம் தங்கி, வாதாபி சைனியத்தை மேலே வரவொட்டாமல் தடுப்பதற்குச் சக்கரவர்த்தி கையாண்ட அதிசயமான யுக்திகளையும் தந்திரங்களையும் பற்றிப் பரஞ்சோதி பிரஸ்தாபித்தார். இது மாமல்லருக்கு அவ்வளவு உற்சாகம் அளிக்கவில்லை.

"தளபதி! நீங்கள் என்னதான் சொல்லுங்கள், எதிராளியை நிறுத்தி வைப்பது, ஏமாற்றுவது, பின்வாங்கித் தப்பித்துக் கொண்டு வருவது - இதிலெல்லாம் ஒரு விதப் பெருமையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே!'' என்றார் மாமல்லர்.

அப்போது பரஞ்சோதி, "யுத்தத்தில் பின்வாங்க வேண்டிய சமயமும் உண்டு; எதிர்த்துத் தாக்க வேண்டிய சமயமும் உண்டு. ஒன்று கவனித்தீர்களா? துர்விநீதனைத் துரத்திக்கொண்டு, தென்பெண்ணைக்கு அப்பால் தாங்கள் போக வேண்டாமென்று, சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார். அதற்காகத் தாங்கள் வருத்தப்பட்டீர்கள். ஆனால், துர்விநீதன் தப்பித்துக் கொண்டு விட்டானா? இல்லையே? சக்கரவர்த்தி அதற்கும் ஏற்பாடு செய்திருந்தார் அல்லவா? தென்பெண்ணைக்கு அக்கரையில் திருக்கோவலூர் கோட்டத் தலைவன் அனந்தன் மழவராயனை ஆயத்தமாயிருக்கும்படி செய்திருந்தார் அல்லவா? துர்விநீதன் சமணப் பள்ளியில் ஒளிந்து கொள்ள முயன்றும் தப்ப முடியவில்லையே? இப்போது அவன் மழவராயன் கோட்டையில் சிறைப்பட்டிருக்கிறானல்லவா? பிரபு! பிரம்மாண்ட சைனியங்களை வைத்துக் கொண்டு, யுத்தத்தில் ஜயித்தவர்கள் எத்தனையோ பேர் உண்டு. ஆனால், நமது சக்கரவர்த்தியைப் போல், சொற்ப சைனியத்தை வைத்துக்கொண்டு, மகத்தான எதிரிகளின் மேல் ஜயம் அடைந்தவர்கள் யாரும் இல்லை!'' என்றார்.

"ஆமாம், அதில் என்ன சந்தேகம்? பல்லவ வீரன் ஒவ்வொருவனும் சளுக்க வீரன் பத்துப் பேருக்கு இணையானவன் அல்லவா? புள்ளலூரிலேதான் பார்த்தோமே?'' என்றார் மாமல்லர்.

மகேந்திர சக்கரவர்த்தி சுத்த வீரத்தைக் கைக் கொள்ளாமல், இராஜதந்திரத்தைக் கையாண்டு ஜயிக்கிறார் என்ற எண்ணம், குமார சக்கரவர்த்திக்கு வேம்பாயிருந்தது. அதை அவரால் ஒப்புக்கொள்ளவோ, பாராட்டவோ முடியவில்லை.

பாதி இரவும் ஒரு பகலும் அந்த அபூர்வ சிநேகிதர்கள் இடைவிடாமல் பிரயாணம் செய்து, சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில், காஞ்சி மாநகரின் தெற்கு வாசலை அணுகினார்கள்.


அதே தெற்கு வாசலை, ஒன்பது மாதங்களுக்கு முன்பு, ஒருநாள் அஸ்தமன நேரத்தில், நாகநந்தி பிக்ஷுவுடன் கூட, தான் அணுகியது பரஞ்சோதிக்கு நினைவு வந்தது. அன்று கோட்டைக் கதவின் உள் துவாரத்தின் வழியாக, நகருக்குள் பரஞ்சோதி பிரவேசித்தார். இன்றைக்கு அவ்விதம் பிரவேசிக்க வேண்டியிருக்கவில்லை.

மாமல்லரும் பரஞ்சோதியும் துணையாக வந்த வீரர்களுடன், கோட்டை வாசலை நெருங்கியதும், கோட்டை வாசலின் மேல் மச்சு மண்டபத்தில் ஜய பேரிகைகள் முழங்கின; வெற்றிச் சங்குகள் ஒலித்தன; கொம்புகள் கோஷித்

தன. கோட்டைக்கு உட்புறத்திலிருந்து ஒரே கோலாகலச் சப்தம் எழுந்தது.

கோட்டைக் கதவுகள் 'படார்' என்று திறந்தன. உள்ளே பார்த்தால், நகரம் கண் கொள்ளாக் காட்சி அளித்தது. விசாலமான வீதிகளின் நடுவில், கண்ணுக்கெட்டிய தூரம் பல்லவ வீரர்கள் அணி வகுத்து நின்றார்கள். வீதியின் இரு புறங்களிலும் நகர மாந்தர்கள் நெருங்கி நின்றார்கள். இருபுறத்து வீடுகளின் உப்பரிகை மாடங்களில், திவ்யாலங்கார பூஷிதைகளான இளம் பெண்கள் நின்றார்கள். அவர்கள் பக்கத்தில், மல்லிகை, முல்லை, கொன்றை முதலிய மலர்கள், கும்பல் கும்பலாகக் கிடந்தன. இரண்டு கை நிறைய புஷ்பங்களை எடுத்து, அவர்கள் சித்தமாய் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எதற்காக வென்று சொல்ல வேண்டுமா? வெற்றி வீரராகத் திரும்பி வரும் குமார சக்கரவர்த்தியின் மீது, மலர் மாரி பொழிவதற்காகத்தான்.

காஞ்சி நகரம், அன்று அப்படிக் கோலாகலமாய் இருந்ததற்குக் காரணங்கள் இரண்டு இருந்தன. முதலாவது, வடக்குப் போர்க்களத்திலிருந்து பல்லவ சைனியம், சேனாதிபதி கலிப்பகையின் தலைமையில், காஞ்சிக்குத் திரும்பி வந்து சேர்ந்திருந்தது.





சென்ற சில நாளாக ஜனங்கள் நகரை விட்டுப் போய்க் கொண்டிருந்த படியால், பாழடைந்தது போல் இருந்த நகரம், ஒரு லட்சம் போர் வீரர்களின் வரவினால் கலகலப்பை அடைந்திருந்தது. அதோடு, புள்ளலூர்ச் சண்டையில், மாமல்லரின் மகத்தான வெற்றியைப் பற்றிய செய்தியானது, அனைவருக்கும் உற்சாகத்தை உண்டு பண்ணியிருந்தது. இத்தகைய உற்சாகத்துக்கு காரண புருஷரான குமார சக்கரவர்த்தி மாமல்லர், அன்று நகருக்குத் திரும்பி வருகிறார். அவரை நேரிலேயே பார்க்கப் போகிறோம் என்று தெரிந்த பிறகு, மகா ஜனங்களின் குதூகலத்தைக் கேட்க வேண்டுமா?

தூக்கி நிறுத்தியிருந்த பாலம், அகழியின் மேல் விடப்பட்டதும் மாமல்லர் அதன் வழியாகக் கோட்டைக்குள் பிரவேசித்தார். பரஞ்சோதியும் மற்ற வீரர்களும் அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள். திறந்த கோட்டைக் கதவுகள் மறுபடி சாத்திக் கொண்டன.

கோட்டை வாசலைத் தாண்டி, மாமல்லர் நகர வீதியில் பிரவேசித்ததும், ஏக காலத்தில் ஆயிரக்கணக்கான ரிஷபக் கொடிகள் தெருவெல்லாம் உயர்ந்தன. வீதியில் அணிவகுத்து நின்ற வீரர்கள், அதுவரை அக் கொடிகளைத் தாழ்த்திப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். மாமல்லர் உள்ளே பிரவேசித்ததும் கொடிகள் மளமளவென்று உயர்ந்து, காற்றில் சடசடவென்று அடித்துக் கொண்ட காட்சி, ஏதோ ஓர் இந்திர ஜாலக் காட்சி மாதிரி தோன்றியது. அதிலிருந்து குமார சக்கரவர்த்தி நகருக்குள் பிரவேசித்து விட்டார் என்பதை, நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் நெருங்கி நின்ற ஜனத் திரள்கள் தெரிந்துகொண்டன. அவ்வளவு ஜனங்களும் ஒருவரோடொருவர், அந்தச் செய்தியைக் கூறி மகிழ்ந்து கொண்டபோது, எழுந்த சப்தமானது, ஏழு சமுத்திரங்களும் ஒரேயடியாகப் பொங்கி வந்தது போன்ற பேரொலியை ஒத்திருந்தது.

மாமல்லரை வரவேற்பதற்காகக் கோட்டை வாசலுக்கருகில் அமைச்சர் குழுவினர், மந்திரி மண்டலத்தார் இவர்களுடன் சேனாதிபதி கலிப்பகையாரும் காத்திருந்தார். மாமல்லரும் பரஞ்சோதியும் குதிரைகள் மீதிருந்து இறங்கினார்கள். தங்க நிறமான கொன்றைப் பூக்களை அழகாகத் தொடுத்திருந்த பெரியதொரு மாலையை மாமல்லரின் கழுத்தில் முதல் அமைச்சர் சூட்ட, சேனாதிபதி கலிப்பகையார், "வாழ்க! வாழ்க! புள்ளலூர்ப் போர்க்களத்தில் கங்க நாட்டு மன்னனைப் புறங்கண்ட வீராதி வீர மாமல்லர் வாழ்க! வாழ்க!" என்று கோஷித்ததும், "வாழ்க! வாழ்க!", "ஜய விஜயீ பவ!" என்ற கோஷங்கள் ஆயிரம் பதினாயிரம் கண்டங்களிலிருந்து ஏக காலத்தில் எழுந்து, வானளாவி முழங்கின.

இந்த வரவேற்பு வைபவங்களினால் எல்லாம் மாமல்லருடைய முகத்தில் நியாயமாகத் தோன்றியிருக்க வேண்டிய மலர்ச்சி காணப்படவில்லை. அவருடைய உள்ளத்தில் இன்னதென்று தெரியாத, ஏதோ ஒரு குறை உறுத்திக் கொண்டிருந்தது. தந்தை மகேந்திர சக்கரவர்த்தி முன்னதாக நகருக்கு வந்து, இந்த வரவேற்பு வைபவத்தையெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறார் போலும்! பல்லவ இராஜ்யத்தின் மகத்தான எதிரியின் படைகள் காஞ்சியை நெருங்கி வந்து கொண்டிருக்கும்போது, இந்த வெற்றி முழக்கங்கள் எல்லாம் எதற்காக?

அந்தக்கணமே தந்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல், மாமல்லரின் உள்ளத்தில் பொங்கிற்று. உடனே அவரும் பரஞ்சோதியும் தத்தம் குதிரைகள் மேல் ஏறிக்கொண்டு, அரண்மனையை நோக்கி விரைந்து செலுத்தினார்கள்.

அரண்மனையை அடைந்து, முன் வாசலையும் நிலாமுற்றத்தையும் தாண்டி உள்ளே சென்றதும், அந்தப்புரத்து வாசலில் புவன மகாதேவியார் சேடியார் புடை சூழக் காத்திருப்பதைக் கண்டார். போர்க்களத்திலிருந்து



வெற்றி மாலை சூடித் திரும்பி வந்த வீரப் புதல்வனுக்கு அன்னை ஆரத்தியெடுத்து, திருஷ்டி கழித்த பிறகு, "குழந்தாய்! உன் வீரச் செயல்களைப் பற்றிக் கேட்டு என் தோள்கள் பூரித்திருக்கின்றன. நகர மாந்தர் எல்லாம் சொல்ல முடியாத ஆனந்தத்தில் மூழ்கியிருக்கிறார்கள். ஆனால், உன் முகம் ஏன் வாடிச் சிணுங்கியிருக்கிறது? நெடுந்தூரம் பிரயாணம் செய்த அலுப்பினாலோ?'' என்று சக்கரவர்த்தினி கேட்டாள்.

"ஆம், அம்மா! அதுவும் ஒரு காரணந்தான்; ஆனால், அது மட்டும் அல்ல. இந்த வரவேற்பு வைபவம் ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை. புள்ளலூர்ச் சண்டையில் அடைந்த வெற்றி ஒரு பெரிய வெற்றியா? வாதாபி சைனியம் ஒரு பெரிய சமுத்திரம் என்றால், கங்கர் சைனியம் ஒரு சிறு குட்டைக்குச் சமானம். அந்தச் சிறு படையை முறியடித்ததற்கும் நானே முழுக் காரணம் அல்ல. புள்ளலூர்ச் சண்டையில் நமது வெற்றிக்குக் காரணமானவர் உண்மையில் என் தந்தைதான்! அது போகட்டும், அம்மா! சக்கரவர்த்தி எங்கே?'' என்று மாமல்லர் கேட்டார். அப்போது புவனமகாதேவியின் முகத்தில், ஆச்சரியக் குறி தென்பட்டது.

"இது என்ன குழந்தாய்? அந்தக் கேள்வியை உன்னிடத்தில் கேட்க வேண்டும் என்றல்லவா நினைத்தேன்? என்னை நீ கேட்கிறாயே? அப்பா எங்கே? நீ பார்க்கவில்லையா? உன்னோடு அவர் வரவில்லையா?'' என்றாள் புவனமகாதேவி.

அப்போதுதான் மகேந்திர சக்கரவர்த்தி காஞ்சிக்கு இன்னும் வந்து சேரவில்லையென்பது மாமல்லருக்குத் தெரிய வந்தது.

தமக்கு முன்னாலேயே புறப்பட்டவர் ஏன் இன்னும் வந்து சேரவில்லை? வழியில் ஏதேனும் அபாயம் நேர்ந்திருக்குமோ? வாதாபிப் படைகள் கோட்டையைச் சூழ்வதற்குள் சக்கரவர்த்தி வந்து சேராவிட்டால் என்ன செய்வது? இராஜ்யப் பொறுப்பும் யுத்தம் நடத்தும் பொறுப்பும் தம்மையல்லவா சாரும்? - இத்தகைய பல எண்ணங்கள் மாமல்லரின் உள்ளத்தில் பொங்கி எழுந்தன.

புவனமகாதேவி கூறிய செய்தியானது, மாமல்லருக்கு எவ்வளவு வியப்பை அளித்ததோ, அவ்வளவு பரஞ்சோதிக்கு அளித்ததாகத் தெரியவில்லை. அவர் இதை எதிர்பார்த்ததாகவே தோன்றியது.

ஐம்பதாம் அத்தியாயம்

மந்திராலோசனை

அன்றிரவு ஒன்றரை ஜாமம் ஆனபோது, மந்திராலோசனை சபை கூடியிருப்பதாகவும், குமார சக்கரவர்த்தியின் வரவை அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் செய்தி வந்தது. மாமல்லரும் அன்னையிடம் விடை பெற்றுப் புறப்பட்டார்.

புள்ளலூரிலிருந்து சக்கரவர்த்தி செய்தி அனுப்பியதன் காரணமாகத்தான் இன்றிரவு இந்த மந்திராலோசனை சபை கூடியது. * மந்திரிகளும், அமைச்சர்களும், கோட்டைத் தலைவர்களும் மந்திராலோசனைக்கு அழைக்கப்பட்டு வந்திருந்தார்

* பல்லவ சாம்ராஜ்யத்தில் மந்திரி மண்டலம் என்றும் அமைச்சர் குழு என்றும் இரண்டு சபைகள், சக்கரவர்த்திக்கு இராஜ்ய நிர்வாகக் காரியங்களில் துணை செய்தன. மந்திரிகள் ஆலோசனை சொல்வதற்கு உரியவர்கள் அமைச்சர் அல்லது அமாத்தியர் காரிய நிர்வாகத் தலைவர்கள். சாம்ராஜ்யம் பற்பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு தலைவன் உண்டு. நெருக்கடியான சமயங்களில் கோட்டத் தலைவர்களும் மந்திராலோசனைக்கு அழைக்கப்படுவார்கள்.



கள்.

தளபதி பரஞ்சோதி பின்தொடர, மாமல்லர் மண்டபத்திற்குள் பிரவேசித்ததும் அங்கே கூடியிருந்தவர் எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்தார்கள்! பிறகு பீடங்களில் அமர்ந்தார்கள்.

சக்கரவர்த்தியின் சிம்மாசனம் வெறுமையாயிருந்தது. அதனருகில் போட்டிருந்த மற்றொரு சிம்மாசனத்தில் மாமல்லர் அமர்ந்தார். அவருக்குப் பின்னால் பரஞ்சோதி நின்றுகொண்டிருந்தார். அவருக்கு ஏனோ உட்கார மனம் வரவேயில்லை. ஏதோ எதிர்பாராத சம்பவங்கள் நடக்கப் போவதாக அவருடைய உள்ளுணர்ச்சி சொல்லிக்கொண்டிருந்தது. இதனால் ஏற்பட்ட பரபரப்பு அவருடைய முகத்தில் பிரதிபலித்தது.

முதன்மந்திரி சாரங்கதேவ பட்டர் சபையை ஆரம்பித்து வைத்தார். அவர் சபையைப் பார்த்துக் கூறியதாவது:

"இன்றைக்கு இந்த நேரத்தில் மந்திராலோசனை சபை கூட்டும்படியாகச் சக்கரவர்த்தி ஆக்ஞை இட்டதன் பேரில், இங்கே கூடியிருக்கிறோம். ஆனால், சக்கரவர்த்தி இன்னும் வந்து சேரவில்லை. விசித்திர சித்தரான நம் சக்கரவர்த்தி, வேறு முக்கிய அலுவல்களில் ஈடுபட்டிருப்பதனால் இன்னும் வந்து சேரவில்லையா? அல்லது எதிர்பாராத இடையூறுகளினால் தடுத்து நிறுத்தப்பட்டாரா என்பதும் தெரியவில்லை. இந்த நிலைமையில் மந்திராலோசனையைத் தள்ளிப் போடுவதா அல்லது குமார பல்லவரின் தலைமையில் சபையை நடத்துவதா என்று முதலில் தீர்மானிக்க வேண்டும். சக்கரவர்த்தி ஒன்பது மாதத்துக்கு முன்பு, வடக்குப் போர்க்களத்துக்குச் சென்றபோது, மாமல்லருக்குச் சர்வ இராஜ்ய அதிகாரங்களையும் கொடுத்து விட்டுச் சென்றார். எனவே, மாமல்லரின் தலைமையில் மந்திராலோசனை நடத்தலாம் என்றே நான் நினைக்கிறேன். உங்கள் எல்லோருடைய அபிப்பிராயமும் அவ்விதமே இருக்கும் என்று கருதுகிறேன்."

முதன்மந்திரியின் மேற்படி பிரேரணையை, "ஆம், ஆம்" என்று கூறிச் சபையோர் அனைவரும் ஆமோதித்தார்கள்.

பின்னர், முதல் அமைச்சர் ரணதீர பல்லவராயர் சொன்னதாவது: "இந்தச் சபையைத் தள்ளிப் போட்டு, சக்கரவர்த்தி வருகிற வரையில் காத்திருப்பதற்கு முடியாத நிலைமையில் நாம் இருக்கிறோம். வாதாபியின் முன்னணிப் படைகள் கோட்டைக்கு இரண்டு காத தூரத்தில் வந்துவிட்டன. இந்த நிலைமையில் நாம் செய்ய வேண்டியது என்னவென்பது பற்றிக் குமார சக்கரவர்த்தியின் அபிப்பிராயத்தையும், ஆக்ஞையையும் அறிய விரும்புகிறோம். வடக்குப் போர்க்களத்திலிருந்து, நம் வீர பல்லவ சைனியத்தைச் சேதமடையாமல் கோட்டைக்குள்ளே கொண்டு வந்து சேர்த்த சேனாதிபதி கலிப்பகையாரும் நமது கடமையைப் பற்றி தமது அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துவாரென்று எதிர்பார்க்கிறோம்."

செஞ்சிக் கோட்டைத் தலைவன் சடையப்ப சிங்கன் சொன்னான்: "சக்கரவர்த்தியைப் பற்றிய செய்தியை முதலில் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். வடக்குப் போர்க்களத்தில் நமது சேனாதிபதியுடன் பல்லவேந்திரர் இருப்பதாகவே இத்தனை காலமும் எண்ணிக் கொண்டிருந்தோம். சைனியத்தை விட்டுப் பிரிந்து சக்கரவர்த்தி எங்கே போனார் என்பதைச் சேனாதிபதி தெரிவிக்கக் கூடுமா?"

சேனாதிபதி கலிப்பகையார் கூறினார்: "பத்து தினங்களுக்கு முன்னால் சக்கரவர்த்தி இரண்டாயிரம் வீரர்களுடன் வடக்குப் போர்க்களத்திலிருந்து புறப்பட்டார். காஞ்சிக் கோட்டைக்குச் சைனியங்களுடன் வந்து சேரும்படி எனக்குக் கட்டளையிட்டு விட்டுச் சென்றார். அப்புறம் எனக்குத் தகவல் ஒன்றும் தெரியாது. புள்ளலூர்ப் போர்க்களத்துக்குச் செல்வதாக நான் ஊகித்தேன்.

சக்கரவர்த்தி அழைத்துச் சென்ற வீரர்களில் திரும்பி வந்திருப்பவர்கள் அவ்விதமே சொல்கிறார்கள்."

'புள்ளலூர்ப் போர்க்களம்' என்றதும் அங்கிருந்தோர் அனைவருடைய கண்களும் மாமல்லரை நோக்கின. சபையின் நோக்கத்தை அறிந்துகொண்டு மாமல்லர் பேசினார்:

"சேனாதிபதி ஊகித்தது உண்மை. தந்தை புள்ளலூர்ப் போர்க்களத்துக்குத்தான் வந்தார். ஆனால், இன்னும் இங்கு வந்து சேரவில்லையென்பது எனக்கும் வியப்பாகவே இருக்கிறது. உங்களையெல்லாம் கோட்டை வாசலில் சந்தித்தபோது, என் தந்தை அரண்மனையில் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று எண்ணினேன். அரண்மனைக்கு வந்ததும் பெரும் ஏமாற்றமடைந்தேன். என் அருமைத் தோழர் பரஞ்சோதிக்குச் சக்கரவர்த்தி அனுப்பியிருந்த ஓலையிலிருந்து, அவ்விதம் நாங்கள் நினைக்க நேர்ந்தது. தளபதி! எல்லா விவரங்களையும் இவர்களுக்குச் சொல்லுங்கள்!"

அவ்விதமே தளபதி பரஞ்சோதி, புள்ளலூர்ப் போரின் விவரம், துர்விநீதன் தோற்று ஓடியது, அவனைத் துரத்திக்கொண்டு தாங்கள் சென்றது, சக்கரவர்த்தியும் வேறு மார்க்கமாகத் தெற்கு நோக்கி வந்தது, மாமல்லர் வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு, மண்டபப்பட்டுக் கிராமத்தில் ஒதுங்கியது, தாம் அவரைத் தேடியது, துர்விநீதனைச் சக்கரவர்த்தி சிறைப்படுத்திவிட்டுத் தமக்கு ஓலை அனுப்பினது ஆகிய விவரங்களைச் சபையோருக்கு எடுத்துக் கூறினார். ஆயனர் - சிவகாமி விஷயத்தை மட்டும் அவர் பிரஸ்தாபிக்கவில்லை.

அதன் மேல் முதன்மந்திரி சாரங்க தேவபட்டர் கூறியதாவது: "சக்கரவர்த்தி இல்லாத சமயத்தில் நம்முடைய பொறுப்பு பன்மடங்கு அதிகமாயிருக்கிறது. தென்தமிழ்நாடு இதுவரையில் கண்டிராத பெரிய பகைவர் படை நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. அந்த நிலைமையில் நாம் செய்ய வேண்டியதைப் பற்றிக் குமார சக்கரவர்த்தியின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். கோட்டைத் தலைவர்களும், மாமல்லரின் ஆக்ஞையை எதிர்பார்க்கிறார்கள். காஞ்சிக் கோட்டை முற்றுகைக்கு உட்படுவதற்குள் அவர்கள் தங்கள் தங்கள் கோட்டத்துக்குத் திரும்பிப் போய் விட வேண்டுமல்லவா?"

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மாமல்லர் உடனே மறுமொழி எதுவும் சொல்லவில்லை. ஏதோ தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தவராகக் காணப்பட்டார்.

அதைக் கவனித்த முதல் அமைச்சர் ரணதீர பல்லவராயர், "முதலில் வடக்குப் போர்க்களத்திலிருந்து திரும்பி வந்திருக்கும் சேனாதிபதி கலிப்பகையார் தமது அபிப்பிராயத்தைச் சொல்லுவது நல்லது. சக்கரவர்த்தி இந்தச் சபை கூட்டச் சொன்னதன் நோக்கம் என்ன என்பது அவருக்குத் தெரிந்திருக்கக் கூடும்!" என்றார்.

சேனாதிபதி கலிப்பகையார் தம் ஆசனத்திலிருந்து எழுந்து நின்று சொல்லத் தொடங்கினார்: - "சக்கரவர்த்தி இந்த மந்திராலோசனைச் சபையைக் கூட்டியதன் காரணம், காஞ்சி முற்றுகை சம்பந்தமானதுதான். முற்றுகை ஒருவேளை ஓராண்டுக் காலம் நீடித்தாலும் நீடிக்கலாம் என்று சக்கரவர்த்தி எதிர்பார்க்கிறார். இந்த ஒரு வருஷமும் கோட்டைக்குள்ளே இருப்பவர்களுக்கும் வெளியில் இருப்பவர்களுக்கும் சம்பந்தம் எதுவும் இராது. ஓலைப் போக்குவரவுக்கும் இடமிராது. காஞ்சிக்

அருள்வாக்கு!

இப்போது ஸர்க்காரே கடன் வாங்குவதாக ஆகிவிட்டிருக்கிறது. அதே வழியில், வேண்டாத வஸ்துக்களையெல்லாம் ஜனங்களும் அத்யாவச்யமாக்கிக் கொண்டால், எல்லாரும் கடனாளியாக வேண்டியதுதான், கடன் வாங்காமலிருப்பதே பெரிய உபகாரம். ஏனென்றால் நாம் கடன் வாங்கிச் செலவழிக்கிறபோது, நாம் கர்மம் பண்ண முடியாது என்பதோடு, மற்றவர்களையும் கடன் வாங்கி டாம்பீகம் செய்யத் தூண்டுகிறோம். பிறத்தியாருக்கு ஸாத்யமில்லாத ஆசைகளைக் கிளப்பி விடுகிற விதத்தில் எவனொருத்தனும் டாம்பீகமாக வாழ்கிறதுதான் பெரிய ஸமூஹ த்ரோகமான கார்யம். அநாதியான நம் சாஸ்த்ரங்களிலிருந்து நேற்று காந்தி வரையில் சொல்லி வந்த எளிய வாழ்க்கையை (simple living) வசதியுள்ளவர்களும் மேற்கொண்டால் எந்தக் கம்யூனிஸமும், வர்க்கப் போராட்டமும் வரவே வராது. எளிய வாழ்க்கையால் இவன் நிறைய மிச்சம் பிடித்துத் தர்மமும் பரோபகாரமும் செய்வது ஒரு பக்கம்; இதைவிட முக்யமாக மற்றவர்களுக்கு ஆசை. அஸூயை, கடன் இவற்றை ஏற்படுத்தாமல் இருக்கிறானே, இதுதான் பெரிய உபகாரம். வரவே சிறுத்து, செலவே பெருகினால், அது திருட்டு என்றே ஆன்றோர் மொழி இருக்கிறது. கடன் வாங்கின பணம் இன்னொருத்தனுடையதுதானே? அந்தப் பணம் தனக்கு வருமா, வருமா என்று இவன் (திருப்பிக்) கொடுக்கிற வரையில் அவன் திருட்டுக் கொடுத்துவிட்டது போல, அவஸ்தைப்பட்டுக் கொண்டுதானே இருப்பான்? அதனால்தான் இதைத் திருட்டு என்றே சொல்லியிருக்கிறது. 'கடன் பட்டார் நெஞ்சம்' மட்டுமில்லாமல், 'கடன் கொடுத்தார் நெஞ்ச'மும் கலங்கும்படியாக இப்படி இரண்டு சாராருக்கும் அபகாரம் பண்ணுகிற இரவல் பழக்கதை விடுவதே பெரிய உப காரம்தான்.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்

கோட்டை முற்றுகைக்கு உட்பட்டிருக்கும் காலத்தில், நமது கோட்டத் தலைவர்கள் செய்ய வேண்டியது என்ன என்பதை, அவர்களுக்குச் சக்கரவர்த்தி சொல்ல விரும்பினார். அவர் சொல்ல விரும்பியது என்ன என்பதை நான் அறியேன்."

"சேனாதிபதியை ஒன்று கேட்க விரும்புகிறேன். வாதாபிப் படைகள் கோட்டை வாசலுக்கு எப்போது வந்து சேரும் என்று நினைக்கிறீர்கள்?" என்று கோட்டத் தலைவரில் ஒருவர் கேட்டார்.

"நாளைச் சூரியோதயத்துக்கு வந்து சேரலாம். அஸ்தமனத்துக்குள் கோட்டையை நாலாபுறமும் சூழ்ந்து கொள்ளக்கூடும்."

"அப்படியானால், கோட்டைக்கு வெளியே போகிறவர்கள் நாளைச் சூரியோதயத்துக்குள் போய் விட வேண்டுமல்லவா?"

"சக்கரவர்த்தி இன்று இரவுக்குள்ளே வந்து சேராவிட்டால், கோட்டத் தலைவர்கள் அவர்களுடைய ஊர்களுக்குத் திரும்பிச் சென்று விடுவதுதான் நல்லது. சக்கரவர்த்தியின் ஆக்ஞை அவர்களைத் தேடிக் கொண்டு வந்து சேரும் என்று எதிர்பார்க்கலாம்."

சற்று நேரம் மௌனம் குடி கொண்டிருந்தது. எல்லாரும் மாமல்லருடைய முகத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

''குமார சக்கரவர்த்தியின் ஆக்ஞையை எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்'' என்று முதல் மந்திரி கூறினார்.

மாமல்லர் தமது ஆசனத்திலிருந்து கம்பீரமாக எழுந்தார். சபையோர் அனைவரையும் ஒருதடவை பார்த்தார். பிறகு கூறினார்: ''பத்து மாதங்களுக்கு முன்பு சக்கரவர்த்தி காஞ்சியை விட்டுப் புறப்பட்டபோது, தாம் திரும்பி வரும்வரை, தம்முடைய ஸ்தானத்தில் சகல இராஜ்யாதிகாரங்களையும் வகிக்கும்படி எனக்குக் கட்டளையிட்டார். அது உங்களுக்கெல்லாம் நினைவிருக்கிறதல்லவா?''

''நினைவிருக்கிறது!'' என்று சிலர் சொன்னார்கள். இன்னும் சிலர் ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார்கள்.

ஏதோ விபரீதமான யோசனை வரப்போகிறதென்று எண்ணியவர்களைப் போல் மற்றவர்கள் மௌனமாயிருந்தார்கள்.

''சக்கரவர்த்தி இன்னும் திரும்பி வரவில்லை. ஆகவே, அவர் எனக்கு அளித்த இராஜ்யாதிகாரத்தை இன்னும் நான் வகிக்கலாமல்லவா? அது உங்களுக்கெல்லாம் சம்மதந்தானே?''

''சம்மதம்! சம்மதம்'' என்பதாகச் சபையில் பல குரல்கள் ஏக காலத்தில் கோஷித்தன.

முதன்மந்திரி எழுந்து நின்று, ''பல்லவ குமாரா! சக்கரவர்த்தி எங்களை ஆலோசனை கேட்கும்போது, நாங்கள் எங்கள் கருத்தைச் சொல்வோம். அது போலவே தாங்கள் கேட்டாலும் எங்கள் அபிப்பிராயத்தைச் சொல்கிறோம். தீர ஆலோசித்தபின் தாங்கள் எப்படிக் கட்டளையிடுகிறீர்களோ, அப்படியே நடத்தி வைப்போம். யோசனை சொல்வதற்குத்தான் எங்களுக்கு உரிமை; ஆக்ஞையிடும் உரிமை தங்களது'' என்றார்.

''சந்தோஷம். நீங்கள் சொல்ல வேண்டிய யோசனையெல்லாம் சொல்லுங்கள்; கேட்டுக்கொள்கிறேன். ஆனால் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நான் முன்னமே முடிவு செய்துவிட்டேன். மந்திரிகளே! அமைச்சர்களே! கோட்டத் தலைவர்களே! அனைவரும் கேளுங்கள். படையெடுத்து வந்த பகைவர்களுக்குப் பயந்து, கோட்டைக்குள் ஒளிந்துகொள்வது என்பது, பல்லவ குலத்துக்கு என்றும் அழியாத அவமானத்தை உண்டு பண்ணக் கூடியது. தொண்டைமான் இளந்திரையன் வழி வந்த வீர பல்லவ வம்சத்துக்கு, இந்த மகத்தான களங்கம் என்னுடைய காலத்தில் ஏற்படுவதை நான் ஒருநாளும் சகிக்க முடியாது. இந்தக் கோட்டைக்குள் இன்று சுமார் ஒரு லட்சம் பல்லவ வீரர்கள் போருக்குத் துடிதுடித்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். அவர்களை அழைத்துக்கொண்டு நாளைக்கே வெளியேறி, நமது கோட்டை வாசலில் வாதாபி சைனியத்தைத் தாக்குவது என்று முடிவு செய்துவிட்டேன். அதற்கு உங்களுடைய சம்மதத்தை எதிர்பார்க்கிறேன். தளபதி பரஞ்சோதி என்னுடன் போர்க்களத்துக்கு வருவார். பரஞ்சோதிக்குப் பதிலாக சேனாதிபதி கலிப்பகையாரைக் கோட்டைக் காவலுக்கு நியமிக்கிறேன். இதற்கு உங்களுடைய சம்மதம் தெரிந்து கொண்ட பிறகு, வெளியூர்க் கோட்டத் தலைவர்களுக்கு நான் சொல்ல வேண்டியதைச் சொல்கிறேன்.''

மாமல்லர் பேச்சை நிறுத்தியபோது, இடி இடித்து ஓய்ந்தது போலிருந்தது. மந்திரிகளும் அமைச்சர்களும் ஒருவரது முகத்தை ஒருவர் பார்த்தார்கள். யாருக்கும் பேச நா எழவில்லை.

(தொடரும்)



மேஷம் : குடும்ப நலம் சீராக இருந்துவரும். குருவின் பார்வை 8, 10 மற்றும் 12ம் இடமான தன் வீட்டைப் பார்ப்பது நலமாகும். அதனால் குடும்பத்தில் சுப காரிய நிகழ்ச்சி, குல தெய்வ பூஜை, ஸ்தல யாத்திரை போன்றவை நிறைவேறும். இதுவரை படுத்தி வந்த ஏழரைச் சனி விலகுவதால், அதிர்ஷ்டமான திருப்பம் உண்டாகும். பொருளாதார நிலையில் அபிவிருத்தி உண்டாகும். குடும்பத்தில் இருந்து வந்த சலசலப்பு முன் விரோதம் குறையும். மறைமுக, நேர்முக எதிர்ப்புகள் குறையும். உத்தியோகத்தில் சில குழப்பங்கள் நேர்ந்து பிரச்னை தரும்.

ரிஷபம் : தள்ளிப் போட்டுக் கொண்டே போன சில முக்கியமான விவகாரங்களில், சரியான முடிவு எடுத்து நிம்மதி பெறுவீர்கள். பண நடமாட்டத்துக்குக் குறைவில்லை. சனி கிரகம் ராசியை விட்டு விடுவதால், உடல் ஆரோக்கிய மேன்மை அடையும். உங்கள் உழைப்பு, திறமை மூலம் சாதனை படைப்பீர்கள். எந்த வியாபாரம் செய்தாலும், தொட்டது துலங்கும். கொடுக்கல் வாங்கல் கை கொடுக்கும். சனி, ஜென்ம ராசியை விட்டு விலகுவதால் சகல தடைகளும் நீங்கப் பெற்று, தெய்வானுகிரகம் அதிகரிக்கும்.

மிதுனம் : உங்கள் திட்டங்கள் யாவும் நிறைவேறும். உடல் ஆரோக்கியம் சீரான மேன்மையடையும். எதிர்பாராத பயணம் மேற்கொள்ள வேண்டி வந்தால், தயங்க வேண்டாம். அதனால் அனுகூலம் உண்டாகும். குரு 2-ம் இடத்தில் சஞ்சாரம் என்பதால், குருபலம் பூர்ணமாக இருப்பதால், குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் கூடிவரும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகி ஆரோக்கியமானச் சூழ்நிலை உண்டாகும். புதிய உத்தியோக முயற்சியில் உற்சாகமான தகவல் வந்து சேரும். வியாபாரிகள் வளர்ச்சி அடைவார்கள். பண வசதி அதிகமாகும். பெண்கள் தத்தம் எண்ணம் நிறைவேறப் பெறுவார்கள்.

கடகம் : ஒரு நாள் தலைவலி, மறுநாள் ஜலதோஷம், காலையில் வாய்வுப் பிடிப்பு, சாயங்காலம் ஜுரம் என அல்லல்பட்டு வந்திருப்பீர்களே. இனி கவலையே வேண்டாம். உங்கள் ஆரோக்கியம் நல்ல மேன்மை பெறும். ராகு, கேது பலம் என்பதால் வெளிநாடு செல்லும் வாய்ப்பு கூடி வரும். வண்டி, வாகனம், போக்குவரத்து, இயந்திரம், ரியல் எஸ்டேட் இனங்களில் நல்ல முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் தினமும் வடை பாயசம் தான்! அந்த அளவுக்கு விருந்து, உபசாரம், கேளிக்கை, விருந்தினர் என்று கொண்டாட்டம் ஏற்படும்.

சிம்மம் : வியாபாரம் செய்பவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொருளாதார சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும். சனி 11ல் இருப்பதால், வந்த நெருக்கடிகளை எல்லாம் சுலபமாகத் தீர்த்துக் கொள்வீர்கள். இருந்தாலும் அசட்டு தைரியம் கூடாது. புதிய வியாபாரம் அல்லது தொழில் முயற்சிகளை ஒத்திப் போடவும். வார பிற்பகுதியில் நிலைமை படிப்படியாக முன்னேற்றம் காணும். குடும்பத்தில் நண்பர்கள், உறவினர்கள் வகையால் கலகலப்பு கூடும். தெய்வ பலம் கூடியிருப்பதால், நிம்மதியான மன நிலை மீண்டும் கிடைக்கும்.



கன்னி : ராசிநாதன் 12ல் சுக்ரன் ஜென்ம ராசியில் உலவுவதால், உடல்நலம் சீராக இருக்கும். வெளியூர் மற்றும் வெளிநாட்டிலிருந்து உற்சாகமான தகவல் வந்து சேரும். தாமதமடைந்த காரியங்கள் இப்போது நிறைவேறும். சனி பகவான் 10ம் இடத்தில் உலவுவதால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகாமல் பக்குவமாய் நடந்து கொள்வது நல்லது. சக ஊழியர்களிடம் சகஜமாக இருப்பது உத்தமம். வியாபாரத்தில் உற்சாகமான நிலைமையிருக்கும். புதிய தொழில் முயற்சிகள் வெற்றி தரும். சனி 10ல் இருப்பதால் சனி ப்ரீதி

செய்யவும் தேவையில்லாத விஷயங்களில் மூக்கை நுழைக்காமல் இருந்தாலே பாதி பிரச்னை குறையும்.

துலாம் : எட்டில் இருந்து வாட்டி வதைத்த சனி, தற்போது 9ல் உலவுவதால், உடல் ஆரோக்கியம் மேன்மை அடையும். கொடுக்கல் வாங்கல் சுமுகமாகும். நண்பர்கள், உறவினர்கள் வகையில் ஒற்றுமையான சூழ்நிலை உருவாகும். பூர்வீக சொத்து விஷயங்களில் பிரச்னைகள் நீங்கி, சமரசம் உண்டாகும். 'சொந்த வீடு கட்டுவோமா? இல்லை வாடகை வீடே கதியா?' என்று கலங்கிப் போயிருந்தவர்களுக்கு, இப்போது புதிய வீடு கட்டும் அல்லது வாங்கும் சூழ்நிலை உருவாகும். குரு மங்கள யோகமிருப்பதால், எல்லா காரியங்களிலும் வெற்றி ஏற்படும்.

பாடகி நித்யஸ்ரீ கணவர் மகாதேவனுக்குப் (தனுசு) புதிய முயற்சிகள் கை கூடுமாம்.

விருச்சிகம் : ராசிநாதன் நீச்சம் அடைந்து, சூரியன், குருவுடன் கூடி யோக பலம் பெற்றுள்ளதால் எதிரிகள் சுருண்டு விழுவார்கள். எதிர்ப்புகள் உருண்டு ஓடும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பணப் புழக்கம் தாராளமாக இருந்து மனமகிழ்ச்சி தரும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் அபிவிருத்தி காண்பார்கள். குரு பலம் பரிபூரணமாக அமைந்திருப்பதால் பொன், வெள்ளி, ஆபரணம், அணிமணி சேர்க்கை கிடைக்கும். குறிப்பாகப் பெண்களுக்குச் சாதகமான வாரம். அரசியல்வாதிகள் அளவோடு நன்மை பெறுவார்கள்.

தனுசு : உங்கள் ராசிக்கு, குரு மங்கள யோகம் உண்டாகியிருப்பதால், மூன்று கிரகங்கள் எட்டாம் இடத்தில் சஞ்சரிப்பது பற்றிக் கவலைப்பட வேண்டாம். கல்வியில் மேன்மை, கல்வி சம்பந்தமான துறைகளில் வெற்றி, உடல் ஆரோக்கியம் மற்றும் பொருளாதார நிலையில் மேன்மை உண்டாகும். புதிய உத்தியோக முயற்சிகள் கை கூடும். அலுவலகத்தில் அனுகூலமான சூழ்நிலை உண்டாகும். சுய தொழில் செய்பவர்கள் லாபம் அள்ளிக் குவிப்பார்கள்.

மகரம் : நீங்கள் வெகுகாலம் எதிர்பார்த்துக் காத்திருந்த, நல்ல திருப்பம் ஒன்று இந்த வாரம் நிகழும். அதனால் உங்களை அழுத்திக் கொண்டிருந்த சகலவிதமான சங்கடங்களும் விலகும். பொருளாதார நெருக்கடி விலகி அதிர்ஷ்டமான சூழ்நிலை உண்டாகும். உத்தியோகம் சம்பந்தமாக வெளிநாடு போகும் முயற்சி அனுகூலமான பலனைத் தரும். பழைய கடன் பாக்கி தீரும். 7ல் உள்ள கிரக அமைப்பினால், குடும்பத்தில் சிற்சில பிரச்னைகள் ஏற்பட்டு மறையும். வாழ்க்கைத் துணை நலம் கவனம் தேவை. மருத்துவச் செலவு ஏற்படலாம். குரு 11ம் வீடு ஜென்ம ராசி மற்றும் தன் வீடான மீன ராசியையும் பார்ப்பது சிறப்பாகும்.

சிம்மம் : இந்த ராசி அன்பர்களுக்குக் கிரக சஞ்சாரம் சிறப்பாக உள்ளது. ராசிநாதன் 5ல், 6ல் செவ்வாய், குரு, சூரியன் சஞ்சாரம் என்பதால், தெய்வானுக்கிரகம் பூர்ணமாக அமையும். கடன் தொல்லைகள் நிவர்த்தியாகும். ஆரோக்கியம் மேன்மையடையும். மனத்திலிருந்த அச்சம் நீங்கி, தெளிவான மனோநிலையும், துணிவான பார்வையும் அமையும். தனியார் நிறுவனத்தில் பணி புரிபவர்கள், உயர்ந்த பதவிக்கு வருவார்கள். கொடுக்கல் வாங்கலில் ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகள் பெயரும் புகழும் பெறுவார்கள். குடும்பத்தில் கணவன் - மனைவி உறவு நிலை இனிமையாக இருந்து வரும்.

மீனம் : உங்கள் ராசிநாதன் பூர்வ புண்ணிய ஸ்தானமாகிய 5ல் உச்சம் பெற்று, செவ்வாய் சூரியனுடன் கூடியுள்ளதால், தெய்வ பலம் பரிபூர்ணமாக அமையும். தாராளமான பண நடமாட்டம், பொருளாதார நிலையில் அபிவிருத்தி, பயணத்தால் மேன்மை, உடல் ஆரோக்கியத்தில் சிறப்பு என சுபப்பலன்களே நடக்கும். உத்தியோகத்தில் சுதந்திரமாகச் செயல்பட்டு முன்னுக்கு வருவீர்கள். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை ஏற்படும். வியாபாரிகளுக்கும் முன்னேற்றமான காலம். சுபகாரியங்கள் நடக்கும் வாய்ப்புகள் அதிகம்.



அன்னமே பிரம்மா! அன்னமே விஷ்ணு! அன்னமே சிவன்!

புண்ணியக்ஷேத்ரம் இராமேஸ்வரத்தில் ஆடி அமாவாஸை திதியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். ராமஸேது என்றும், ஸேது ஸ்தலம் என்றும் போற்றப்படும் இராமேஸ்வரம் புகழ்மிக்க புண்ணிய க்ஷேத்ரமாகும். இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் அழியாத புண்ணியப் பலன் கிடைக்கும்.

இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். அனைவரும் நலம் பெறுவர். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். அன்னமளிப்பது அமிர்தமளிப்பதற்கு சமம். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். வறுமை நீங்கி, பெரும் பணக்காரனாவான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

- ★ சிறியதொகை மற்றும் அரிசி போன்ற உணவு பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
- ★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.10,000 அனுப்பும் அன்பர்களுக்கு ஆயுள்காலம் முழுவதும் கோபுர தரிசனம் மாத இதழ் அனுப்பி வைக்கப்படும்.

ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் அல்லது பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும். ரூ. 5,000 மற்றும் ரூ. 10,000 அளிக்கும் அன்பர்களுக்கு கவி-நியாய-மீமாம்ஸ சிரோமணி ஸ்ரீமான் திருவெண்காடு டி.கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகளால் தயாரிக்கப்பட்டு பூஜையில் வைத்த யந்திரம் அன்பர்களின் விருப்பத்திற்கேற்ப எந்த யந்திரம் தேவையோ அந்த யந்திரம் இலவசமாக வழங்கப்படும். மேலும் பகவத்கீதை புத்தகம் அல்லது கந்தபுராணம் புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். ரூ. 10,000 அனுப்பும் அன்பர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் பிரசாதம் அனுப்பிவைக்கப்படும். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு அணில் செய்த ஸேவை போல் இந்த லோகக்ஷேமத்திற்கு நம்மால் இயன்றளவில் உபகாரம் செய்திடுவோம். நேரில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41 என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை

GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F-4, TNHB FLATS, I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA

☎: 4900303, 4900603 Fax: (044)4916316 E-mail: gopuradarisanam@yahoo.com

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து



சிரித்து வாழ வேண்டும்!

திரைப்பட வில்லன் அசுதோஷ் ராணாவை, அசல் வாழ்வில் தன் ஹீரோவாக்கிக் கொண்டு, வயிற்றில் இன்பச் சுமையுடன் முகமெல்லாம் பூரிப்பாய், பூவாய் மலர்ந்திருக்கிறார் ரேணுகா சுஹானே! புன்னகை ஸ்பெஷலுக்காகச் சந்தித்தோம்...

கே: ஆரோக்கியமான சிரிப்பென்பது...?

ப: உடலளவில் – பளீர் வெண்மையுடன் கூடிய, பளிச்சென்ற சுத்தமான பற்களைப் பறைசாற்றுகின்ற, அழகிய உதடுகளை நீள் பரப்பில் விரியச் செய்யும் முழுமையான சிரிப்பு; உள்ளத்தளவில் – சில்மிஷங்களோ சின்னத்தனங்களோ கலக்காமல், இதய ஆழத்திலிருந்து குபீரிடும் சத்தியச் சிரிப்பு!

கே: உங்களுடையது 'ஒரிஜினல்' சிரிப்புதானே? கலைத்துறைக்கென போட்டுக்கொண்ட 'ட்ரேட் மார்க்' சிரிப்பில்லையே?

ப: ஐ.எஸ்.ஐ. ப்ராண்ட் பதித்த ஒரிஜினல் அக்மார்க் சிரிப்பு; சின்ன வயசில், என் பாட்டியும் எல்லாப் பாட்டிகளையும் போலவே திட்டுவாள்...'எதுக்கு எப்பப்பாத்தாலும் 'ஈ'ன்னு இளிக்கறே?' என்பாள்; என் பிரண்ட்ஸெல்லாம், 'யாரைப் பாத்தாலும் இப்படியே சிரிக்கிறயே, எங்களுக்குன்னு ஸ்பெஷல் சிரிப்பு வேணாமா?' என்று கலாட்டா செய்வார்கள்.

கே: உதட்டளவில் சிரித்ததுண்டா?

ப: கலைத் துறையில் தினம் தினம் அப்படிப்பட்ட அனுபவங்கள் ஏராளம். ஷூட்டிங் மத்தியிலோ, சோர்வாய் உள்ள போதோ, தனிமையை விழையும் போதோ, யாராவது பிடித்துக் கொண்டு விடுவார்கள். பேசவும் பிடிக்காமல், விரட்டவும் முடியாமல் செயற்கைச் சிரிப்பை உதட்டில் லிப்ஸ்டிக் போட்டுக் கொள்வது போல்தான் அணிந்து கொண்டிருக்க வேண்டும்.

கே. சிறப்பான சிரிப்பை வரவழைத்தது...?

ப: நிறைய நிறைய விஷயங்கள்; ஆனால் என்றென்றும் என் முகத்தில் கோடி பிரகாசத்தை வரவழைக்கக் கூடிய இரண்டு விநோதங்கள் – குழந்தைகள்; குட்டிகள்!


(ஆடு, மாடு, நாய், பூனை, யானை போன்ற மிருகங்களின் குழந்தைகள்)

கே: உங்கள் சிரிப்பால் ஒரு உம்மணா மூஞ்சியை முறுவலிக்க வைத்திருக்கிறீர்களா?

ப: ஏனில்லாமல்? சிரிப்பென்பது ஒரு தொற்று வியாதியைப் போல், பற்றவைக்காமலே பற்றிக் கொள்ளும். எத்தனையோ முறை, மன உளைச்சல்களால் வாடிய முகங்களை, ஒரு சிநேக பாவச் சிரிப்பினால் மலர்ச்சி அடையச் செய்திருக்கிறேன்; நோயாளிகளையும் போராளிகளையும்



புன்னகை மன்னியுடன் ஒரு மென்னகைப் பேட்டி



சிரிப்பால் வருடிக் கொடுத்து இதமளித்திருக்கிறேன். சீரியஸ் சீரியல்களில், என் இயற்கைக்கு விரோதமாக, என்னாலேயே ரொம்ப நேரம் அழுது கொண்டிருக்க முடியாது!

கே: அசுதோஷ் ராணே, உங்கள் சிரிப்பில் மயங்கி மூன்று முடிச்சுப் போட்டவரா?

ப: மயக்கத்தைப் பற்றித் தெரியாது; ஆனால் என் சிரிப்பு அவருக்கு ரொம்பப் பிடிக்கும் என்று சொல்வார். அது என் மனத்திலிருந்து புறப்பட்டு, உதட்டின் வழியே, கண்களை ஊடுருவி, மூளையை உசுப்பிவிடுவதாகச் சொல்வார்.

கே: திருமணமான பெண்கள் சிலர், சிரிக்கக் கூட நேரமில்லை, சிரிப்பே மறந்துவிட்டது என்றெல்லாம் புலம்புகிறார்களே?

ப: பாவப்பட்ட ஜென்மங்கள்; என்னைப் பொறுத்தவரை திருமணத்துக்குப் பின் என் சிரிப்பு அதிகரித்திருக்கிறது.

கே: தற்காலிகமாகவேனும் நடிப்பதில்லை என்ற முடிவை, புன்னகையுடன் ஏற்க முடிந்ததா?

ப: சந்தேகமில்லாமல், மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கு நான் ஏங்கியவள்; இப்போது நான் கருவுற்றிருக்கிறேன்; அக்டோபரில் பிரசவ டைம்; கணவன், குழந்தைகள் என்பதும் வாழ்வின் தனி இன்பமல்லவா? அதை நான் வேண்டித்தானே பெற்றேன்?

கே: அழகான சிரிப்புடன் பற்களின் பராமரிப்பும் கைகோத்துக் கொண்டது தானே?

ப: ஆம்! தினமும் இருமுறை 'பிரஷ்' செய்வேன்; என்ன சாப்பிட்டாலும் உடனே கொப்பளித்துவிடுவேன்; மாதம் ஒருமுறை, பிரச்னை இருந்தாலும் இல்லாவிட்டாலும், பல் மருத்துவரிடம் போய் பல்லைக் காட்டுவேன்.

கே: சிரித்து வாழ நீங்கள் வழங்கும் டிப்ஸ்?

ப: ஒரு பிரச்னையைச் சமாளிக்க இரண்டு வழிகள் உண்டு; சிரித்துக் கொண்டே சமாளிப்பது; அழுது கொண்டே தத்தளிப்பது; முதலாவதுதான் சிரித்துக் கொண்டே வாழ்வதற்குச் சிறந்த வழி. ரொம்பவும் 'டிப்ரஸ்டாக' இருக்கும் போதெல்லாம், கண்ணாடி முன் நின்று, உங்கள் முகத்தைப் பார்த்து, நீங்களே "நான் சிரித்துக் கொண்டே வாழ்வேன்" என்று சொல்லிக் கொள்ளுங்கள். உங்கள் முகத்தில் இறுக்கம் தளர்ந்து புன்னகை படர்வதை தானாக உணர்வீர்கள்.

— ஜேயார்

சு. சுவாமி

சொல்லாத கமெண்ட்!



பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷ்ரஃப் இந்தியா மீது நேரடியாகத் தாக்குதல் நடத்த மாட்டார்: இது உறுதி. சமீபத்தில் அவரைச் சீனாவில் சந்தித்தபோது, 'நீங்கள் இந்தியாவின் இராணுவ அமைச்சராக இருந்திருந்தால், எல்லையில் எந்தப் பதற்றமும் இருந்திருக்காது' என்று முஷ்ரஃப் என்னிடம் தெரிவித்தார். அப்படியே பாகிஸ்தான் தாக்குதல் நடத்தினாலும், அதற்கும் முஷ்ரஃபுக்கும் சம்பந்தமில்லை. அவரது இராணுவ அமைச்சர்தான் அதற்குப் பொறுப்பு என்று அதிபர் முஷ்ரஃபே என்னிடம் தெரிவித்தார். அத்வானியும், ஜார்ஜ் பெர்னாண்டஸும் எல்லாவற்றுக்கும் பாகிஸ்தானையே குற்றம் சாட்டுவது நியாயமே அல்ல.



வெய்யில்


ஒரு நூதனமான இக்கட்டில் தாம் மாட்டிக் கொண்டிருப்பதாக சரவணன் உணர்ந்தார். இந்தத் தருணத்தில் தன்னுடைய செயல்பாடு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று தனக்கு விளங்கா விட்டாலும் அங்கிருக்கும் மற்றவர்களுடைய கவனத்தை அது மிகத் தீவிரமாக ஈர்த்திருப்பதாகத் தோன்றிற்று. ராஜாவின் சக்கர நாற்காலியைத் தொடர்ந்து டாக்டரின் அறையைவிட்டு லிஃப்டில் நுழைந்து கொண்டதும், அவரைப் புதிய கவலை ஆட்கொண்டது. வார்டுக்குச் சென்றதும் ராஜா நிச்சயமாக அவரை ஆயிரம் கேள்விகள் கேட்பான் என்று எதிர்பார்த்தார். அவரது வாழ்வில் முதல் முறையாகக் காமாட்சியின் அண்மைக்காகத் தவித்தார். டாக்டர் மருத்துவ ரீதியான விளக்கக் கூட்டம் என்று அழைத்திருந்ததால் தனியாக வந்தார். ஆனால் அவளும் வந்திருந்தால் விபரீதமாகியிருக்கும். அந்தத் திமிர் பிடித்த பயல்கள் சொன்ன விவரத்தைக் கேட்டு அவளால் வாயைப் பொத்திக் கொண்டு அமர்ந்திருக்க முடியாது. ராஜாவைப் பற்றி அவர்கள் சென்னது கேடுகெட்ட அபாண்டம் என்று ஏசியிருப்பாள். அந்தப் பெண்ணையும் ஏதாவது எசகுபிசகான வார்த்தைகளால் திட்டியிருப்பாள். அந்தப் பெண் - இன்னும் அவளுடைய பெயர் சரளமாக நினைவுக்கு வராதது வேடிக்கை. அவருடைய மனத்தில் நிழல் படமாகவே இருந்த சகுந்தலாவின் பிம்பம் வெகுவாக சரிந்துவிட்டதை அவர் உணர்ந்தார்.

இளைஞர்கள் எப்படியெல்லாமோ இருக்கிறார்கள்தான். அதுவும் பெற்றோர்கள் பார்வைக்கு எட்டும் தூரத்தில் இல்லை என்கிற தைரியத்தில் கூத்தடித்தால் கேள்வி கேட்க யாருமில்லை என்கிற திமிர் இருக்கும்தான். ஆனால் ஒரு பெண்ணுக்கு அப்படிப் பட்ட துணிச்சல் இருக்குமோ? எப்படிப் பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருப்பாள்? அநாதை என்றான் அந்த விவேக். அநாதை என்றால், யார் பெற்றார்களோ. தகப்பன் பெயர் தெரியா பிறப்பாக இருக்கலாம்! அவருக்கு நினைக்கவே கூசிற்று. ஒரு இரண்டு வருஷ உறவு முறிவில் அவரது கௌரவத்துக்குச் சம்பந்தமில்லாத சகதியில் ராஜா மாட்டிக் கொண்டதாகத் தோன்றிற்று. அதற்குத் தாம் ஒரு வகையில் பொறுப்பு என்று குறுகுறுத்தது. ராஜா வாயே திறக்காமல் தலையைக் குனிந்தபடி சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தது. இதுவரை அவர் உணர்ந்திராத பச்சாதாபத்தை ஏற்படுத்திற்று. மறுபடி உயிர்த்தெழுந்திருந்த உறவை நழுவ விடக்கூடாது என்கிற தீவிரம் அவருள் மெல்லிய ஜ்வாலையாகப் பற்றிக் கொண்டது.

வார்டுக்குச் சென்றதும் ராஜா கட்டிலில் படுத்து சோர்வுடன் கண்களை மூடிக் கொண்டான். அவர் அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்து அவன் பேசுவதற்காகக் காத்திருந்தார், அவனுள் எப்படிப்பட்ட குழப்பங்கள் இருக்கக்கூடும் என்று அனுமானிக்க இயலாதவராய். ராஜாவின் மனநிலைக்குத் தகுந்தாற்போலப் பேசும் திறன் காமாட்சிக்கு இருப்பதாக அவர் நினைத்துக் கொண்டார். காமாட்சி அவன் நெற்றியை வருடுவாள், அணைத்துக் கொள்வாள். ராஜா இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தவரை தொட்டுத் தூக்கிய நினைவு அவருக்கு உண்டு. பிறகு மெல்ல மெல்ல உறவு உணர்வு நிலையிலிருந்து அகன்று விட்டது. அப்படியிருக்க வேண்டியதே நியதி என்பதுபோல. இப்பவும் அவனுடைய தோளைத் தொடவோ, கையை வருடவோ தன்னிச்சையாகத் தோன்றவில்லை. அப்படிப்பட்ட நெருக்கம் தேவையில்லை என்று இப்பவும் தோன்றிற்று. ஒரு தந்தையும் மகனும் தோழர்களாகப் பழகுவது அவர் வரையில் அசாத்தியமானது. இருவரது ஸ்தானமும் வேறு. ஆனால் அதன் பிரக்ஞையே உறவை பலப்படுத்த வேண்டும். இப்போது அந்த உறவை

வாஸந்தி

பூத்த நிஜம் 17



ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியத்தில் தாம் இருப்பதாக அவர் உணர்ந்தார். ஏனென்றால் காமாட்சியுடனான அவரது உறவும் அதில் சம்பந்தப்பட்டிருந்தது. அவருக்குத் திடீரென்று அவருடைய தந்தையின் நினைவு வந்தது. அப்பாவுக்குப் பட்டணத்தில் ஒரு சிநேகிதம் உண்டு என்பது அம்மாவுக்குத் தெரிந்து போனதும், அப்பாவுடன் பேசுவதையே அவள் நிறுத்திவிட்டாள். குழந்தைகளை முன்னிட்டு உறவு முறியவில்லை என்றாலும், அப்பா வரும்போதெல்லாம், வெளியூர்க்காரர் போலத் தான் அவருக்குச் சாப்பாடும் படுக்கையும் அளிக்கப்படும். அப்பா ஒரு கோழை என்கிற

எண்ணம் சரவணனின் அடிமனத்தில் பதிந்துபோன ஒன்று. பதினான்கு வயதில் பட்டணத்துக்குச் சென்றபோது வேறு ஒரு பெண்ணுடன் நெருக்கமாக அவரைப் பார்த்த காட்சி மிகப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்ததால் அம்மா அவரிடம் நடந்து கொண்ட விதம் சரிதான் என்று தோன்றும். இருந்தும் ஒரு வார்த்தை அதிர்ந்து பேசாமல், புருஷன், அப்பன் என்கிற தோரணை காண்பிக்காமல் ஊருக்கு வந்து இருந்தது தெரியாமல் அப்பா திரும்பிப் போகும் போதெல்லாம், விவரிக்கத் தெரியாத எரிச்சல் வரும். ஆனால் காமாட்சியுடன் வாழ்ந்து வந்த காலத்தை அசைபோடும் போது இல்லற சுகத்துக்குத் துணை இருந்து புண்ணியமில்லை என்று புரிகிறது. சுகம் இல்லாததாலேயே தோரணை என்ற முகமூடி தேவைப்பட்டது. சில சமயங்களில் தோன்றுகிறது, அவரைப் பழிவாங்கவே காமாட்சி மகனை அவரிடமிருந்து பிரித்துத் தன் வசப்படுத்திக் கொண்டாளோ என்று. ஆனால் அவளையும் அவன் விலக்கியது அவள் எதிர்பாராதது.

வார்டுக்கு வெளியே மணி ஓசை கேட்டது. சரவணன் நிமிர்ந்து உட்கார்ந்தார். கிளம்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது. ராஜா கண்களைத் திறந்தான். அவரைக் கண்டு வியந்தவன் போலப் பார்த்து இலேசாகச் சிரித்தான்.

"நீங்க இங்கையா உட்கார்ந்திருக்கீங்க? ஸாரி, நான் கவனிக்கல்லே."

"அதனாலே என்ன?" என்றார் சரவணன் சரளமாக. "நீ களைச்சுப் போயிருப்பேன்னு நான் பேசாம இருந்தேன்."

அவன் சிறிது மௌனத்துக்குப் பிறகு இலேசான சங்கடத்துடன் கேட்டான்.

"நீங்க நம்பறீங்களா?"

"எதை?"

"அவங்க சொன்னதை?"

"நம்பத்தான் முடியல்லே" என்றார் அவர் மெல்ல. "இந்த மாதிரி விஷயமெல்லாம் நம்ம ஊர் பக்கம் கேட்டுப் பழக்கம் இல்லே. சில பேர் கல்யாணமானவங்க சின்ன வீடு வெச்சிருப்பாங்க. சட்டப்படி எந்த உரிமையும் இல்லேன்னு இரண்டு பார்ட்டிக்கும் தெரிஞ்சிருக்கும். அட்லீஸ்ட் ஆம்பிளைக்கு."

அதற்கு மேற்கொண்டு என்ன பேசுவது என்று அவருக்குப் புரியாமல் பேசாமல் இருந்தார்.

அவன் சற்றுப் பொறுத்து மெல்லச் சொன்னான்.

"உங்களுக்கு என் மேல கோபம் இருக்கும்."

அவர் திடுக்கிட்டு நிமிர்ந்தார்.


"எதைப் பத்தி?"

"இதைப் பத்தியெல்லாம்தான். எனக்கு ஒண்ணும் புரியல்லே. எப்படி இப்படி நடந்ததுன்னு தெரியல்லே. உங்களுக்குத் தெரியாம இப்படி வாழ்ந்திருக்கேங்கறதும் முட்டாள்தனமாகத் தெரியுது. அப்படி என்ன சண்டை போட்டேன் உங்களோட?"

அவர் எழுந்து அவனருகில் வந்து சமாதானப்படுத்துபவர் போலச் சொன்னார்.

"இதப்பார். அது ஏதோ சிறுபிள்ளைக் கோபம்னு வெச்சுக்க. நாங்க அதை மறந்தாச்சு. மறந்ததாலேதானே உனக்கு விபத்துன்னதும் ஓடி வந்தோம்?"

ராஜா உணர்ச்சிவசப்பட்டவனாய் அவருடைய கையைப் பற்றிக் கண்களில் ஒற்றி அதரங்களைப் பதித்தான். அந்த ஸ்பரிசம் பரவிய உஷ்ணத்தில் அவரது நாடி நரம்பெல்லாம் சிலிர்த்தது.



"எதுக்கு என்னைத் திடீர்னு மொட்டை போடச் சொல்ற?"

"அண்ணாமலை சீரியல்ல ராதிகாவுக்குப் பிரச்னை வராம கல்யாணம் நடந்தா உங்களுக்கு மொட்டை போடுறதா நேர்ச்சை வச்சிருந்தேன்!"

- அம்பை தேவா

"ஸாரி" என்றான் அவன். "உங்களை ரொம்பக் கஷ்டப்படுத்தியிருக்கேன்."

'விடு,' என்றார் அவர் மிருதுவாக. "மறு ஜன்மம் எடுத்த மாதிரி பிழைச்சுட்டே. அதுதான் இப்ப முக்கியம்."

அவன் சோர்வுடன் கண்களை மூடிக் கொண்டான்.

"ஏன் பிழைச்சோம்னு இருக்கு. எனக்குப் புரியாத பந்தங்களை எப்படி ஏத்துக்கப் போறேன்னு குழப்பமா இருக்கு. அது வேற உலகம் மாதிரி இருக்கு. பல வருஷங்கள் பின்தங்கிட்ட மாதிரி ஒரு பலவீனம் புகுந்திருக்கு. எனக்குத் தன்னம்பிக்கையே போயிட்ட மாதிரி இருக்குப்பா!"

அவர் தன்னிச்சையாக அவருடைய கைகளை அழுத்திப் பிடித்தார். பேசும்போது குரல் நெகிழ்ந்து போவதை உணர்ந்தார்.

"நாங்க இருக்கோம், கவலைப்படாதே. எல்லாப் பிரச்னைகளையும் மெல்ல மெல்ல சமாளிச்சுடலாம். நீ இப்ப ஓய்வெடுக்க வேண்டியது ரொம்ப முக்கியம். குழம்பிக் குழம்பி உடம்பைக் கெடுத்துக்காதே."

ஆஸ்பத்திரியை விட்டுக் கிளம்பும்போது இதுவரை அவருக்கும் ராஜாவுக்கும் இருந்திராத நெருக்கம் ஏற்பட்டுப் போனதை அவர் திருப்தியுடன் உணர்ந்தார்.

சென்னைக்குத் திரும்பியதும் சபாபதியைக் கூப்பிட்டு இதைச் சொன்னால் நம்பக்கூட மாட்டான். காமாட்சியே நம்ப மாட்டாள். கெஸ்ட் ஹவுஸின் வாசலில் டாக்ஸியிலிருந்து இறங்கியபோது அவர்கள் தங்கியிருந்த அறையை ஒட்டிய பால்கனியில் காமாட்சி அமர்ந்திருந்தாள் தெருவைப் பார்த்தபடி. அவளது உருவம் அவரைக் காரணம் புரியாமல் நெகிழ்வித்தது. ஏதோ ஒரு பலவீனம் தன்னை ஆட் கொண்டிருப்பதாகத் தோன்றிற்று. ஆனால் அது ஒரு நூதன திருப்தியை அளித்தது. அறைக் கதவை அவள் திறந்து வைத்திருந்தாள். சோபாவில் அவர் அமர்ந்தபோது ஒரு ஃபான்டா பாட்டிலைத் திறந்து நீட்டினாள். அதை வாங்கிக் கொள்கையில் ராஜா இன்று தன் கையைப் பற்றி முத்தமிட்டான் என்றால் இவள் நம்புவாளா என்று தோன்றிற்று. அந்த ஸ்பர்ச நினைப்பு மறுபடி சிலிர்ப்பேற்படுத்தியது. காமாட்சியின் கைகளைப் பற்றி ராஜா செய்ததைச் செய்ய வேண்டும் போலப் பைத்தியக்காரத்தனமான எண்ணம் எழுந்தது.

ஃபான்டாவை அவர் ஒரு மிடறு விழுங்குகிறவரை காத்திருந்து காமாட்சி கேட்டாள்.

"ஆஸ்பத்திரிலே என்ன ஆச்சுன்னு சொலுங்க, நான் உங்ககூட வராம போனது தப்பு. இங்கே கிடந்து தவிச்சுப் போனேன்.

"நீ வராம இருந்தது நல்லது. அங்கே அந்தப் பசங்க சொன்னதைக் கேட்டிருந்தேன்னா அதிர்ச்சியிலே வெடிச்சிருப்பே."

"அதிர்ச்சியா?" என்றாள் அவள் கண்கள் விரிய. "ராஜாவுக்கு ஏதாவது புது கோளாறா?"

"இல்லே இல்லே. அவனுக்கு ஒண்ணுமில்லே குழப்பத்தைத் தவிர. அந்தப் பெண்ணும் ராஜாவும் கல்யாணம் கட்டிக்காம அதாவது ரெஜிஸ்டர் கல்யாணம்கூட இல்லாம சேர்ந்து வாழறாங்களாம்!"

"என்னது?" என்றாள் காமாட்சி திகைப்புடன். "அந்தப் பிள்ளை சுதிர் மாதிரியா? ஈசுவரா இவன் என்ன மாதிரி கும்பல்லே இருக்கான்?"

"இங்கெல்லாம் சில பேர் அப்படி இருக்காங்கங்கறார் டாக்டர். அந்தப் பிள்ளை சொன்னபோதே சந்தேகம் வந்துச்சு எனக்கு. அதனாலேதான் இன்னிக்குப் பதிவுப் பத்திரம் எங்கேன்னு பின்னிப்பின்னிக் கேட்டேன்."

"நல்ல கூத்து" என்றாள் காமாட்சி கோபமாக." இந்த மாதிரி இருக்க அந்தப் பெண்ணும் ஒத்துக்கிட்டான்னா அவ என்ன

மாதிரி பொம்பளை, சம்சாரிகள் வீட்டிலே பிறந்தவளா இருப்பாளா?"

சரவணன் எதுவும் பேசாமல் அமர்ந்திருந்தார். தற்சமயம் அவளுடைய கருத்துக்கும் அவருடைய கருத்துக்கும் அதிக வித்தியாசம் இருக்கவில்லை.

"ஒரு குழந்தையை வேற பெத்திருக்கா. எத்தனை தைரியம் இருக்கணும்? தூ! எந்த முகத்தை வெச்சுக்கிட்டு இவளெல்லாம் பதிவிரதை வேஷம் போட்டுக்கிட்டு வளைய வராளுக? அந்தப் பசங்களே கூட்டி விடற கேஸாயிருக்கும். ராஜா இல்லேன்னா மாட்டிக்குவானா?"

"ராஜா ஒரேயடியா குழம்பியிருக்கான்" என்றார் சரவணன். 'நீங்க இதை நம்பறுங்களான்னான். இந்த மாதிரி நம்ம ஊரிலே கேள்விப்பட்டதில்லேன்னேன். கல்யாணமானவங்க சில பேர் சின்ன வீடு வெச்சுக்குவாங்க. ஆனா சட்டப்படி அந்த இரண்டாவது பொம்பளைக்கு எந்த உரிமையும் கிடையாதுன்னு சொன்னேன்."

காமாட்சியின் முகத்தில் மெலிதாக வெளிச்சம் படர்வதை அவர் கவனித்தார்.

"சரியாத்தான் சொன்னீங்க" என்று அவள் பாராட்டியபோது அவருக்குத் திருப்தியாக இருந்தது.

காலையில் கண் விழிப்பதற்கு முன்பே இன்று ஞாயிற்றுக் கிழமை என்று சகுந்தலாவுக்கு நினைவு வந்தது. ராஜா அருகில் இல்லாத ஞாயிறு. அவன் இருக்கும் போது ஞாயிறு காலை காற்றே வேறு. ஒரு இதமான சோம்பலில் மிதக்க வைக்கும். விடுமுறை என்று புரியாமல் எழுந்து கவனத்தைத் திருப்பப் பார்க்கும் பரத்தை இருவரும் கண்ணைத் திறக்காமலே மறுபடி தூங்க வைக்கச் செய்த முயற்சிகளும் அவை தோற்றபின் எழுந்து காபி போடப் போவது யார் என்று இருவரிடையே கிளம்பும்வாதமும் செல்லப்பிடிவாதமும் மூடிய கண் இமைகளுள் நிழற்படங்களாக விரித்தன. மூன்றாம் மனுஷியைப் போல அதை வேடிக்கை பார்ப்பது ஒரு சுகத்தை அளித்தது. அந்தச் சுகமே பாரமாகிப் போவதை அவள் உணர்ந்தாள். அதன் அழுந்தலில் மூச்சிறைத்தது. நூறு நினைவுகள் சேர்ந்து அவளைத் தாக்கினதுபோல. இதிலிருந்து விடுபடுவது எப்படி என்று அவள் திகைத்தாள். சென்ற ஆண்டு சோனியா ஏதோ ஒரு ஆசிரமத்துக்குச் சென்று வந்ததிலிருந்து தியானம் பழகுவதாகச் சொல்கிறாள். கூட்ஸ் வண்டி இறக்குவதுபோல மனசிலிருக்கிற அழுக்கு மூட்டைகள் வெளியேறி விடுகின்றன என்று உபதேசம் செய்தாள். ராஜாவுக்கு அது மிகப் பெரிய ஹாஸ்யமாக இருந்தது. எங்கிட்ட அழுக்கு மூட்டையே இல்லே' என்று சிரித்தான். 'ஸர்ஃப் எக்ஸெல் ஹைனா?" என்று விளம்பர ஜோக் அடித்தான்.

அவன் முயற்சி செய்யாமலே ஐந்தாண்டு நினைவு மூட்டைகள் அவனிடமிருந்து கழன்டு போனது விந்தை. அவளிடம் அவை இடம் மாறி வந்து அழுத்துவதுபோல பிரமையேற்பட்டது. இந்தப் பாரத்தைக் குறைக்க சோனியாவின் உதவி தேவைப் படலாம் என்று நினைத்துக் கொண்டாள்.

சு. சுவாமி
சொல்லாத கமெண்ட்!

அயோத்தி பிரச்னையில் எளிதான தீர்வு காண வேண்டுமானால் பாப்ரி மசூதி கமிட்டித் தலைவரை வி.எச்.பி.க்கும், வி.எச்.பி. தலைவரை பாப்ரி மசூதி கமிட்டிக்கும் மாற்றி நியமிக்க வேண்டும். இரண்டு தலைவர்களுமே

ராஜா கேட்டிருந்த அவகாசம் இன்றோடு முடிகிறது. என்னைத் தொந்திரவு செய்யாதீர்கள் என்கிற கோரிக்கை அது. நேற்று மாலையே சனிக்கிழமை அவளுக்கு அரை நாள் என்பதல் ஆஸ்பத்திரிக்கு பரத்தை அழைத்துப் போக நினைத்தவளை விவேக் தடுத்தான். 'அவன் கேட்ட அவகாசத்தைக் கொடு' என்றான். இரண்டு ஆண்டுகளாக ஒளிவு மறைவில்லாமல்

இதற்கு என்னிடம் எழுத்து மூலம் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். அத்வானி மட்டும் குறுக்கே நிற்காவிட்டால், இப்போது அயோத்தி பிரச்னைக்குத் தீர்வுகாணப்பட்டு, அங்கே அமைதி திரும்பியிருக்கும்.



சேர்ந்து வாழ்ந்த ஒருத்தனிடம் இப்படி ஒரு அதிகாரபூர்வ உறவு பார்ப்பது அவளுக்கு அபத்தமாகப்பட்டது. அவளது பொறுமை நழுவிற்று. ராஜாவுக்கு அறிவார்த்தமாக நிலைமையை உணர வைப்பது சிரமமாக இருக்காது என்று அவள் நினைத்தாள். இந்த இடைப்பட்ட காலத்தில் தனது பெற்றோர்களுக்கு அவள் எந்தத் தடையையும் விதித்திருக்கப் போவதில்லை. அவர்களது பேச்சு அவனிடம் எந்தவிதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கற்பனை செய்யவும் கூசிற்று.

இயந்திர கதியில் அவள் அலுவல்களை கவனிக்க ஆரம்பித்தாள். பரீட்சை வினாத்தாள் பார்க்கும் வரை மனத்தில் ஏற்படும் பீதி கலந்த படபடப்பை இரண்டு நாட்களாக அனுபவிப்பது ஏன் என்று புரியவில்லை. பாட்டி இப்போது உயிரோடு இல்லையே என்று துக்கமேற்பட்டது. பரீட்சைக்குப் போவதற்குமுன் பாட்டியை நமஸ்கரிப்பதும், அவள் தன் கையால் நெற்றியில் விபூதி இட்டு 'நன்னா பண்ணுவே, பயப்படாதே' என்ற வாக்கு பலித்ததும் வாழ்வின் அங்கமாகப் போயிருந்தது. எத்தனையோ பிரச்னைகளுக்கு நடுவில் வாழ்வை அந்த ஆசி சரளமாக்கியது. அவள் காலேஜ் சேரும்வரை தாத்தா உயிரோடு இருந்தார். அவர் ஒரு கர்ம யோகி என்பாள் பாட்டி. மாமா ஒரு நாள் வந்து இரைந்த போதுதான் அதன் அர்த்தம் புரிந்தது. 'சகுந்தலாவை வளர்க்கிற பொறுப்பை நாங்க ஏன் ஏத்துக்கணும்? அவளை அவளுடைய அப்பன் பாத்துக்கட்டும். இரண்டாம் கல்யாணம் பண்ணிண்டு குஷியா இருக்கான். அவன் பொறுப்பில்லையா அது?'

அவளது நீண்ட முடியை வாரிப் பின்னிக் கொண்டிருந்த பாட்டியை சகுந்தலா பீதியுடன் திரும்பிப் பார்த்தாள்.

தாத்தா நிதானமாகச் சொன்னார்.

"பானு சாகற சமயத்திலே குழந்தையை நான் பாத்துக்கறேன்னு வாக்குக் கொடுத்தேன். அதைக் காப்பாத்தணும்."

மாமா கோபத்துடன் கிளம்பினார். "சக்குவை அழைச்சுண்டு வந்தேன்னா என் வீட்டிலே இடமில்லே."

'நாங்க தனியாவே இருந்துடறோம் ராமு!'

கடைசி வரை மாமாவின் கோபம் தணியவில்லை. சகுந்தலா என்கிற ஒரு பிரக்ருதியினால். தாத்தா போனபிறகு அவளுக்குக் கவசமாக பாட்டியும் நிற்கத்துணிந்ததால்.

டெலிபோன் ஒலித்தது. "குழந்தையோட போய் நிக்கப் போறேன்னு சொன்னியே?" என்றான் விவேக்.

"ஆமாம். கிளம்பிண்டிருக்கேன். பரத்தான் என் கவசம்" என்றாள் அவள்.

(தொடரும்)



ம.தி.மு.க.

● ஆர். அப்துல் சலாம், திருச்சி - 21.

? காமராஜ் பிறந்த நாளை அரசு விடுமுறையாக அறிவிக்க வேண்டும் என்று வாழப்பாடி கோரிக்கை வைத்துள்ளாரே?

! 'இனி விடுமுறைகளுக்கு விடுமுறை கொடுப்போம்; உழைப்போம்' என்று சொல்லும் துணிவும் திராணியும் ஒரு தலைவருக்கும் இல்லையே!



• மண்டல அரசியல்!

● தரு.பா.பட்டுதுரை, சிதம்பரம்.

? 2002ல் சிறந்த காமெடி என்று எதைச் சொல்லலாம்?

! கே.ஆர். விஜயா குடும்பப் பாங்கான நடிகை. அவரை நம்பித்தான் சுதர்ஷன் சிட்டுக் கம்பெனியில் பணம் போட்டோம் என்று சொல்லியிருக்கும் சில டெபாசிட்தாரர்களின் புலம்பலை! ஒரு பக்கம் பரிதாபம்னாலும் மறு பக்கம் சிரிப்புத்தான் வருது.

● கொ.மூர்த்தி, குட்டலாடம்பட்டி

? குடியரசுத் தலைவர் தேர்தலில் செல்லாத வோட்டுப் போட்ட எம்.பி.க்கள் குறித்து...?

! 174 செல்லாத வோட்டு. அதில் ஒரு சீட்டில் 'ஹேர் கட் செய்து கொள்ளவும்' என்று ஸ்பெஷல் கோரிக்கை வேறு! இத்தகைய எம்.பி.க்களைத் தேர்ந்தெடுத்தவர்களைத்தான் நொந்து கொள்ள வேண்டும்.

● கே.வி. ராமன், சென்னை - 73.

? வன்னியர்களுக்காக தனி நாடா? தமிழகத்தைக் கூறு போடுவதா? பா.ம.க. ஸ்தாபகர் ராமதாஸ் அப்படிக் கேட்கலாமா?

! அவர் கேட்பது தனி நாடல்ல; மாநிலம் - பிரிவினைவாதமும் அல்ல. அரசியல்வாதிகள் அதைத் திரித்துப் பேசுவதில் வியப்பில்லை. அது ஒரு புறமிருக்க, தனி மாநிலத்துக்கே அவசியமில்லை என்று மற்ற எல்லாத் தரப்பினருமே கூறிவிட்டார்கள். தமிழகம் ஒன்றும் மாங்காய் பத்தை அல்ல கூறு போடுவதற்கு.

● அ.தாசன், பெங்களூர் - 5.

? ஆன்மிகச் சொற்பொழிவுகளைக் கேட்டு மக்கள் ஒழுக்க சீலர்களாகி மண்ணாசை, பொன்னாசை பெண் ஆசையை விட்டு விடுவார்களா?

! மனித வாழ்க்கை என்பது, ஆசைகளிடையே பேராசையை நுழையவிடாமல் நடத்தும் சர்க்கஸ். அதற்கான மனவளத்தையும் சிந்தனைப் பயிற்சியையும் உயர்ந்த ஆன்மிகச் சொற்பொழிவுகள் நிச்சயமாக வழங்கும்.



• 'தனி' கோரிக்கை!

● ஜெகன் ரகு, வேலூர்-1 ❐

? ஏழை பெண்களுக்குத் திருமண உதவியை (ரூ பத்தாயிரம்) நிறுத்திவிட்டு, திருவேற்காட்டில் 1008 ஜோடிகளுக்கு இலவச திருமணம் செய்து வைத்ததைப் பெருமையாக முதல்வர் கூறியது குறித்து...?

! பந்தலுக்கு மட்டுமே இருபது லட்சம் என்றால், மொத்தச் செலவு ஒரு கோடியை எட்டாமலா இருக்கும்! ஒருபுறம், சிக்கன நடவடிக்கை எடுத்தது மாதிரியும் பாவலா; மறுபக்கம் சுய விளம்பரம்.

● என். முருகேஷ், பெருஞ்சேரி.

? உணவு ஆய்வாளர்கள் மிகக் குறைந்த அளவில் இருப்பதால்தான் பான்பராக், குட்கா ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை அமல்படுத்துவதில் சிரமம் இருப்பதாக அமைச்சர் செம்மலை கூறியிருக்கிறாரே...?

! பிளாஸ்டிக் தடை - பின் வாங்கல்; குட்கா தடை - அமல்படுத்த சிரமம். அரசு யோசிக்

❐ ரூ. 100 பரிசு பெறுபவர்:

ஜெகன் ரகு,
23/D, கரார் கிருஷ்ணசாமி தெரு,
கொசப்பேட்டை,
வேலூர் 632001

நீங்கள் கேட்டவை

தடை செய்யப்படுமா?



• இரட்டை லாபம்!



• விடுமுறை விண்ணப்பம்



• சிரிப்பும் அழுகையும்

கார்மல் செயல்படுகிறது என்பதற்கான எடுத்துக்காட்டுகள்.

● சி.எம். குமார், மதுரை -1

? ம.தி.மு.க தடை செய்யப் படுமா...?

! அது வைகோ கைது குறித்து ஸ்பெஷல் கோர்ட் வழங்கும் தீர்ப்பை யொட்டி அமையும்.

● ஆர்.எஸ். லக்ஷ்மி, கோவை - 1.

? ரயில்வே இணை அமைச்சர் கூட்டிய அனைத்து எம்.பிக்கள் ஆலோசனை கூட்டத்தில் அ.தி.மு.க எம்.பிக்கள் கலந்து கொள்ள விடாமல் ஜெ. தடுத்து விட்டாரே அமைச்சர் பா.ம.க என்பதாலேயே இவ்வாறு செய்யலாமா...?

! என்ன செய்வது. அரசியல் அநாகரிகம் அந்த அளவுக்கு வளர்ந்துடுச்சு நம் நாட்டிலே!

● ஆர். ரங்கராஜன், சென்னை - 5.

? கிழக்கு ரயில்வேயை இரண்டாகப் பிரிப்பதில் மமதா பானர்ஜிக்கு என்ன நஷ்டம்?

! ஒரு புண்ணாக்கும் இல்லை; வங்கத்தின் மானத்துக்குப் பங்கம் என்று காரணம் கற்பித்துக்கொண்டு அரசியல் பண்ணுகிறார். ரயில் பயணிகளுக்குத்தான் உண்மையில் நஷ்டம். இப்படிப் புது மண்டலங்கள் நிறுவுவதால் ஏற்படும் அநாவசிய செலவு மக்கள் தலையிலேதான் விடியும்.

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி •

? இந்தியா முழுவதிலுமாக வங்கிகளில் வசூலாகாத கடன் 80 ஆயிரம் கோடி உள்ளதாமே?

! தொழில்துறை தேக்கத்துக்கும் பொருளாதார நலிவுக்கும் எடுத்துக்காட்டான நிலைமை. அத்தனை பணமும் வீண் விரயம் என்பதை நினைக்க அச்சமாயிருக்கிறது. இதில் எத்தனைக் கோடி அரசியல்வாதிகளின் தலையீட்டினால் தரப்பட்டது என்று பார்த்தால் அச்சம் திகிலாக மாறும்.

● மல்லிகை மன்னன்,
மதுரை - 17.

? 'பாகிஸ்தானில் பரமசிவத்தைத் தேர்தலில் நிறுத்தினாலும் ஜெயிக்க வைத்து விடுவார் எங்கள் புரட்சித் தலைவி' என்று எஸ்.எஸ். சந்திரன் தம்பட்டம் அடிக்கிறாரே...?

! ஆற்று மணலைக்கூட அள்ளலாம்; எஸ்எஸ்சந்திரன் உதிர்க்கும் அபத்த புகழ்ச்சிகளை எண்ண முடியாது.

● ஷோபனாதாசன்,
நாட்டரசன்கோட்டை.

? அமெரிக்க நிருபர் டேனியல் பேர்லைக் கொலை செய்த ஷேக் உமாருக்குப் பாக். மரண தண்டனை விதித்துள்ளதே...?

! பேர்ல் அமெரிக்கர் என்பதால் துரித நடவடிக்கை எடுத்து பயங்கரவாதிக்குத் தண்டனை பெற்றுத் தந்த முஷாரஃப், அதே வேகத்தை காஷ்மீரில் இந்தியர்களைக் கொன்று குவிக்க ஊடுருவும் பயங்கரவாதிகள் மீதும் காட்டினால் நன்றாயிருக்கும். ஆனால் செய்ய மாட்டார்; பக்கபலமாக நிற்பார்!

- தராசு

* ரூ 50 பரிசு பெறுபவர்:

பி. ஜெயப்பிரகாஷ்,
டி.என்.ஈ.பி.
குடியிருப்பு,
சர்க்கார்பதி,
சேத்துமடை (வழி)
கோவை மாவட்டம்



சென்னையில்

திருவிளையாடல், சரஸ்வதி சபதம் படங்கள் வந்து நீண்ட காலமாகிவிட்டதால், தமிழ்ச் சமுதாயம் எங்கே நாரதரை மறந்துவிடுமோ என அஞ்சி, அவருக்கு அவசரகால அழைப்பு விடுத்தோம். அவரும் தொபுக்கடீர் என்று மேகத்தைப் பிளந்துகொண்டு குதித்தார். அதுவும் சென்னை அடையாறு காந்தி நகரில் உள்ள துணை மேயர் கராத்தே தியாகராஜன் வீட்டு வாசலிலா குதிக்க வேண்டும்?

மனிதர், "நாராயணா! நாராயணா!" என்ற வைகுண்ட மந்திரத்தைக் கூட மறந்துவிட்டு, விடுவிடுவென்று உள்ளே புகுந்துவிட்டார். துப்பாக்கியும் கையுமாக இருந்த போலீஸ்காரர் நமது நாதபிரம்மத்தை உள்ளேவிட வேண்டுமே... "யோவ்... யோவ்... வீட்லே எல்லோரும் வேலையா இருக்காங்க.. அடுத்த வீட்டைப் பாரு" என்று தடுத்து நிறுத்தியதும் குழப்பத்தை உண்டு பண்ணும் நாரதருக்கே குழப்பம்!



• ஆசி : பாம்பே ஞானம்

"குழந்தாய் நான் வந்தது இந்த வீட்டைத் தேடித்தான். பிறகேன் அடுத்த வீட்டைப் பார்க்க வேண்டும்?" என்றார் சப்ளாக்கட்டையை போலீஸ்காரரின் முகத்திற்கு நேராய்ப் பிடித்து இரண்டுமுறை லொட்... லொட் என்று தட்டியபடி.

"அய்ய... காலங்காத்தாலே பேஜார் பண்றியே... மொதல்லே எடத்தைக் காலி பண்ணு இந்தா..." என்றபடி தனது பாக்கெட்டுக்குள் கையைவிட்டு ஐம்பது பைசா நாணயத்தை எடுத்து நாரதரின் கையில் திணித்தார். அதிர்ச்சியில் அனிச்சையாக "நாராயணா நாராயணா" என்று பதறியபடி "அப்பனே.. துணை மேயரிடம் மனு கொடுக்கலாம் என்று வந்தேன். அதற்குள் அவசரப்பட்டு விட்டாயே" என்றதும், "அதானே பார்த்தேன். அந்தச் சில்லறைய இப்படிக் குடுத்துட்டு அதோ அந்த வரிசையிலே போய் ஒக்காரு..." என்று உத்தரவிட்டபடி கொடுத்த ஐம்பது பைசாவை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டார்.

விட்டால் போதுமென்று மனுகொடுக்க வந்தவர்களோடு ஒட்டிக் கொண்டார். இவர் அங்கே போனதும் சலசலப்பு. காங்கிரஸ் கட்சிக் கரைபோட்ட வேஷ்டி அணிந்திருந்த ஒரு முதியவரிடம் நெருங்கி, "கொல்லன் பட்டறையில் 'ஈ'க்கு என்ன வேலை அப்பனே? எத்தனை தைரியமிருந்தால் காங்கிரஸ் கட்சிக் கரை வேஷ்டி, துண்டு அணிந்து இங்கே வருவாய்?" என்று தனது பணியைத் தொடங்கினார்.

"தியாகு தம்பி, கட்சி வித்தியாசம் பார்க்காது சாமி. கேக்குற கோரிக்கை நியாயமின்னா உடனே முடிச்சுக் குடுத்துடும்." என்று சின்ன இடைவெளி விட்டு 'நீ மட்டும் இப்போ பி.ஜே.பி.லேர்ந்து வர்லியா என்னை மட்டும் கேள்வி கேக்குறியே?" என்றதும் நாரதர் ஒரு கணம் ஆடிப் போய்விட்டார்.

அதற்குள் பார்வையாளர்களை வரிசையாய்க் கூப்பிடும் 'அழைப்பு மணி' முதல் முறையாக ஒலிக்க... நாரதர் க்யூ நெறிமுறையை மீறியபடி தடால் என்று துணைமேயரின் அறைக்குள் நுழைந்தார். இதைச் சற்றும் எதிர்பாராத துணை மேயர் தமது இருக்கையை விட்டு எழுந்து... திகைத்து... "யார் நீங்க?" என்று அலறி, தேவலோக பிரச்னைக்கு இங்க மனு கொடுக்க வந்திருக்காரா? என்கிற லெவலில் கொஞ்சம் குழம்பி தனது உதவியாளர்களைக் கூப்பிட, அவர்கள் வந்து நாரதரின் அசுர வேகம் பற்றிச்

-காமெடி கலாட்டா!

நாரதர்!



• தேன் திருவிழா : மேரி

சொல்ல... ஒரு வழியாய்ச் சமாதானமடைந்து "சரி. என்ன பிரச்னைனு சொல்லுங்க" என்றார் துணை மேயர்.

"நமக்கு ஒரு பிரச்னையும் இல்லை. உயர் நீதிமன்ற வளாகத்தில், சரியாக குப்பைகள் அள்ளுவதில்லை என்று நீதிபதிகளுக்கு உங்கள்மேல் கோபம் என்று கேள்விப்பட்டோம் உண்மையா?" என்றார் குறும்பாக குறுநகை பூத்த நம் நாரதர். நாரதரின் நல்ல (?) கேள்விக்குத் துணை மேயரிடமிருந்து கிடைத்த பதில் இறுக்கமான முகத்தில் கரைத்த மௌனம். "சரி. அது போகட்டும். இனி மேயர் பதவிக்கு கராத்தே போட்டி வைத்துதான் தேர்ந்தெடுக்கப் போகிறார்களாமே?" என்று அடுத்த அஸ்திரத்தைப் போட்டதும், துணை மேயர் வாய் திறந்தார். "இது புரட்சித் தலைவி கொடுத்த பதவி. மக்கள் சேவை



• இதோடா : கருணாஸ்

செய்யறதுக்காக கொடுத்துருக்காங்க. அதை இதுவரைக்கும் ஒழுங்கா செஞ்சுகிட்டு வர்றேன்" என்று பொருத்தமாய் ஒரு பதிலை உதிர்த்தார்.

"நல்லது. அ.தி.மு.க.விலேயே இன்னொரு கராத்தே வீரர் உங்களுக்குப் போட்டியாக வந்து கொண்டு இருக்கிறாரே. அதானய்யா.. ஷிகான் ஹுசைனி. உங்க கட்சித் தலைவிக்கு அடிக்கடி போஸ்டர் அடித்து ஒட்டுவதை நீர் கவனிக்கவில்லையா?"

என்று நாரதர் கேட்டதும், துணை மேயருக்கு ஏதோ ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்துவிட்டது போல "இது புரட்சித் தலைவி கொடுத்த பதவி.." என்று திரும்பவும் ஆரம்பிக்க, அடுத்த வினாடி... நாரதருக்கு அருள் வந்த மாதிரி ஆடிப் போய்... "நாராயணா நாராயணா" என்று உடலைக் குலுக்கி விட்டுச் சொன்னார்.

"இனி கராத்தே தியாகராஜன் என்ற பெயரைக் கிளிப்பிள்ளை தியாகராஜன் என்று மாற்றிக் கொள்ளும்" என்று அறிவுரை வழங்கி முடிப்பதற்குள், அடித்து விரட்டாத குறையாகக் கையெடுத்துக் கும்பிட்டார் துணை மேயர்.

வெளியே வந்த நாரதருக்குக் கபகபவென்று காலைப்பசி. நம்மைக் கேட்காமலேயே அடையாறு வசந்தபவனுக்குள் நுழைந்து இட்லி, பொங்கல், பூரி என்று புகுந்து விளாசி விட்டுப் புறப்பட்டார்.

அடுத்து அவர் அடியெடுத்து வைத்தது அதே அடையாறில் வசித்துவரும் 'சப்தஸ்வரங்கள்' ஏ.வி.ரமணன் இல்லத்திற்குள். வரவேற்பறையில் கீ போர்டு வாசித்துக் கொண்டிருந்த

• நடையைக் கட்டுங்க : கராத்தே





* நியாயம் கேளுங்க : ரமணன்

இளைஞரை நெருங்கி "தம்பி ஏ.வி. ரமணனைக் கூப்பிடு" என்றார் அதிகாரமான குரலில். பதிலுக்கு அந்த இளைஞர், "நீங்கள் யார்?" என்று கேட்க, "ஏ.வி. ரமணன் வீட்டில் உட்கார்ந்து கொண்டு ஒரு வினோத இசைக் கருவியை வாசித்துக் கொண்டிருக்கும் உனக்கு, என்னை நாரதர் என்று தெரியவில்லையா?" என்று பதிலடி கொடுக்க, "நாரதர் தனது வீணையின் குடம் இடப்பக்கம் இருக்கிற மாதிரி தவறாக எப்படி அணிந்திருப்பார்?" என்றதும் நம்ம நாரதருக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவசர அவசரமாகத் தமது குடத்தை வலப்பக்கம் இடமாற்றிக் கொண்டு எச்சில் விழுங்கினார்.

"இட்ஸ் ஓகே. கொஞ்சம் இருங்க கூப்பிடுகிறேன்" என்றபடி இன்டர்காமில் ஏ.வி. ரமணனிடம் "உங்களைப் பார்க்க ஒரு ஸ்பெஷல் கெஸ்ட் வந்திருக்கார்" என்று அழைத்த அந்த இளைஞர் ஏ.வி.ரமணனின் செல்ல மகன் விக்னேஷ் ரமணன். டை, கோட், சூட் சகிதம் வந்த ரமணன் நாரதரைப் பார்த்துவிட்டு கொஞ்சம் கூட அதிர்ச்சியில்லாமல், "வரும் போது ஒரு ஃபோன் பண்ணிட்டு வர்றதில்லையா... சரி, சரி, உட்காருங்க." என்றதும் நாரதர் வந்த வேலையைத் தொடங்கினார்.

"'சப்தஸ்வரங்கள்'லே கலந்துகணும்ங்கிற ஆசையிலே பலமுறை அப்ளிகேஷன் போட்டேன். இதுவரைக்கும் என்னைக் கன்சிடர் பண்ணினதா தெரியலையே"

"இசைக்கே ஆதாரமா இருக்கிற உங்களுக்கு எதுக்கு அப்ளிகேஷன். இப்போகூட ஷூட்டிங் நான் கிளம்பிட்டு இருக்கேன். வாங்க கட்டாயம் வாய்ப்பு தரேன். ஆனா அதுக்கு முன்னாடி வாய்ஸ் டெஸ்ட் உண்டு."

நாரதர் கொஞ்சம் எச்சரிக்கையாக...

"அதிருக்கட்டும். சப்தஸ்வரங்கள்லே பாடுறதுக்குப் பெண்களுக்கு மட்டும்தான் அதிக வாய்ப்பு தர்றதா வெளியிலே பேசிக்கறாங்களே" என்று கள்ளத்தனத்துடன் கண்களை உருட்டியபடி கேட்க... "ஐந்து வருடம், எட்டு மாசமா இந்த நிகழ்ச்சியை நடத்திக்கிட்டு வர்றோம். நிறைய பாடகிகள் வர்றாங்க. ஆனா ஆண் பாடகர்கள் வர்றதே இல்லை. நான் என்ன செய்யறது?" என்று ரமணன் ஆதங்கப்பட்டார்.

"அதெப்படி குழந்தாய், ஐந்து வருஷமா நடத்துற ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் விதவிதமான உடைகள் அணிகிறாய். உடைகள் அத்தனையும் உம்முடைய உடமைகள்தானா?" நாரதர் சந்தேகமாய்க் கேட்டார்.

"இதுவரைக்கும் இருநூற்று எண்பது உடைகள் அணிந்திருக்கிறேன். அதில் நூற்றுப் பத்து எனக்குச் சொந்தம். எஞ்சிய உடைகள் 'செல்லர்ஸ்' என்ற காஸ்ட்யூம் நிறுவனத்தை நடத்தி வரும் நண்பர் அர்ஜுன் என்பவருக்குச் சொந்தமானவை" என்று ரமணன் சொன்னதும், "என்னோட ஆசிகள் உனக்கு உண்டு. நான் கிளம்பறேன்" என்று எஸ்கேப் ஆக பார்த்த நாரதரைப் பிடித்து உட்கார வைத்தார் ஏ.வி.ரமணன்.

"உங்க பேரால 'நாரத கான சபா'ன்னு சென்னையிலே ஒரு பழம் பெரும் சபா இருக்கு. அங்கே மெல்லிசை பாடறதுக்கு இடமே கொடுக்கறதில்லே. இதைப் போய் நியாயம் கேட்டுட்டுத்தான் நீங்க வைகுண்டத்

* 'ஜ'க்கி என்ன வேலை?



துக்குப் போகனும். அப்புறம் உங்கப் பேராலே ஒரு பல்சுவை பத்திரிகையே ரொம்ப நாள் வந்தது. சீனிவாசராவ்ன்னு ஒருத்தர் நடத்தினார். அப்புறம் நம்ம எஸ்வி.சேகர் அதை வாங்கி ஆசிரியரா இருந்து நடத்தினார் தெரியுமா" என்றபடி நாரதர் பத்திரிகையின் ஓர் இதழை எடுத்து வந்து, ரமணன் காட்ட நம்ம நாரதர், நாரதர் பத்திரிகையை ஆச்சர்யமாய்ப் பார்த்து விட்டு அங்கிருந்து கோடம்பாக்கம் நோக்கி பயணப்பட்டார்.

மந்தைவெளியில் மாட்டிக் கொண்டார் கிரேசி மோகன். "கிரேசிங்கிற கிறிஸ்டியன் பெண்ணைக் காதலிச்சு தோத்துட்ட சோகத்துலதான் கிரேசி மோகன்னு பேர் வெச்சுக்கிடுங்களாமே?" என்று கொஞ்சம் சப்தமாகவே நாரதர் கேட்க, "வயசு ஐம்பது ஆயிப்போச்சு. நீங்க எவ்வளவு சப்தம் போட்டுச் சொன்னாலும் என் மனைவி 'சந்தேகப்படறதுக்கு வாய்ப்பேயில்ல. கிரேசி தீவ்ஸ் இன் பாலவாக்கம்' என்ற எங்களது முதல் நாடகம் காரணமாத்தான் என் பேரோட கிரேசி ஒட்டிக்கிட்டது. இது நாரதரோட ஞான திருஷ்டிக்குத் தெரிய வேணாமா?'' என்று கிரேசி ரொம்ப கிரேசியாகக் கேட்டு வைத்தார். "பாபா படத்துக்கு வசனம் எழுதக் கூப்பிட்டு நீங்க மாட்டேன்னு சொன்னது மட்டும் என்னோட ஞான திருஷ்டியிலே தெரிஞ்சது.."

"இது ஞான திருஷ்டி இல்லே, கேன திருஷ்டி' இப்படி கிரேசி கொடுத்த பதிலடியில் வெலவெலத்துப் போன நாரதர், அடுத்து பிரவேசித்த ஸ்டேஷன் ஹூட்டி தொடரில் பாட்டியாக வந்து கலக்கிக் கொண்டிருக்கும் திருமதி பாம்பே ஞானம் வீடு.

நாரதர் உள்ளே நுழைந்ததுமே "மகனே வா.." என்று அழைத்தார் பாம்பே ஞானம்.

"என்ன! நான் ஒரு கந்தர்வன். என்னை ஒரு மனிதப் பெண் மகனே என்று அழைப்பதா?" என முணுமுணுத்தார் நாரதர்.

"உனது அம்மா சரஸ்வதி. அவள் ஞானத்தின் அதிபதி. நானும் ஞானம் தானே. அப்படியானால் எனது மகன் தானே நீ. இதோ எனது ஆசிகள்'' என்று சரஸ்வதி போல பாம்பே ஞானம் ஆசீர்வதிக்க.. ஒரு கணம் கண் கலங்கிய நாரதர் கைகூப்பி வணங்கி, ஆசி பெற்றுக் கொண்டு தனது அதிரடியை ஆரம்பித்தார்.

"தொலைக்காட்சியில்தானே நடிக்கிறோம் என்ற தைரியத்தில் கொஞ்ச நாள் சினிமா உலகத்தைக் கிண்டல் அடிச்சீங்களே ஞாபகம் இருக்கா?"

''சினிமா; காரம்; காபி நிகழ்ச்சியிலே சினிமா பத்தி மெல்லுவோம். ஆனா மென்னு துப்புறதுல்லே மகனே!'' என்று விளக்கம் கொடுத்த பாம்பே ஞானத்திடம்,

"சினிமாவில் வாய்ப்பு கிடைச்சா நடிக்க மாட்டாயா தாயே?" என்று கேட்க,

"கதாநாயகி சான்ஸ் கிடைத்தால் ஓ.கே.. சிம்ரன் மார்கெட் விழற நேரம் பார்த்து உள்ளே நுழையலாம்ன்னு இருக்கேன்" என்று கூலாக பாம்பே ஞானம் சொன்னதும்...

"கடவுளே தமிழ் சினிமாவைக் காப்பாத்து'' என்றபடி மறுபடியும் ஆசீர்வாதம் வாங்கிப் புறப்பட்ட நாரதர், அடுத்து மாட்டிக் கொண்டது லொடுக்குப் பாண்டி பாப்கருணாஸிடம். நாரதரைக் கண்டதுமே "இதோடா..'' என்று நக்கலாக நாரதரை மிரட்ட.. நம்ம ஆள் ஒரு கணம் நடுங்கிப் போய் சுதாரித்துக் கொண்டு லொடுக்குவை மடக்கினார்.

"பாபா படத்துலே ரஜினி செய்யற எல்லா ஸ்டைலையும் நீங்கதான் சொல்லிக் கொடுத்தீங்களாம்!" இதைக் கேட்டு நடுநடுங்கிப்போன கருணாஸ், "மேடையிலே பாடி பிழைச்சுக்கிட்டு இருந்தேன். பாலா கூப்பிட்டு நடிகனாக்கினார். இப்போ பாபா பேரைச் சொல்லி என்னை சினிமாலேர்ந்து பேக்அப் பண்ணிடுவே போல இருக்கே.



* வசந்தபவனில்...



: தும்புரு

வுட்டுரு தலைவா'' என்று கெஞ்ச... ''திருக்குறளுக்கு மெட்டுப் போட்டிருக் கியாமே நிஜமா?'' என்றார் நாரதர் ஆவலாக.

''இது மாதிரி ஆக்கப் பூர்வமா கேளு சாமி. திருக் குறள் முப்பாலில் இருந்தும் மொத்தம் பதிமூன்று குறட்பாக்களைத் தேர்வு செய்து டிசென்டா ட்யூன் போட்டிருக்கேன். ஆல்பத்தோட பேருதான் 'கூத்தாடி கைகள்'. பாட்டைக் கேட்டுட்டு நீயே சொல்லு'' என்று தனது காரிலிருந்த டேப் ரிக்கார்டரில் ஆல்பத் தைப் போட்டு காட்ட... அதைக் கேட்டு மெய் மறந்த நாரதரை, ஒரு வழியாக மீட்டு அலு வலகத்திற்கு அழைத்து வந்தோம்.

அலுவலகத்தில் நாரதருக்காக காத்துக் கொண்டிருந்த மற்றொரு வி.ஐ.பி., கல்கியின் ஆஸ்தான இசை விமர்சகர் தும்புரு...

அவரைப் பார்த்த சந்தோஷத்தில் நாரதர் சப்ளா கட்டையை ஒரு தட்டு தட்டி வீணையை ஒரு மீட்டு மீட்ட...

''சுருதியே சேரலை'' என்று தும்புரு முகத் தைச் சுளித்துக் காதை மூடிக் கொண்டார்..!

''ஆனால் நீர் சேர்த்துட்டீர்! தமிழ்நாட்டுல கிழிக்கறதுக்குன்னே பிறந்த விமர்சகர் கூட்டத்துல சேர்ந்துட்டீர்...!'' நாரதர் ஐஸ் வைப்பதுபோல் வெந்நீர் ஊற்றினார்.

''ஆமாம்! கிழிக்கறதுக்கேத்தான் பிறந்திருக் கேன். ஃபர்ஸ்ட் ரைட்டிங் எழுதற மொத்தமும் கிழிச்சுப் போட்டுடறேன். அதை இப்படியே கொடுத்தா, முதல்ல கல்கி எடிட்டர் என்னைக் கிழிப்பாங்க. அப்புறம் இசையுலகம், என் மிச்ச மீதியைக் கைமா போடும். அதனால செகன்ட் ரைட்டிங்கல கொஞ்சம் சுருதியைக் குறைச்சு எழுதி அதைத் தான் பப்ளிஷ் பண்ண கொடுக்கிறேன்...''

''இப்போ யாரைக் குதறிக்கிட்டிருக்கீர்...!'' நாரதர், தும்புருவின் லாப் டாப்பில் எட்டிப் பார்க்க முயல தும்புரு அவசரமாய் அதை மூடி வைத்தார்.

''டிசம்பர்ல மட்டும் தலை காட்டுறீர்... நீரும் என்.ஆர்.ஐ.யோன்னு நினைச்சு ஏமாந்துட் டேன். மத்த நாள்லயும் காலம் எழுதலா மில்லே..?'' - நாரதர் விரட்ட, தும்புரு வேக மாய் எழுந்தார். ''நம்மை மாதிரி கலகக் காரங்க அப்பப்போ காணாமப் போயிடணும் இல்லைன்னா லோகம் தாங்காது...'' நாரதர் பார்த்துக் கொண்டேயிருக்க மாயமானார் தும்புரு!

— ஆர்.சி. ஜெயந்தன்

படங்கள் : ராஜன்

பாரதி படத்தில் பாரதியின் மருமக னாக நடித்த கணேஷ்பாபு, நாரதர் வேடத் துக்காக, மீசையை எடுத்த தஞ்சை இளைஞர். சினிமாவில் பெயர் சொல்லும் குணசித்திர நடிகனாக வேண்டும் என்று லட்சியம் வைத்திருக்கும் கணேஷ்பாபு, நமக்காகவும் தமது மீசையைத் தியாகம் செய்தார். ஏவி.எம்.மின் 'ஒரு பெண் ணின் கதை', 'ஜனனி', கவிதாலயாவின் 'மைக்ரோ தொடர்கள்', 'அண்ணி' இப் போது 'ஆசை', 'ருத்ரவீணை', 'தாலி' போன்ற மெகா தொடர்களிலும், 'சொல்ல மறந்த கதை', 'சாமுராய்' என்று திரைப்படங்களிலு மாக மாறி மாறி குணசித்திர பாத்திரங் களில் வளைய வரும் இவர், தமது 'தாயகம்' நாடகத்திற்காக மாநில விருது பெற்றவர். ●



கல்கி வார இதழ் வைரவிழா
கல்கி சதாசிவம் நூற்றாண்டு விழா



நிகழ்ச்சி நிரல்

4.8.2002 ஞாயிற்றுக் கிழமை,
காமராஜர் அரங்கம்.

காலை 9:00 : நாதஸ்வரம் :

செம்பனார்கோவில் கு. கல்யாணசுந்தரம் குழுவினர்

கல்கி வைரவிழா மலர் மற்றும் கல்கி சதாசிவம் அவர்களுக்கு அஞ்சலியாக ஆடியோ கேஸட் வெளியீட்டு விழா:

காலை 10:00 : இறைவணக்கம் : **காயத்ரி வேங்கடராகவன்**

மலர் வெளியிடுதல்; தலைமையுரை : **ப. சிதம்பரம்**

தலைவர், காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை

முதல் பிரதிகளைப் பெற்றுக் கொள்பவர் : **ஏவி.எம். சரவணன்**

சிறப்புரை : **'சோ' ராமசுவாமி**

காலை 11:30 : **கல்கி வைரவிழா இலக்கியப் போட்டிகள் : பரிசளிப்பு விழா**

பரிசுகளை வழங்குதல்; வாழ்த்துரை :

தமிழக உயர்நீதிமன்ற நீதிபதி மாண்பமை **பிரபா ஸ்ரீதேவன்**

இலக்கியப் பேருரை : **கவியரசு வைரமுத்து**

மாலை 5:00 : **மங்கல இசை**

6:00 : **தமிழ்த்தாய் வாழ்த்து**

6:05 : **பாரதியார் பாடல்: திரு. சிக்கில் குருசரண்**

6:10 : **வரவேற்புரை**

6:20 : **வாழ்த்துரை: டாக்டர் சுதா சேஷய்யன்**

6:30 : ***சதாசிவம் - சில நினைவுகள்:*** **என். ராம், ஆசிரியர், ஃபிரண்ட்லைன்.**

6:45 : ***தலைமையுரை :***

மேதகு தமிழக ஆளுனர்

திரு பெ. ஸ்ரீ. ராமமோகன் ராவ்

7:00 : **நன்றியுரை**

7:15 : ***இன்னிசைக் கச்சேரி:*** **நித்யஸ்ரீ மகாதேவன் குழுவினர்**

8:45 : **தேசிய கீதம்**

அனைவரும் வருக
தங்கள் வருகை எங்களின் பேருவகை

கந்தனைக் காண்கையில் கவலைகள் எல்லாம் தீரும்!

வளங்கள் தரும் திருத்தணியில் முருகனடியார்களுக்கு 'ஆடி கிருத்திகை' திருநாளன்று அன்னதானத் தொண்டில் ஈடுபட வாய்ப்பு!

பேரன்புடையீர்! வணக்கம். ஸ்ரீ முருகப்பெருமான் தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

● முருகன், அழகன், கந்தன், கார்த்திகேயன் என்று மனமுருகி அழைப்பவர் முன்னால் ஓடிவந்து நிற்பவன் தமிழ்க்கடவுளாம் முருகப் பெருமான். அத்தகைய ஆறுமுகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருவருள் நிறைந்த திருத்தணிகை மலை. ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேதராய் அமர்ந்து அருளாட்சி பொழியும் திருத்தலத்தில் திருத்தணி மலைமீதில், வரம் வேண்டிவரும் பக்தர்களுக்கு, தெய்வப்பிரசாதமாக அன்னதானம் "திருத்தணி அன்னதான சேவா சமாஜம்" மூலம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அன்னதான அரும்பெரும்பணியில் ஆன்மீக அன்பர்களும், முருகப்பெருமான் பக்தர்களும் பங்கேற்று மாதாமாதம் சிறப்புமிகு அன்னதான திருப்பணி திருத்தணியில் தெய்வீகப்பணியாக தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம். சிறப்புமிகு சிங்கார மலை 2000 ஆண்டுகளுக்கு முன்பு நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை முதல் குமரகுருபரர், கச்சியப்ப முனிவர், கச்சியப்ப சிவாச்சாரியார், அருணகிரிநாதர், வள்ளலார், பாம்பன் சுவாமிகள், ஆகியோர் பாடிய அருட்பாடலின் சிறப்பு பெற்ற மலை திருத்தணிகை மலை. அத்தகைய திருத்தணியில் அன்னதானம் செய்வதன் மூலம் மனை நிறைய செல்வமும், மனம் நிறைய மகிழ்ச்சியும், வேண்டுதல்கள் நிறைவேறி, பிள்ளை வரமும், கல்வியில் உயர்வும் உங்கள் வாழ்வில் என்றும் நிலைத்திட, திருத்தணி முருகப்பெருமானை வேண்டுகிறோம்.

தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தெரிவித்தால் அதன்படி நாங்கள் கிருத்திகை அன்று உங்களுக்காக பூஜை, அர்ச்சனைகள், அன்னதானம் செய்து பிரசாதத்துடன் திருத்தணி ஸ்ரீ முருகன் படத்தையும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.


❖ பிறந்தநாள் ❖ திருமணநாள் ❖ முன்னோர்கள் திதி நாள் ❖ வாழ்க்கையில் உயர்வு ❖ தொழிலில் முன்னேற்றம் பெற ❖ நிரந்தர வேலை பெற ❖ கல்யாண பாக்கியம் பெற, நல்ல வரன் அமைய ❖ புத்திர/பிள்ளை பாக்கியம் பெற ❖ கணவன் - மனைவி இடையே ஒற்றுமை நிலவ ❖ கஷ்டங்களும், கடன்களும் எதிர்ப்பு இடையூறுகளும் நீங்க ❖ புதிய முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும் உண்டாக ❖ புதிதாக தொழில் தொடங்க ❖ புதிதாக வீடு/ மனை பெற ❖ வாகன யோகம் பெற ❖ நல்ல சிந்தனை பெற ❖ சிந்தனை வளம் பெருக ❖ உடல் ஆரோக்கியம் பெற ❖ நீண்ட ஆயுள் பெற ❖ தெய்வசக்தியுடன் திகழ ❖ குடும்ப ஒற்றுமை பெற ❖ உலக ஒற்றுமை பெற ❖ சமுதாய ஒற்றுமை பெற ❖ தேச ஒற்றுமைபெற ❖ எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும்.

- தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு பிள்ளையார்பட்டியில் பூஜிக்கப்பட்ட வெள்ளெருக்கு வேர் விநாயகரும், திருத்தணி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி வண்ணப்படமும், சிறிய அளவில் கந்தர் சஷ்டி கவசம் புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் கிருத்திகை அன்று திருத்தணியில் அன்னதானம் செய்து தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெறவேண்டும் என்ற இறைசிந்தனையோடு ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள அருணகிரிநாதர் அருளிச்செய்த "திருப்புகழ்" நூலை அனுப்பி வைக்கிறோம்.

● நன்கொடை அனுப்பும் முருகபக்தர்கள் (Thiruthani Annadhana Seva Samajam, Chennai - 4) என்ற பெயரில் Cheque /D.D/ M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அன்னதான திருப்பணிகளை நலம்தரும் இறைபணி சேவைகளாக 'திருத்தணி அன்னதான சேவா சமாஜம்' ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன் வேண்டுகிறோம்.



Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

திருத்தணி அன்னதான சேவா சமாஜம்

THIRUTHANI ANNADHANA SEVA SAMAJAM (Regd.)

68, Nadu Street, (Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

Tel : 4959302 Fax : (044) 4616311 E - Mail: sivasiva@vsnl.net

முருகனுடைய திருவடியில் தண்டையாகவும், சிலம்பாகவும் இருப்பது வேதம்தான்.



முருகன் கோயிலில் புலிகள்?

● சென்னை மாநகராட்சியின் நிதிக் குழுக்களில், ஒரு குறிப்பிட்ட குழுவின் தலைவராக வரும் கவுன்ஸிலருக்குக் கூடுதல் 'வெயிட்' உண்டு. இப் பிரிவில் 155 வட்டங்களில் மொத்தம் 155 ஆய்வாளர்களும், 155 உதவியாளர்களும் உள்ளனர். அத்தனைப் பேரும் இந்தக் கவுன்ஸிலருக்குக் கப்பம் கட்ட வேண்டுமாம். ஆக அவரது மாத கட்டிங், வேறு பல இனங்களையும் சேர்த்து ஒரு லட்சத்து ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய். பல ஆய்வாளர்கள் துணை மேயர், கமிஷனர், அதிகாரி என்று போய்ப் பார்த்துப் புலம்பியும் பயனில்லை. ''சென்ற தி.மு.க ஆட்சியில் இதே பொறுப்பில் இருந்த பெண்மணியின் பாரம்பரியத்தைத்தானே நான் பின்பற்றுகிறேன்'' என்று சொல்கிறாராம் அந்த கவுன்ஸிலர்.

● அ.தி.மு.க.வில் அம்மாவின் கனிவுக்கு ஆட்படாமல் ஓரங்கட்டப் பட்டிருப்பவர்கள் நிறைய. அம்மாவின் அருட்பார்வைக்கு ஆளாகி விடுவோம் என்ற நம்பிக்கையில் அவர்கள் தொடர்ந்து கட்சிப் பணியில் செயல்படுகிறார்கள். ஓரங்கட்டப் பட்டிருக்கிற மதுசூதனன் இதே பாணியில் மீண்டும் வந்திருக்கிறார். ஆனால், சேலம் பாராளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி, அம்மாவால் ஓரங்கட்டிருப்பது பளிச்சென்று தெரிகிறபடியால் கழகப் பிரமுகர்கள் யாரும் அவருடன் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. அம்மாவின் சமீபத்திய சேலம் விஜயத்தின்போது இந்த ஓரங்கட்டல் அப்பட்டமாகத் தெரிந்தது. ''தாம் செய்த தவறு என்ன?'' என்று சுய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார் செல்வகணபதி.

● லண்டனில் உள்ள முருகன் கோயிலில் நிர்வாகிகளாக இருப்பவர்கள் ஈழத் தமிழர்கள். சமீபத்தில் ஒரு விசேஷத்தின்போது ராணி எலிசபெத்தும், ராஜா எடின்பரோ கோமகனும் கலந்துகொண்டார்கள். அங்குள்ள சிவாச்சாரியார்களைப் பார்த்து "you are all tigers!'' என்று கோமகன் கேட்கவே, சிவாச்சார்யார்கள் திகைத்துப் போய் விட்டார்களாம். கோமகன் அவ்வப்போது இது போன்று ஏதாவது பேசி கலக்குவாராம்!

- சஞ்சயன்

• ராணி எலிசபெத்



• செல்வ கணபதி





காதில் விழுந்தவை!



11

உங்கள் பிரச்னைக்கு மூலகாரணம் நீங்கள் தான். உங்கள் மனம்தான். உங்கள் மனம்தான் ஏகப்பட்ட வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறது. சிறிய கஷ்டத்தைப் பெரிதாக்கி, நாளை இதைவிட பெரிய கஷ்டம் வந்து விடுமோ அல்லது கையில் இருக்கிற கஷ்டம் விஸ்வரூபம் எடுத்து விடுமோ என்று பயம் காட்டுகிறது. இதே மனம்தான் சிறிய சந்தோஷத்தை மிகப் பெரிய அதிகார பலம் என்றும் இன்றிலிருந்து மிகப் பிரமாதமான அதிர்ஷ்டம் வந்து விட்டதென்றும் அலட்டிக் கொள்கிறது. தன்னைப் போல் கெட்டிக்காரன் உண்டா என்று சந்தோஷமான போது பீற்றிக் கொள்கிறது. என்னைப் போல் துர்பாக்கியசாலி உண்டா என்று வருத்தமான போது அழத் துவங்குகிறது.

உண்மையில் துக்கமோ, சந்தோஷமோ அதனதன் அளவில் மிக மிகச் சாதாரணம். எடுத்துச் சிறிது நேரம் அனுபவித்து விட்டு கீழே போட வேண்டியவை. இப்படி எடுத்துக் கீழே போட நமக்குத் தெரிவதில்லை. இதைத் தெரிந்து கொள்ள சில வழிகள் இருக்கின்றன.

மனம் நிதானமாக இருந்தால்தான் இந்தப் பிரச்னைகளைச் சரியாக அணுக முடியும். மனம் நடுநிலையில் இருந்தால்தான் இந்தப் பிரச்னைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

மனத்தை நடுநிலையில் வைத்துக் கொள்வது எப்படி?

அது. ஒன்று இறந்த காலத்தில் இருக்கும் அல்லது எதிர்காலத்தில் இருக்கும். நாளைக்குக் குபேரனாகி விடுவேன் என்ற ஆசை இருக்கும் அல்லது நாளை முற்றிலும் அழிந்து நாசமாய்ப்



பாலகுமாரன்



மனம் உருகுதே...

போய் விடுவேன் என்ற பயம் இருக்கும். இதற்குக் காரணம் இறந்த காலத்தில் கிடைத்த நூறு ரூபாய் அல்லது ஏற்பட்ட துக்கம். நூறு ரூபாய் கிடைத்தால் மறுநாள் குபேரன் என்றும் ஒரு சிறிய துக்கம் ஏற்பட்டால் வாழ்க்கையே அழிந்து போய்விட்டதென்றும், இறந்த காலத்தோடு மனம் சம்பந்தப்படுத்தி எதிர்காலத்தை கொண்டாடிக் கொண்டிருக்கிறது. நிகழ்காலத்தைப் பற்றி மனம் கவலைப்படுவதில்லை. நிகழ்காலத்தைப் பற்றி யோசிப்பதுதான் நடுவில் நிற்றல். நடுநிலையில் நிற்றல்.



இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறேன். இப்பொழுது என்ன மனோநிலையில் இருக்கிறேன் என்று மனத்தை உற்றுப் பார்ப்பது என்பது நமக்கு வருவதே இல்லை. எல்லா ஞானிகளும் நடுநிலையில் எப்பொழுதுமே நிற்கிறார்கள். அதனால் தான் அவர்களுக்கு மற்றவர்களுடைய பிரச்னைகளை, மற்றவர்களுடைய மனோநிலைகளை நன்கு புரிந்து கொண்டு அதற்கேற்றபடி பரிகாரம் செய்ய முடிகிறது.

நமக்குள் உள்ள ஞானத்தைத் தூண்டி விடுவது எப்படி? நாம் நம்முடைய பிரச்னைகளை நாமாகத் தீர்த்துக் கொள்வது எங்ஙனம்? இதற்கு என்ன உபாயம் உண்டு? நடுநிலையில் நிற்றலை எப்படி வழிக்குக் கொண்டு வருவது? எப்படிக் கடைபிடிப்பது என்று கேள்வி வரலாம். அதற்காகச் சில பயிற்சிகள் இருக்கின்றன.

உலகத்தில் பயிற்சியில்லாமல் எந்த விஷயமும் நடைபெறுவதில்லை. உண்ணுதல் என்பதை ஒரு குழந்தை செய்வதற்கும் வளர்ந்தவர் செய்வதற்கும் வித்தியாசம் இருக்கிறதல்லவா? வளர்ந்தவருடைய உண்ணுதல் ஒழுக்கமாக இருப்பதற்கு என்ன காரணம்? குழந்தையினுடைய உண்ணுதல் சிதறலாக இருப்பதற்கு என்ன காரணம்? பயிற்சிதானே! அதே போல நடுநிலையில் நிற்க சில விதிமுறைகளைக் கடைப்

"என் கணவர் சதா ஆபீஸ் ஞாபகமாகவே இருப்பார்..."

"அட, நிஜமாவா?"

"ஆமா, வீட்டில் சாப்பிடும்போதுகூட தட்டை மேஜைக்கு அடியிலதான் நீட்டுவார்னா பாரேன்!"

— வி. சகிதா முருகன்

பிடிக்க வேண்டும். இடையறாது இறைவன் நாமம் சொல்கிற பொழுது அது மனத்தை நடுநிலைக்குக் கொண்டு செல்கிறது. கூட்டமாய்ச் சொல்கிறபொழுது அந்த நடுநிலைக்கு வருவது வெகு எளிதில் நடைபெறுகிறது. அடிக்கடி செய்கிற போது நடுநிலைக்கு வர புத்தி பழக்கமாகி விடுகிறது.

எல்லா இடத்திலும் சாப்பிட முடியுமா? அது ஆரோக்கியமானதா? அதே போல எல்லா இடத்திலும் இம்மாதிரி நாமாவளி சொல்ல இயலாது. நாமாவளி சொல்வதற்கென்று சில இடங்கள் உலகத்தில் இருக்கும். அது கடவுளுடைய அனுக்கிரகம். அம்மாதிரி இடத்தில் செய்கிறபொழுது நம்மால் இன்னும் தெளிவு அதிகம் பெற முடிகிறது.

அந்த நீளமான பத்திரிகை விவரித்துக் கொண்டு போயிற்று.

ரேவதி உரக்கப் படித்துக் கொள்ள, கண் மூடியபடியே ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டிருந்தார்.

எங்களுடைய இல்லமான 'குரு அனுக்கிரகம்' என்ற இடத்தில் இம்மாதிரியான நாமாவளி சொல்லுதலும் தியானமும், பூஜைகளும் நடைபெறுகின்றன. விசேஷ நாட்களில் ஹோமங்களும் நடத்துகிறோம். ஆர்வம் உள்ளவர்கள் என்று வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம்.

உங்கள் பிரச்னைகளை இந்த உலகத்தில் எவரும் தீர்த்துவிட முடியாது. உங்கள் பிரச்னைகளை நீங்கள்தான் தீர்க்க முடியும். நீங்கள் போட்ட முடிச்சை நீங்கள்தான் அவிழ்க்க வேண்டும். உங்களுடைய முடிச்சு எங்கிருக்கிறதென்று நீங்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும். அதற்குண்டான உதவியைத்தான் எங்களுடைய 'குரு அனுக்கிரகம்' என்கிற அமைப்பு செய்கிறது.

இது இறைவன் எங்களுக்கு இட்ட பணி.

வருக. நலம் பெறுக! என்று அந்தப் பத்திரிகை முடிந்திருந்தது.

"எவ்ளோ அழகா எழுதியிருக்கார் இல்லை? உங்களுக்குப் புரியுதோ இவர் சொல்றது?"

ரேவதி எல்லாம் புரிந்தது போலக் கேட்டாள்.

"அதையும் தவிர கட்டணம் ஏதுமில்லைன்னு போட்டிருக்கானே."

"கட்டணம்னு ஒண்ணும் கேட்க மாட்டா. நன்கொடைன்னு கேட்பா. காசு இல்லாத எந்த வியாபாரமும் நடக்காது."

"இதை வியாபாரம்னா சொல்றேள்?"

"வேறே எப்படிச் சொல்லு."

"உங்களுக்கு ஏன் இந்த சங்கரன் ஐயர் மேலே கோபம் வந்துண்டே இருக்கு?"

ரேவதி பட்டென்று கேட்க அவர் மௌனமாக நின்றார்.

"என்னை அப்படித் துரத்தினது எனக்குப் பிடிக்கலை."


"ஏதோ காரணமிருக்கும்."

"என்ன காரணம்?"

"நீங்க ரொம்ப கோபமா, ரொம்ப படபடப்பா, ரொம்ப ஆத்திரமா இருந்தேள். நானும் அப்படித்தான் இருந்தேன். கோவில்ல உட்கார்ந்து ஆ...ஊன்னு அழுதுட்டு அங்க போய் ஒரு பெரியவர் முன்னாடி எப்படி நிக்கறது. மூஞ்சிய அலம்பிண்டு, கைகால் அலம்பிண்ட போதும் நமக்கு அந்த ஆத்திரம் தீரலை. என்ன துக்கம் அப்படின்னு அவர் கேட்டிருந்தா நான் மறுபடியும் அழ ஆரம்பிச்சுருப்பேன்."

"நீ அழுதா என்ன தப்பா? யார் அழுகையும் அவர் பொறுத்துக்க மாட்டாரோ. மாடியிலிருந்தபடியே நாளைக்குப் பார்த்துக்கலாம்னு சொல்றது எவ்வளவு அயோக்கியத்தனம். மேலே கூப்பிட்டு, 'நான் இப்போ ரொம்ப பிஸியா இருக்கேன். நாளைக்கு வா'னு சொன்னா அதுலே ஒரு மரியாதை இருக்கு. ஆளைப் பார்க்காமயே வெளிய போன்னாக்க! எவன் பேச்சையோ கேட்டுண்டு போனேன்ம்பார். அது தான் முட்டாள்தனம்."

"ஏதோ சொல்லிட்டுப் போங்கோ. இந்த அழைப்பிதழ்ல இருக்கறது நன்னாயில்லையா? இவர் சொல்லியிருக்கற விஷயம் உங்களுக்குப்



புரியலையா. நடுநிலையில் நிற்றல். எனக்கென்னமோ புரிஞ்சா மாதிரி தோன்றது. நேத்து பத்தியும் கவலைப்பட வேண்டாம். நாளை பத்தியும் கவலைப்பட வேண்டாம். இன்னிக்கு என்ன சோறு இருக்கு, காசு இருக்கு, குத்துக் கல்லு மாதிரி நான் இருக்கேன். எனக்கு நீங்க இருக்கேள். ஏதாவது பேசிண்டிருப்போமே."

அவள் உரக்கச் சொல்ல அந்தப் பத்திரிகையின் விஷயம் அவருக்கும் சட்டென்று புரிந்தது.

அவர் விழி விரித்து ரேவதியைப் பார்த்தார்.

ரேவதி அவரைப் பார்த்து புன்சிரிப்பு செய்தாள். அவர் அருகே போய் ரேவதியின் தலையைத் தடவிக் கொடுத்தார்.

"பசிக்கறது - சாப்பிடலாமா?"

அவர்கள் இரண்டு பேரும் டைனிங் டேபிளை விட்டு விட்டு சமையல் அறையிலேயே தரையில் உட்கார்ந்து சுற்றிப் பாத்திரங்களை வைத்துக் கொண்டு ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு சாப்பிடத் துவங்கினர்.

ஏதோ பாரம் குறைந்தது போல் தோன்றியது.

"நாமும் ஏதாவது சொல்லிப் பார்க்கலாமா?"

ரேவதி அடிக்குரலில் கெஞ்சும் பாவனையில் புருஷனைக் கேட்டாள்.

ராதாகிருஷ்ணன் கண்கள் மூடி உட்கார்ந்து கொண்டிருந்தார்.

இதுவரை சொன்னதில்லையே. இது சொன்னதால்தான் மாறப் போகிறதென்றால் இது வரை நடந்ததெல்லாம் எப்படி? நாமாவளி சொல்லாமல்தானே நன்றாகப் படித்தோம். எந்த நாமமும் சொல்லாமல்தானே உச்சிக்கு வந்தோம். எந்த திருப்பெயரையும் பேசாமல்தானே நாம் சுகமாக வாழ்ந்தோம். இப்பொழுது ஏதோ புரண்டு விட்டதென்று இந்த நாமாவளி சொன்னால் அது அந்த நாமாவளிக்கு இழுக்கு. என் கௌரவத்திற்கு இழுக்கு. என்னால் இதைச் சமாளிக்க முடியவில்லை என்ற ஒரே காரணத்திற்காகவே நான் ஏதேனும் புதிதாக ஆரம்பிப்பதை விட வழக்கமாக என்ன செய்து கொண்டிருக்கிறேனோ அதைச் செய்தால் போதாதா?

ராதாகிருஷ்ணன் யோசித்தார்.

உள்ளுக்குள்ளிருந்து ஒரு குரல் வந்தது.

ஆனால், நீ என்ன செய்யப் போகிறாய் ராதாகிருஷ்ணா. பெண்ணும், ஆணுமாய் உனக்கு இரண்டு குழந்தைகள். உனக்கு மத்திம வயது. இன்னும் பத்து வருடம் பொறுத்து உன் பெண் திருமணத்திற்கு நிற்பாளே! அப்பொழுது அவளுக்கு என்ன செய்வாய்? உன் பையன் மேற் படிப்புக்கு ஆசைப்படுவானே. அப்பொழுது எங்கிருந்து காசு கொண்டு வருவாய்? வீடு இல்லை என்பது மட்டுமல்ல. வேலையும் இல்லை என்று ஆகிவிட்டது. அடுத்த சம்பாத்தியம் எங்கே? யார் உனக்கு வேலை தரப் போகிறார்கள்? இந்த கோவிந்த நாயக்கப்பன் தெருவில் ஜார்ஜ் டவுன் வட்டாரத்தில் ஏதேனும் ஒரு கடையில் நல்ல கணக்கும், கள்ளக் கணக்கும் எழுதிக் கொண்டிருக்கின்ற சாதாரண குமாஸ்தாவாகத்தான் நீ இருக்க முடியுமே தவிர, இப்பொழுது செய்து கொண்டிருந்த அதிகாரம், அந்தச் சம்பளம் அந்தப் பரபரப்பு உனக்கு எவரேனும் தருவார்களா? வேலை செய்ய ஓர் இடம். அதற்கு மேலே வீடு என்று யாரேனும் வசதி செய்து தருவார்களா?

மயிலாப்பூரின் குறுகலான தெருவில் நீளமான சந்தில் இரண்டாயிரத்து நானூறு ரூபாய்க்குச் சிறிய போர்ஷனில் மழை ஒழுக வெய்யில் காய புழுங்கித் தவிக்கிற போது வாழ்க்கையே நொந்து போயிருக்குமே. அப்படியில்லாது அரசபோகமல்லவா அனுபவித்தோம். இப்பொழுது அந்த அரசபோகம் போகப் போகிறது. வேலை போகப் போகிறது. என்ன செய்யப் போகிறாய்? இப்பொழுதும் மனம் உருகி கையேந்த மாட்டாய் என்றால் என்ன

கதிக்கு ஆளாவாய்? உன்னுடைய நல்ல காலங்கள் முடிந்து விட்டது ராதாகிருஷ்ணா. பரிபூரணமாக அனுபவித்து விட்டாய். இனி சோதனைக் காலம். இந்தச் சோதனைக் காலத்தை எப்படித் தாண்டப் போகிறாய்? உனக்குச் சோதனை வந்து பழக்கமில்லையே! துன்பம் தாங்கி அனுபவமில்லையே! சொத்து என்ன இருக்கிறது? கையில் பணமாக எவ்வளவு வைத்திருக்கிறாய்? வங்கிக் கணக்கு என்ன இருக்கிறது? மனைவியின் கழுத்தில் நகைகள் எவ்வளவு போட்டிருக்கிறாய்? எல் லாம் தானம் செய்து பழக்கப்பட்ட கை. சேர்த்து வைக்கவோ, திருடி வைக்கவோ தெரியாத கை. உன்னுடைய இடத்தில் வேறு எவராவது இருப்பின் லட்சம் லட்சமாகச் சுருட்டியிருப்பார்கள். அலுவலகத்தில் உட் கார்ந்து கொண்டே இன்னொரு அலுவலகத்து வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்திருப்பார்கள்.

கப்பல்ல சாமான் அனுப்பணுமா, நான் ஏற்பாடு பண்றேன். கப்பல்ல உங்க சாமான் போகணுமா நான் ஏற்பாடு பண்றேன் என்று வேறு விஷயத்தை, இங்கே மின்சாரத்தைப் பயன்படுத்தி, இரவு பகலாய் வேலை செய்து நிறைய சம்பாதித்திருப்பார்கள்.

உனக்குச் சம்பாதிக்கத் தெரியவில்லை ராதா கிருஷ்ணா. சாமர்த்தியம் போதவில்லை இப்பொழுது சோதனை. தொண்டைக்குழியில் கத்தி வைப்பது போல் வந்ததும் அலறுகிறாய். நாமாவளி சொல்லலாமா என்று யோசிக்கிறாய். நாமாவளி வேண்டாம் ராதாகிருஷ்ணா. என்ன செய்தால் மேலும் முன்னேறலாம் என்று யோசனை செய். தந்திரமாக இரு. தந்திரமாகப் பேசு. பிழைக்கத் தெரிந்து கொள். வாழ்க்கை சூதாட்டம். நன்றாக ஆடு.

ஆனால், சூதும்வாதும் வேதனை செய்யும் என்று சொல்லியிருக்கிறார்களே.

யாருக்கு? ஆடுகிறவனுக்கா வேலை செய்யும்? எதிராளிக்கல்லவா' வேதனை செய்யும்? வாழ்க்கையில் முன்னேறிய அத் தனை பேரும் சூதாடிகள்தான். பேசத் தெரிந் தவர்கள்தான். 'சொல் வலன் சோர்விலன்' என்று நீ கேள்விப்பட்டதில்லையா? மனைவி யோடு சிருங்காரம் செய்து உட்கார்ந்து விட் டாய். சாதாரணக் கணக்குப் பிள்ளையாகி விட்டாய். ஒரு விஷயத்தை அதனுடைய எல்லை தாண்டி யோசிக்க உனக்கு ஒன்றும் தெரியவில்லை.

வானம் முடியற இடத்துல ஊரும் முடியுதா என்று தொலைதூரம் இருக்கும் பச்சைப்



புல்வெளியைப் பார்த்துக் கேட்கும் நாட்டுப் புறத்துப் பெண்ணைப் போல வாழ்ந்து விட் டாய். எல்லை முடியாது. எல்லை முடிந்த பிறகு மறுபடியும் ஒரு எல்லை ஆரம்பிக்கிறது. எங்கு முடிவது போல் தோற்றமளிக்கிறதோ அங்கு மறுபடியும் ஒரு மிகப்பெரிய விரிவு இருக்கிறது.

ரேவதி சின்னப் பெண். அப்பாவித்தனமாக வளர்ந்த பெண். அவளுக்கு இம்மாதிரியான நாமாவளிகளும், பஜனைப் பாடல்களும், ஹோமங்களும் மயக்கத்தைக் கொடுக்கும். உனக்கும் இதேதான் கொடுக்குமெனில் நீ

இதுவரை வாழ்ந்தது அர்த்தமேயில்லை. நீ வியாபாரி. வியாபார உலகின் முக்கியப் புள்ளி. பெரிய வியாபாரிக்கு வலதுகரமாய், இடதுகரமாய் எல்லாமுமாய் இருந்தவன் நீ. காலையில் எழுந்ததும் ஹிண்டு பேப்பரைப் படித்து இன்று தங்கம் என்ன விலை? வெள்ளி என்ன விலை? டாலர் மதிப்பு என்ன என்றுதானே பார்க்கிறாய். கடைசியாகத்தானே ஆன்மிகப் பகுதி. இப்போதைக்கு என்ன நாமாவளி கேளு. பஜனைப் பாடல்கள். ஏன் ஹேராமம்? எதற்கு சங்கரய்யர்? எவ்வளவு அடிபட்டாலும் தாங்க மாட்டாயா உதறு.... உதறு ராதாகிருஷ்ணா.

ரேவதியின் பலவீனத்தை உன் பலவீனமாக எடுத்துக் கொள்ளாதே. இந்த மடமில்லையெனில் சந்தைமடம்.

எந்தக் கப்பலிலும் சரக்கை ஏற்றி இறக்க முடியும். எந்தக் கம்பெனியிலும் எந்த வேலையும் செய்ய முடியும்.

கிட்டத்தட்ட இருபதாயிரம் கம்பெனிகள் இருக்கும். ஏதேனும் ஒரு கம்பெனியில் உனக்கு வேலை கிடைக்காதா. ஐந்தாயிரம் ரூபாய் சம்பாதிக்க முடியாதா? வீடு என்ன, சாகவதமான குடித்தனக்காரன்தானே நீ. சொந்த வீடா? கீழே இருக்கின்ற நாடாரின் தீரம் வேறுவகையானது. அவர் அடிதடிக்காரர். கூலிப்படை வைத்திருப்பவர். வீட்டுப் பெண்கள் வரை அரிவாள் தூக்கிக் கொண்டு வீசிக் கொலை செய்யத் தயாராக இருப்பார்கள்.

நீ வேறு விதம். வேறுவிதமான வார்ப்பு. உன்னால் இந்த அடிதடி சண்டையில் ஈடுபட முடியாது. நாமாவளி வேண்டாம் ராதா கிருஷ்ணா. அடிதடி சண்டையும் வேண்டாம். புத்தி, புத்தி இருக்கிறது. உன்னை ஆள் வைத்து விரட்டினான் அல்லவா, அவனை எப்படி விரட்டினால் பயப்படுவான் என்று யோசனை செய். வெறுமே அழுது தோல்வியில் புறங் கண்டு போகாதே.

எத்தனை நாள் உழைப்பு. சம்பளம் தவிர வேறு என்ன வசதி உண்டு. ப்ராவிடண்ட் ஃபண்ட் உண்டா? ஒரு பென்ஷன் உண்டா? இதோ வெறும்கையாக உன்னை வெளியே அனுப்புகிறான். எந்த நஷ்ட ஈடும் இல்லாமல் அனுப்புகிறான். இந்த வேலைக்கு ஓர் அரசாங்க சிப்பந்தியாக இருந்தால் நிச்சயம் அவனுக்கு பென்ஷன் வந்திருக்கும். இந்த வேலைக்கு ஒரு கம்பெனி சிப்பந்தியாக இருந்தால் நிச்சயம் அவனுக்கு வேறு ஏதேனும் ஒரு போனஸ் கிடைத்திருக்கும். உன்னுடைய, உன் தகப்பனுடைய ரத்தத்தை உறிஞ்சி இப்பொழுது வெளியே போ என்று சர்வசாதாரணமாகச் சொல்கிறான். விற்கப் போகிறேன். எனக்கு வீடு வேண்டும் என்கிறான். உனக்கு அவர்கள் கொடுத்த ஒரேயொரு உதவி இந்த வீடு. இந்த வீடு வேண்டுமென்பதற்காக அந்த மூன்றாம் தலைமுறை வியாபாரத்தையே உதறி விலக்கி வைத்து விட்டது. உன்னை எதற்கும் லாயக்கில்லாதவனாக உட்கார வைத்து விட்டது.

ராதாகிருஷ்ணன் பின்பக்க முற்றத்தில் உலவினார். பல் கடித்தார்.

(தொடரும்)

வசந்த காலம்

நூறு ஓவியர்களுக்கு மேல், இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும், தங்கள் ஓவியங்களை ஒரு தர்மச் செயலுக்காக வழங்கியிருப்பது இதுவே முதல் முறையாக இருக்கக் கூடும். மனவளர்ச்சி குன்றியவர்களுக்காக முகப்பேரில் நடத்தப்படும் 'வசந்தம்' அமைப்புக்காக, இந்த ஓவியங்களை வழங்கியிருக்கிறார்கள். மணியம் செல்வன், ஆதிமூலம், அச்சுதன் கூடலூர், அல்பான்ஸோ, ஏ.வி. இளங்கோ, சந்தானராஜ், அந்தோணிதாஸ், மருது, எல்லோரும் இதில் அடக்கம். "அமேதிஸ்ட்' வளாகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டு, பிறகு பார்வையாளர்களுக்குக் கொடுக்கப்படும் படிவம் மூலமாக ஏலம் விடப்பட்டு, சேர்கின்ற தொகையை 'வசந்தம்' அமைப்புக்கு வழங்கப் போகிறோம்" என்கிறார் இதன் அமைப்பாளர் லட்சுமி வெங்கட்ராமன்.

– சித்தார்த்

ரஜினிக்கு முடிவெட்டணும்!



"நெல்சன் மண்டேலா எனக்குப் பிடித்த தலைவர். கடந்த ஆறு வருடமாக அவருடைய பிறந்த நாளன்று இலவசமாக குறைந்தது ஆயிரம் பேருக்கு ஹேர் கட் பண்ணுகிறேன். இதில் எனக்கொரு திருப்தி" என்கிறார் பெங்களூரைச் சேர்ந்த எம்.எஸ். முத்துராஜ்.

மண்டேலாவின் 84வது பிறந்த நாளான ஜூலை 16 அன்று பெங்களூர் பிச்சைக்காரர்கள் காலனியைத் தேர்ந்தெடுத்து காலையிலிருந்து மாலை வரை இலவசமாக முடி திருத்தியிருக்கிறார் இவர். இவருடன் பிரபல கன்னட திரைப்பட இயக்குநர் நாகதிஹள்ளி சந்திரசேகர் மற்றும் மூத்த கல்வியாளர் நரசிம்மையாவும் சிலருக்கு முடி திருத்தியிருக்கிறார்கள். "பார்பர்





என்றால் அசிங்கமாகப் பார்க்கிறார்கள். ஒன்றுக்குமே லாயக்கில்லாதவனை 'நீ... நான் லாயக்கு' என்று சொல்கிறார்கள். ஏனிந்த சாதி, மத, இன பாகுபாடு? எங்களுடையது 'ராயிந்தா' இனம். எங்களிலேயே பலர் தலித் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு முடி திருத்த மாட்டார்கள். கிராமங்களில் இது இன்னமும் நடந்து கொண்டுதானிருக்கிறது. அதனால் விழிப்புணர்வை ஏற்படுத்தவே, கிராமம் கிராமமாகப் போய் சுமார் ஒரு லட்சம் தலித்களுக்கு இலவச ஹேர் கட் பண்ணியிருக்கிறேன்" என்று சொல்லும் முத்துராஜ், கடந்த வருடம் 'கர்நாடக ராஜ் யோத்ரவா அவார்டு' வாங்கியிருக்கிறார். முதல்வர் கிருஷ்ணா விருது கொடுத்தார். அப்போது நான், "ஸார், உங்களுக்கு முடி திருத்த எப்போது வரட்டும் எனக் கேட்டேன். உடனே அரங்கத்தில் பயங்கர சிரிப்பலை. ஏனென்றால் எல்லோருக்குமே தெரியும் கிருஷ்ணா விக் வைத்திருக்கிறாரென்று! அவரும் சிரித்துக் கொண்டே 'சரி, ஷேவிங் பண்ண வீட்டிற்கு வந்து சேரு' என்றார். பல வி.ஐ.பி.க்களுக்கு நான்தான் பார்பர். சிவராஜ்குமார், ரமேஷ் அர்விந்த், உபேந்திரா, ஸ்ரீநாத்... பட்டியல் வெகு நீளம்" என்று குஷியாகச் சொல்கிறார் முத்துராஜ்.

ஸ்கூலுக்கே போகாத முத்துராஜின் கன்னட இலக்கிய அறிவு நம்மை திகைக்க வைக்கிறது. எழுத்தாளர்கள், படைப்பாளிகள் என்றால் அவர்களிடம் காசே வாங்குவதில்லையாம். தன்னுடைய சலூனான 'அமெரிக்கன் ஹேர் டிரஸ்ஸரில்' நாலாபுறமும் அடுக்கியிருப்பது கன்னட இலக்கியங்களைத்தான். முத்துராஜிற்கு இன்னொரு முகமும் உண்டு. காமெடியனாகப் பல திரைப்படங்களில் நடித்திருக்கிறார். நடிக்கிறார்! இருந்தாலும் முடி திருத்துவது முழு நேரத் தொழில்.


அது சரி, கடைக்கு ஏன் அமெரிக்கன் ஹேர் டிரஸ்ஸர்?

"நம்ம ஜனங்களுக்குப் பெயரில் ஒரு ஃபேன்ஸி கிக் வேணும். மற்றபடி உள்ளே வந்தாங்கன்னா அனந்தமூர்த்தி ஸ்டைல் தாடி வேணுமா? கப்பையா நாயுடு ஸ்டைலா என்று ஆரம்பித்து விடுவேன்."

முத்துராஜுக்கு ஓர் ஆசை. "ரஜினிக்கு ஹேர்கட் செய்ய வேண்டும். ப்ளீஸ் சொல்லீங்களா?" எனக் கேட்கிறார் குழந்தையாக!

— லதாசேகர்





வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
89, (பழைய 42) காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம்-612 001.
E-mail : vedagdps@sancharnet.in - Website : www.geocities.com/gdpskmu

☎ : (0435)
Off : 425948
Fax : 423777
Patasala : 422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்ககும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 460 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 120 மாணவர்களுக்கு 12 வேத, சாஸ்திர அத்யாபகர்கள், புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். *புதிய பாடசாலை கட்டிட நிர்மாணப்பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நன்கொடை வரவேற்கப்படுகிறது.*

தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு திட்ட விபரங்கள்	ஒரு முறைக்கான நன்கொடை தொகை (One Time)	நிரந்தர வைப்பு நிதி 'Corpus Fund'
ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs. 500	Rs. 5000
அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) க்ருஷ்ண (or) சுக்ல பக்ஷ த்வாதசி ஸமாராதனைக்கு [Please choose one specific (the above said) day of a particular month in a year for Samaradhana]	Rs. 1,500	Rs.15,000
ஒரு வேதம் பயிலும் மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs. 1 Lakh

Cross செய்யப்பட்ட D.D.-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.



அச்சோ!
ஐயையோ!
நாசமாய்ப் போச்சு!
தொலைஞ்சுது போ!
- இப்படியெல்லாம் இங்கே பேசாதீர்கள்!

ஒரு அடி நீளம், முக்கால் அடி அகலம் கொண்ட வெள்ளை வெளேர் அட்டையில் சிவப்பு மையினால் மொச்சைக் கொட்டை எழுத்தில் எழுதி முடித்தான் ராஜாராமன்.

வீட்டு நுழைவாசலில் கண் திருஷ்டி விநாயகர் படத்துக்கு மேலே ஆணி அடித்து, பார்வையில் படும்படி அட்டையை மாட்டி விட்டு, எவரெஸ்ட் சிகரத்திலிருந்து இறங்குகிற ஷெர்ப்பாவின் ஜாக்கிரதையுடன் மூணு அடி உயரமிருந்த முக்காலியிலிருந்து கீழிறங்கி, பெருமையுடன் தன் மார்பைப் பார்த்துக் கொண்டான்.

"என்ன இது?"

ஆணி அடிக்கிற சப்தத்தைக் கேட்டு, அடுக்களையிலிருந்து அச்சம் பிளஸ் அவசரத்துடன் கையில் பிடித்த கரண்டியுடன் ஓடி வந்திருந்த ரஞ்சனி கேட்ட மாத்திரத்தில், டீவி தொடர் தாடிச் சாமியார்களைப் போல ராஜாராமின் முகத்தில் ரத்தச் சிவப்பு ஜொலித்தது.

"நீ முதல்லே மோவாய்க் கட்டையிலிருந்து கையை எடு, சொல்றேன்!"

எடுத்தான். ஒரு நொடிப்பு நொடித்தான். "இப்ப சொல்லுங்க!"

"கடந்த பத்து நாட்களாக, தும்பரு கான சபாவில் சுவாமி ஜிஜுஞானந்தா லெக்சரைக் கேட்கப் போயிருந்தேனல்லவா?"

"தெரியுமே!"

"அங்கே ருசிகரமான சில விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்..."

"கான்டீனில் சாப்பிட்ட காசி அல்வா, கீரை வடை, ஆனியன் ரவாவைச் சொல்கிறீர்களா?"

"மண்டு! அது வயிற்றுக்கு சுயப்பட்ட அற்ப விஷயம். நான் சொல்வது வாழ்க்கைக்கு சுயப்பட்ட அற்புத சமாசாரம்..."

"புரியல்லியே!"

"உதட்டை அப்படிப் பிதுக்காதே ரஞ்சு! அதுவும்



'நெகடிவ்'வான பாவம்..."

"மறுபடியும் புரியல்லே!"

"சொல்றேன், கேள்.. தினசரி நாம் பேசுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும், செய்கிற ஒவ்வொரு அசைவுக்கும் தனித்தனி வைப்ரேஷன் - அதாவது - அதிர்வு உண்டாம்..." நல்ல

முகுந்தன்

அரியலூர் அழகேசா!



அதிர்வு உள்ள வார்த்தைகளைப் பேசினால் தான் எல்லாம் நல்லதாகவே நடக்குமாம்.."

"ஓகோ!"

"அச்சானியமாக - இந்த அட்டையில் உள்ளது போன்ற வார்த்தைகளைச் சொன்னால் நல்லது எதுவுமே நடக்காதாம். நடக்க விருப்பதும் தள்ளிப் போய் விடுமாம்!"

"கிஜுஸ்கிஜானந்தா சொன்னாரா?"

"ஆமாம்!"

"இது போல் அட்டையில் எழுதி வீட்டு வாசலில் மாட்டும்படியும் சொன்னாரா?"

"இல்லை. இது என் சொந்த ஐடியா! உனக்குத்தான் தெரியுமே - நம்ம வீட்டிலே சமீப காலமாகத் தொடங்குகிற எந்தக் காரியமும் சரியாக நடக்க மாட்டேங்குது.."

"அதான் தெரிஞ்ச விஷயமாச்சே!" என்ற ரஞ்சனி. "அக்கம்பக்கத்து ஃபிளாட்காரங்க நம்மைப் பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க. வாங்க, உள்ளே போய்ப் பேசுவோம்!" என்றாள்.

"நல்லது! நல்லது! நல்லது! ரொம்ப நல்ல ஐடியா! சந்தோஷம்!" என்றபடியே உள்ளே வந்தான் ராஜாராமன்.

"நம்ம பொண்ணு சுசித்ரா கல்யாணம் தடைப்பட்டுக்கிட்டே போகிறதைத்தானே சொல்கிறீர்கள்?"

"கபாலிக்குப் புத்தி பிசகிடுச்சு!"
"என்ன விஷயம்?"
"மாமூல் குடுக்கற தைரியத்துல ஸ்டேஷன்ல நடக்கற திருமணத்துக்கு எல்லாம் தலைமை தாங்குவேன்னு அடம் புடிக்கறான்!"
- அம்பை தேவா

"யெஸ்... அதுக்கு வலுவான காரணம் இருக்கு." என்றபடியே டேப்-ரெகார்டரைத் தட்டி விட்டான். கதிரி கோபால்நாத்தின் ஹம்ஸத்வனி காற்றில் கரையத் தொடங்கியது (ஸாக்ஸபோன் வைப்ரேஷன்!)

"என்ன காரணம் என்று இந்த அடியாள் தெரிந்து கொள்ளலாமா ஸ்வாமி?"

"பெண் பார்க்கிற படலத்தின்போது பேசப்பட்ட சில வார்த்தைகள்தான் காரணம்னு இப்பதான் புரிந்தது..."

"அப்படி யார், என்ன தப்பாகப் பேசி விட்டார்கள்?"

"அடையாறு பையன் வந்தானே, நினைவிருக்கா?"

"இருக்கு!"

"பையனுக்கு மாமா என்று சொல்லிக் கொண்டு பொடி வழிகிற மூக்குடன் காவி ஜிப்பா நபர் ஒருத்தர் வந்தாரே..."

"ஞாபகமிருக்கு..."

"பேச்சு வாக்கிலே அவரிடம் 'நான் வி.ஆர்.எஸ். வாங்கிக் கொண்டு விட்டேன்' என்று சொன்னதும், 'ஐயையோ! அப்படியா? இன்னும் பத்து வருஷ 'சர்விஸ்' பாக்கி இருக்கே உங்களுக்கு! நாசமாய்ப் போச்சு போங்க! என்று அலறினாரே... அதை மறந்துட்டியா?"

"மறக்கல்லே..."

இது மாதிரியெல்லாம் பெண் பார்க்கற சந்தர்ப்பத்திலே 'நெகடிவ்' அதிர்வு வார்த்தைகளைச் சொன்னால் சுபகாரியம் தடைப்பட்டுப் போகுமாம்..."

"ஓகோ!"

"யோசித்துப் பார்த்தேன். எதற்கும் ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும் என்றுதான் அட்டை எழுதி மாட்டினேன்."

"நான் ஒன்று சொன்னால் கோபிக்க மாட்டீர்களே?"

"பரவாயில்லை, சொல்லு!"

"வர்றவங்க 'என்னடா இது, புதுமையாக இருக்கே' என்று அட்டை வார்த்தைகளை வாய் விட்டுப் படித்தால் என்ன செய்வீர்களாம்?"

ஈரக் கையுடன் எலெக்ட்ரிக் ஸ்விட்ச்சில் கை வைத்தவன் போல அதிர்ச்சியடைந்தான் ராஜாராமன்.

"என்ன செய்வேனா? மென்னியிலே கையை வைத்து, நம்ம காம்பவுண்டுக்கு வெளியிலே கொண்டு போய்த் தள்ளிவிட்டு வருவேன்! கோபம் வந்தால் நான் நரசிம்மம் நஞ்சு!"

"இப்பவே சிலிர்த்து நிற்கிற பிடரி முடியும் ஒரு வாரத் தாடி - மீசையுமாக மிடில் ஏஜ் சிங்கம் போலத்தான் இருக்கிறீர்கள்... நாளைக்கு முதல் வேலையாகச் சலூனுக்குப் போய்விட்டு வாருங்கள்!"

"நல்லது! நல்லது! செய்கிறேன். அதுசரி, அந்த அண்ணா நகர் ஆசாமிகள் எப்ப வருகிறதாகச் சொன்னார்கள்?"

ரஞ்சனி பதிலளிப்பதற்குள் கீழே இருந்து, "வெங்கட்ரமணா! கோவிந்தா! கோவிந்தா! எங்கேடா போய்த் தொலைஞ்சுட்டீங்க மூதேவிப் பாவிகளா!" என்று கீழ் வீட்டுக்காரரின் ஆவேசக் குரல் இருநூறு 'டெஸிபல்' அளவில் மேலெழும்பி வந்து, செவிகளைத் தாக்கியது.

ராஜாராமன் பல்லை 'நறநற'த்தான். "இந்தக் கீழ்வீட்டுப் பசங்க பேரை முதல்லே மாற்றச் சொல்லம் ரஞ்சு! ஒரு நாளைக்கு நூறு தரமாவது 'கோவிந்தா' கோஷம்தான் கேட்குது!"

"நல்ல கதை போங்க! பெயரைச் சொல்லிக் கூப்பிடாதே என்று 'பொடா' சட்டமா போட முடியும்? அது அது அவங்க இஷ்டம்!"

"ஒழியட்டும் விடு!"

"இப்ப நீங்க மட்டும் நெகடிவ் அதிர்வுள்ள வார்த்தைப் பேசலாமா?"

சப்பாத்திக்குப் பிசைகிற மாவை மடக்குவது போல ரஞ்சனி சுலபமாக மடக்கியதும், மரவட்டையாகச் சுருண்டு போனான்

ராஜாராமன்.

ஊழல் வழக்கில் தாமதமாகத் தீர்ப்பு வந்தாலும் சுருங்குகிற அமைச்சரின் முகம் போலும் பரிதாபமாக ஒரு 'பார்வை' விட்டான்.

"இதெல்லாம் இருக்கட்டும். உங்களுக்குப் பிடிக்குமே என்று சூடாக வெங்காய பக்கோடா போட்டு வைத்தேன். டைனிங் டேபிள் மேலே ஆறிப் போய்க் கொண்டிருக்கிறது."

பழைய ராஜாராமனாக இருந்தால், 'அச்சோ!' என்றோ, 'ஐயையோ!' என்றோ, 'பாவி, கெடுத்தியே!' என்றோ அலறியிருப்பான். ஞானம் வரப் பெற்றதனால், பதில் எதுவும் பேசாமல் பாய்ந்தான் டைனிங் டேபிளை நோக்கி.

வெகு வெகு வெகு எச்சரிக்கையுடன் செயல்பட்டதாலோ என்னவோ, வீட்டில் 'எதிர்மறை அதிர்வு' கொண்ட வார்த்தைகள் தவிர்க்கப்பட்டன.

அதன் விளைவாக, ரிப்ளேயின் 'நம்பினால் நம்புங்கள்' புத்தகத்தில் இடம் பெறத் தக்க சில அதிசய நிகழ்ச்சிகள் நடந்தன.

அந்தக் குடியிருப்பில் இருந்த அடி பம்ப்பில் 'மெட்ரோ' தண்ணீர் தாராளமாக வந்தது.

காலையில் பாக்கெட் பால் போடும் பாலாம்பாள் கிழவி, 'லீக்' ஆகாத பால் பாக்கெட்டைத் தினமும் போட்டாள்.

பேப்பர் போடும் பையன், மாக் கோலத்தை மிதிக்காமலே ஜாக்கிரதையாகப் போனான்.

அட்லான்டாவில் உள்ள மகன் அரவிந்த்துடன் 'நெட்போன்' மூலம் தெள்ளத் தெளிவாக உரையாட முடிந்தது.

சத்திய நாராயணப் பெருமான் கோயில் வெண் பொங்கல் பிரசாத விநியோகத்தில் முழுசாக ஒரு முந்திரிப் பருப்பு கையில் சிக்கியது.

பழைய பேப்பர் வாங்கும் ஏகாம்பரம், எடை மோசடியை நிறுத்தினான்.

இந்த 'சாதனை'களையெல்லாம் ஒரு நாள் இரவு ராஜாராமன் பட்டியல் போட்டதும் மிகுந்த எச்சரிக்கையுடன், உதட்டைப் பிதுக்காமலே, "இதெல்லாம் சின்னச் சின்ன -அதுவும், அற்பமான விஷயங்கள்தானே! நீங்கள் 'அந்த' வார்த்தைகளைப் பேசியிருந்தாலும் நடந்திருக்கும்தானே?" என்று அவனது உற்சாக பலூனில் ஊசி ஏற்றினாள் ரஞ்சனி.

"பொறு பெண்ணே, பொறு! பெரிசாக நல்லது ஒன்று நடக்கத்தான் போகிறது! அதுவும் கூடிய விரைவில்!" என்று குடுகுடுப்பைக்காரன் போல வேக வேகமாகத் தலையை ஆட்டி, 'நல்வாக்கு' சொன்னான்.

"**வி**யாழக்கிழமை மாலை ஐந்து மணிக்குப் பெண் பார்க்க வருகிறோம். பிட்ஸ்பர்க்கிலிருந்து 'பையன்' வந்திருக்கிறான். அசௌகரியம் ஏதேனும் இருந்தால் உடனே தெரியப்படுத்தவும்."

முழு வாழைப்பழம் முழுங்கக் கிடைத்த குரங்குக் குட்டி போலக் குட்டிக்கரணம் போட வேண்டும் என்ற ஆசை எழுந்தது ராஜாராமனுக்கு.

'ரஞ்சு! பிட்ஸ்பர்க் மாப்பிள்ளை வரப் போகிறார். பிரமாதமாகப் பண்ணு ஏற்பாடுகளை! அசத்திவிட வேண்டும். அத்தோடு கனகதுர்க்கா டிராவல்சுக்கு ஃபோன் போட்டு, அடுத்த வருஷம் மார்ச் மாசம் பிரிட்டிஷ் ஏர்வேஸ் மூலம் பிட்ஸ்பர்க் போக ரெண்டு டிக்கெட் 'பிளாக்'



பண்ணச் சொல்லிடு. மறக்காதே!"

"அது எதுக்கு?"

"மண்டு! சுசித்ராவுக்குப் பிரசவம் பார்க்க நாம் இரண்டு பேரும் போக வேண்டாமா?"

அவனுடைய 'பாஸிடிவ் திங்க்கிங், எந்த அளவுக்குப் போய் நிற்கிறது என்று புரிந்தவளாக பிரமிப்பில் மூழ்கிப் போனாள் ரஞ்சனி.

பிட்ஸ்பர்க் 'பையன்' தன் அப்பா - அம்மா, தங்கை, அவளது கணவர், எட்டு மாசக் கைக் குழந்தை ஆகியவர்களுடன் வந்து இறங்கினான்.

அவர்கள் எல்லாரையும் விட ராஜாராமனுக்கு இன்னொரு நபரைத்தான் மிகவும் பிடித்துப் போய்விட்டது.

அந்த மனிதர் பஞ்சத்தில் அடிபட்ட பாச்சைக் குஞ்சு போல இருந்தாலும் அவரது குரல் பிக்பென் கடிகார மணியோசை போலக் 'கணீர்' என்றிருந்தது.

ஹாலில் வந்து உட்கார்ந்ததும் வலது கை கட்டை விரலை அவர் உயர்த்தி, தண்ணீர் வேண்டும் என்று கேட்டதும் வெயிலில் வைத்த வெல்லக் கட்டியாக உருகிப் போனான் ராஜாராமன்.

ஆகா! 'தம்ஸ் அப்' சமிக்ஞை! பாஸிட்டிவ் சைகை!

பாதாம் அல்வா தட்டுகளைக் கொண்டு வந்து ஒவ்வொருவரிடமும் நீட்டினாள் சுசித்ரா.

காபியும் பருகி முடித்தார்கள்.

பிட்ஸ்பர்க் பையன் சுசித்ராவைத் தனியே அழைத்துக் கொண்டு போய், ஏ.ஸி. அறையில் பேசிவிட்டு வந்தான்.

அதற்குள் இங்கே 'டெர்ம்ஸ்' பேசி முடித்தாகிவிட்டது. எல்லாம் திருப்திகரம்.

பையன் பச்சைக் கொடி காட்டினான்.

சுசித்ரா கண்களை ஒரு முறை மூடித் திறந்து, புன்னகைத்து சம்மதம் தெரிவித்தாள்.

ராஜாராமனுக்குப் பரம திருப்தி. அவன் முகத்தில் சந்தோஷ நுரை பொங்கி வழிந்தது.

" நிச்சயதார்த்தம் எப்போது வைத்துக் கொள்ளலாம்?" என்று கேட்பதற்கு அவனது நாக்குத் துடித்தது. 'அவசரப்படாதே! நிதானமாகக் கேள்!' என்றது உள்மனம்.

ப.அ.பா.கு. ராஜாராமனிடம் பேசினார். "உங்க பூர்விகம் எந்த ஊர்னு சொல்லவே இல்லையே?"

"அரியலூர்."

"எந்த அரியலூர்..? ரெண்டு, மூணு அரியலூர் இருக்கு."

"லால்குடிக்குப் பக்கத்திலே..."

"ஓ, அதுவா! 1952லே, பாலம் உடைஞ்சு, தண்ணியிலே ரயில் விழுந்து, நிறையப் பேர் செத்துப் போனா... அப்ப அழகேசன்னு ஒருத்தர் 'சென்ட்டர்'லே ரயில்வே மந்திரியாக இருந்தார். 'அரியலூர் அழகேசா! ஆண்டது போதாதா? மக்கள் மாண்டது போதாதா'ன்னு எதிர்க்கட்சிக்காரங்க போஸ்டர் அடிச்சு நிறைய்ய ஒட்டினாங்க... அட, அந்த அரியலூரா நீங்க!"

சு. சுவாமி

சொல்லாத கமெண்ட்!



காங்கிரஸ் - த.மா.கா. இணைப்புக்குப் பிறகு சைக்கிள் சின்னத்தையாவது பெற்றுவிட ப. சிதம்பரம் முயன்று வருகிறார். அரசியலில் செல்வாக்கு இழந்த சிதம்பரம், தேர்தல் ஆணைய அதிகாரிகளை இது விஷயமாகச் சந்தித்துப் பேசி வருகிறார். அந்தச் சின்னம் கிடைத்துவிட்டால் 'சைக்கிள் காங்கிரஸ்' என்ற பெயரில் தமது கட்சியை நடத்த அவர் முடிவு எடுத்திருக்கிறார். த.மா.கா. நிர்வாகிகளுக்கு இந்த விஷயம் தெரியாமல் இருப்பது அதிர்ச்சியாக இருக்கிறது.



நான் இப்போது

நாடாளுமன்றத்தில் புன்னகை செய்ய வைத்த விஷயங்களைச் சொல்கிறார் எஸ்.எஸ். சந்திரன் எம்.பி

"அம்மா என்னை ராஜ்ய சபாவுக்குத் தேர்ந்தெடுத்தபோது எனக்குத் தெரிந்ததெல்லாம் ஆர்.ஆர். சபா, கிருஷ்ணகான சபாதான். ஆனால் பல புகழ் பெற்ற பார்லிமென்டேரியன்களைப் பற்றிப் படித்தும், சபை நடவடிக்கைகளை அனுபவம் மிக்கவர்களிடம் கேட்டும் தெரிந்துகொண்டேன். அதனால்தான் நிருபர்களிடம் "நான் பிலுமோடியைப் போன்று செயல்படுவேன்" என்றேன். நகைச்சுவையாக குத்தல் பேச்சுக்களையும் கருத்தாழமிக்க தகவல்களையும் சொல்வதில் வல்லவர் சுதந்திரா கட்சி உறுப்பினராக இருந்த பிலுமோடி. ஆனால் தி.மு.க.வினர் என்னைக் கிண்டலடித்தார்கள்.


ராஜ்ய சபையில் எனக்கு இடதுபுறம் ஒரு தமிழக உறுப்பினர். வலதுபுறம் இந்தி பிரதேசத்தைச் சேர்ந்தவர். கன்னிப்பேச்சைத் தயார் செய்துகொண்டு சபைக்குச் சென்றேன்.

"தமிழ் உறுப்பினர், என்னலார், பேசப் போறீங்களா?" என்றார். "ஆமாம்.. பின்னே என்ன டிபன் சாப்பிடவா வந்திருக்கிறோம்" என்றேன்.

"உங்களுக்கு இரண்டே நிமிடம்தான்" என்றார் அவைத்தலைவர் நஜ்மா. "இரண்டு நிமிடத்தில் இரண்டு வரிதான் பேச முடியும். அதற்குத் திருவள்ளுவர்தான் சரி; என்னால் அதற்குள் பேச முடியாது" என்று பேசத் துவங்கினேன். நம்பமாட்டீர்கள். 22 நிமிடம் பேசினேன். வலது புறம் அமர்ந்திருந்த இந்தி உறுப்பினர் (அவர் பெயர் டாடா) "சபாஷ்! என்று கை கொடுத்து சாக்லேட்டையும் கொடுத்தார். "எனக்கு 'சர்க்கரை' பிரச்னை என்று மறுத்தேன். "லைஃப்பாயுடன் பேசி பழகும் வாய்ப்பு கிடைத்த எனக்கு வாஜ்பாய் அறிமுகத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தவர் புரட்சித் தலைவிதான். அவருக்குத்தான் பாராட்டு போய்ச் சேர வேண்டும்" என்று "லைஃப்பாய்" சோப் தயாரிப்பாளரான அவரிடம் சொன்னேன்.

ஒருமுறை நான் பேசத் துவங்கியபோது தலைவர் கிருஷ்ணகாந்த் அவை பொறுப்பில் இருந்தார். ஆங்கிலத்தில் பேசுங்கள் என்றார் அவர். 'தமிழில்தான் பேசுவேன்' என்றேன் நான். அவர் 'நோ... நோ' என்று சொல்ல நான் 'எஸ்.எஸ்' என்று சொல்ல ஒரே தமாஷ்தான். "ரஜினிகாந்த், விஜயகாந்த் ஆகியோர் என் நண்பர்கள். நீங்களும் ஒரு 'காந்த்'. எனக்குத் தடை போடலாமா? என்று கேட்டு ரூபாய் நோட்டில் உள்ள மொழிகளில் பதிமூன்றாவதாகத் தமிழ் இருக்கிறது. (பல உறுப்பினர்கள் உடனே நோட்டை எடுத்துப் பார்த்துக்





யு.கே.ஜி!


கொண்டனர்) அப்படிப்பட்ட தமிழ் மொழியில் இங்கு நான் பேச அனுமதிக்கப்படவில்லை என்றால் நமது நோட்டும் செல்லாத நோட்டாக அறிவிக்கப்பட வேண்டும்'' என்றவுடன் திகைத்த கிருஷ்ணகாந்த் என்னோடு இரும்பாக ஒட்டிக் கொண்டு, ப்ரோஸீட்... ப்ரொஸீட்'' என்றார்.

''சிரிக்கத் தெரியாதவன் மனிதனே இடையாது. மனிதனுக்கு இறைவன் கொடுத்த பெரிய வரப்பிரஸாதம் நகைச்சுவை. ஆனால் பிராணிகளுக்கு அந்தச் சுவை இடையாது; எனவே சிரியுங்கள்; வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்று சொல்லித் தொடர்ந்தேன். இப்படிச் சொன்னதற்குக் காரணம் உண்டு. சபையில் பெரும்பாலும் ஓய்வு பெற்ற நீதிபதிகள், அரசு, போலீஸ் அதிகாரிகள், முன்னாள் முதல்வர்கள் என்று எழுபது வயதுக்கு மேற்பட்டவர்கள்தான். பலர் அரைத் தூக்கத்தில் இருப்பது கண்டு ''என்னடா இது அப்பலோ ஆஸ்பத்திரி 'லாபி'யில் இருக்கிறோமா என்று கூட எண்ணத் தோன்றும். அதிலும் பலர் சிரிப்பையே தொலைத்து விட்டார்கள் போலிருப்பதுதான் வேதனை! சதா 'உர்...உர்' தோற்றம்தான்.. ஆனால் அதில் பலர் பேசத் துவங்கினால் 'வெடிகுண்டு'தான். நான் அவையில் நுழைந்தவுடன் கலகலப்பை ஏற்படுத்தும் விதமாக, ஹலோ.. ஹாய்.. என்று சலசலப்பை உண்டாக்குவேன். என்னாலும் இரண்டு நல்ல காரியங்கள் நடந்திருக்கின்றன. பாஸ்போர்ட் விண்ணப்பங்கள் பெற மாவட்டங்களில் அலுவலகங்கள் திறக்கப்பட்டன. ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் ஊட்டியிலிருந்து உத்தரபிரதேசத்துக்கு மாற இருந்ததை நிறுத்தியதும் என் முயற்சியில்தான். ''மாமோய் தான் கிளப்பிட்டே'' என்று என்னைப் பாராட்டியவர் ராதா ரவி. இப்போது நான் யு.கே.ஜி. ஆம்! உறுப்பினர் ஆகி ஒரு வருடம் ஓடிவிட்டது.

— ஸ்ரீநிவாசன்

படம்: ராஜன்

கல்கி வைரவிழா போட்டியில் முதல் பரிசு ரூ. 1000 பெறும் தமாஷ் ஹைகூ



மாடு வாங்காமலேயே
தீவனக் கணக்கு
மந்திரி தின்றது.

- தளவை இளங்குமரன்



புன்னகை



புன்னகை அரசி என்றால் பட்டென்று ஞாபகத்துக்கு வந்து விடுகிறார் கே.ஆர். விஜயா. இளைய தலைமுறையில் புன்னகை இளவரசி, புன்னகை இளவரசன் பட்டங்களை யாருக்குத் தரலாம்? என்று சென்னை கல்லூரி மாணவர்களான பிரதீப், அனந்து, மாதுரி, அஜித், விஜய், காயத்ரி, ராஜ்கிரன், ஜனனி ஆகியோர் தீவிர டிஸ்கஷனில் இறங்கினர்.

மாதுரி: புன்னகை இளவரசி, புன்னகை இளவரசன் பட்டங்களை யாருக்குத் தரலாம்ங்கற நாட்டின் மிக முக்கியமான பிரச்னை பற்றி நாம பேசப் போகிறோம்.

பிரதீப்: என்ன அறிமுகமா? ஆரம்பத்திலேயே சொல்லிடறேன். அர்ஜுன், பிரபு, கார்த்திக் போன்றவர்களை லிஸ்டிலிருந்து ஓரம் கட்டிடுங்க.

அஜித்: பிரபுதேவாவுக்கும் வயசாயிடுச்சப்பா. அவரையும் கழிச்சுக் கட்டிடலாம்.

ஜனனி: நடிகர்களைப் பொருத்தவரைக்கும், விஜய், பிரசாந்த், அஜித் மூணு பேரையும் கூட லிஸ்டிலே இருந்து தூக்கிடலாம்.

ராஜ்கிரன்: ஒரேயடியா, எல்லாரையுமே தூக்கிடுவீங்க போலிருக்கே.

அனந்து: சூர்யாவின் புன்னகை நல்லா இருக்கு.

ஜனனி: அது சரி! ஆனா அவரு முகத்துல பத்துகிலோ அப்பாவித்தனம் ஒட்டிக்கிட்டு இருக்கே!

பிரதீப்: அந்த விஷயத்துல அமுல்பேபி மாதவன் ஓ.கே.பா.

அஜித்: அவரோட பற்கள் ரொம்ப அழகுன்னு சொல்ல முடியாது.

காயத்ரி: அந்தப் பல்தான் மாதவனுக்கு அழகைக் கூட்டுது. அவரது முகத்தில் ஒரு பெச்சூரிடி இருக்கு. அதேநேரம் அவரது மைல்டு சிரிப்பில் ஒரு கவர்ச்சியும் இருக்கு. என்னைப் பொருத்த வரைக்கும் புன்னகை இளவரசன் பட்டம் கொடுக்க சரியான ஆள் மாதவன் தான்.

மாதுரி: மாதவன் சரிதான்; ஆனால் அவரது வசீகரத்துக்குக் காரணம், அலைபாயுதேவோ, மின்னலேவோ இல்லை. அவர் வரும் விளம்பரங்கள்தான். அதனாலதான் அவரும், அவரது புன்னகையும் வெகு 'பாபுலர்.



விஜய்: ஆனால், மாதவனுக்கு, முன்னே இருந்த அளவுக்கு ரசிகர்கள் இப்போ இல்லையே!

ராஜ்கிரன்: என் சாய்ஸ் ரோஜாக் கூட்டம் ஸ்ரீகாந்த்தான்.

பிரதீப்: ஸ்ரீகாந்தும், சூர்யா மாதிரி தான். முகத்தில் ஒரு அப்பாவித்தனம்

இளவரசி!

ஒட்டிக்கிட்டு இருக்கு.

காயத்ரி: அட போங்கப்பா! விக்ரமை மறந்திட்டீங்களே?

அனந்து: ஐயோ! சீயான் முகத்துல எப்பவுமே ஆக்ரோஷமும், ஆக்ஷனும்தான். அதில சிரிப்பு எப்போ வந்தது? புன்னகைப் போட்டியில கலந்துகிட்டாலும், அவர் ஜெயிக்க முடியாது.

மாதுரி: என் வோட்டு ஷாமுக்குத்தான். 12 பியிலாகட்டும், இப்போது ரிலீஸ் ஆகியுள்ள 'ஏய்! நீ ரொம்ப அழகா இருக்கே' படத்திலாகட்டும், அமுல் பேபி மாதிரியான அவரது முகத்தில் முதல் அட்ராக்ஷனே அவரது புன்னகைதான்! சூப்பர் ஸ்மைல்!

சரி என்று உரையாடலை சற்றே திருத்தி, ஷாமுக்குப் புன்னகை இளவரசன் பட்டம் தரலாமா? என்று கை உயர்த்தி, வோட்டுப் போடச் சொன்னபோது எட்டு பேரில், ஐந்து





பேர் கைகளை உயர்த்தினார்கள். அடுத்த இடம் பிடித்தவர் மாதவன்.

புன்னகை இளவரசி பட்டத்துக்குத் தகுதியானவர் யார் என்ற விவாதம் ஆரம்பமானது.

ஆளுக்கு ஒருவரை சிபாரிசு செய்யச் சொன்னபோது, மீனா, சிம்ரன் தொடங்கி, மின்னலே ரீமா சென், யூத் 'சந்தியா' வரை பல பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டன. அலசல் ஆரம்பித்தது.

அஜித்: ரம்யா கிருஷ்ணன் எப்படிப்பா?

ஜனனி: அஜித், விஜய் போல, ரம்யா கிருஷ்ணனை ஓரங் கட்டிடலாம். குஷ்பு, கன்னத்தில் குழி விழச் சிரிப்பார் என்றாலும், அவரும் வேணாம். டூ ஓல்ட்!

பிரதீப்: சிம்ரன், ஜோதிகா இருவரில் யாருடைய புன்னகை பெட்டர்?

ராஜ்கிரன்: சிம்ரன்தான்.

காயத்ரி: ஜோதிகாதான்.

மாதுரி: சிம்ரன் புன்னகை கொஞ்சம் மெக்கானிக்கலா இருக்கு. ஜோதிகாவிடம் துறு

துறுப்பு இருக்கு. ஆனால், புன்னகை இளவரசி பட்டம் பெறுகிற அளவுக்குச் சூப்பரான புன்னகை இல்லை.

பிரதீப்: பூமிகாவின் புன்னகை ஓ.கே.வா?

அனந்து: பூமிகா முகத்தில் ஒரு அப்பாவித் தனம்தான் இருக்கு.

விஜய்: அப்படிப் பார்த்தா, லைலாவின் முகமும் அப்பாவி முகம்தான். அதிலும் கவர்ச்சிகரமான புன்னகை எங்கே இருக்கு.

ஜனனி: மிஸ் சென்னை த்ரிஷா, காயத்ரி, ரகுராம், காய்த்ரி ஜெயராம் இவர்களுக்கு எல்லாமே மாடல்கள் போன்ற அழகு முகம் உண்டு. ஆனால், புன்னகையில் இயற்கைக்குத்தான் பஞ்சம்.

ராஜ்கிரன்: ஜெமினியில் வந்த கிரண்?

மாதுரி: கிரண்கூட லைலா, பூமிகா குரூப் தான். புன்னகை இளவரசி பட்டத்துக்கு ஏற்ற புன்னகை மைனஸ்தான்.

அஜித்: புன்னகை இளவரசி, புன்னகை இளவரசன் பட்டம் யாருக்குக் கொடுக்கலாம்னு கே.ஆர். விஜயாவிடமே கேட்டால் என்ன சொல்லுவாங்க?

பிரதீப்: பாவம்! அவங்களே சிட்டுக் கம்பெனி விவகாரத்துல சிக்கல்ல இருக்காங்க. இந்த சமயத்துல அவங்க பட்டமளிப்பு விழாவா நடத்த முடியும்?

காயத்ரி: ஏய்! உன் புன்னகை ரொம்ப அழகா இருக்கு'ன்னு சொல்லத் தகுதியானவங்கன்னு நான் நினைக்கிறது ஸ்நேகாவைத்தான். அவங்க இலேசா உதட்டை அசைச்சு சிரிக்கிறபோது, ரொம்ப நேச்சுரலா இருக்கு. அவங்க சாப்ட் முகத்தோற்றுக்கு மெலிதான புன்னகை ரொம்ப பொருத்தமா இருக்கு.

அனந்து: 'பார்த்தாலே பரவசம்' படத்திலேயே ஸ்நேகாவின் புன்னகையை நான் ரொம்ப ரசிச்சேன்.

மாதுரி: அப்போ, ஸ்நேகாவுக்கு எத்தனை பேர் ஆதரவு இருக்குன்னு இப்பவே பார்த்திடலாம்.

ஜனனி: ஓ.கே. ஒண்ணு, ரெண்டு... மூணு... நாலு.... அட! மொத்தம் ஏழு பேர் ஆதரவு.

ஸ்நேகா, புன்னகை இளவரசி ஆக்கப்பட்டார். அதேபோல புன்னகை இளவரசன் ஆனார் ஷாம்!

- சி.எம்.

படங்கள்: ஸ்ரீஹரி

கல்கி

VBC Jewellery

House of Vummidi


* 78, G.N.Chetty Road, **Vani Mahal Circle,** (Opp. Hotel Residency), T.Nagar, Chennai - 600 017.
✆ : 8229556, 8229560
* 11-B, Nageswara Rao Road, **Panagal Park,** T.Nagar, Chennai - 600 017. ✆ : 4342407, 4346297

இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி; பொன்நகைப் பரிசு!

வாழ்த்துக் கவிதை

இந்த நூற்றாண்டின் சிறந்த இந்திய கிரிக்கெட் வீரராக கபில்தேவைத் தேர்ந்தெடுத்திருக்கிறது விஸ்டன். அவருக்கு நச்சென்று நான்கு வரியில் வாழ்த்துக் கவிதை பாடலாமே! அட்டகாச தமாஷ் வாழ்த்து இரண்டுக்கு, தலா நான்கு கிராம் தங்கம் பரிசு.



ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

புன்னகைப் போட்டி - 25

என்று குறிப்பிட்டு முகவரியுடன் அனுப்புங்கள். தபால் உறை அல்லது தபால் கார்டில், கீழே உள்ள கூப்பனை வெட்டி ஒட்டி அனுப்புங்கள்.

கடைசி தேதி : **12.8.2002**

ஆசிரியர், கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

ஆடிக்



மதுரை ஸ்ரீகிருஷ்ணா சில்க் உரிமையாளருக்கு, 'ஆடிக் கழிவு' என்பது பழைய, தேங்கிய, மக்கிய சரக்குகளைக் கழிச்சுக் கட்டுவதா? 'ஜவுளி மகா சமுத்திரம்' கிருஷ்ணா சில்க்கில் எடுத்த புடவையை நான் நினைத்த போது - நனைத்தபோது உங்கள் சாயம் 'ஜம்'மென்று வெளுத்துவிட்டது. மயில் கழுத்துக் கலர் சேலை, புடவைகளின் 'அக்கினிப் பிரவேச'மானத் தண்ணீர் பிரவேசம் செய்யப்பட்டவுடன் கருமை நிறக் கண்ணன் கலராக மாறித் தன் வேலையைக் காட்டிவிட்டது. வாளியில் தேங்கியிருந்த சாயத்தைப் பார்த்து 'ஆடி'ப் போய்விட்டேன். 'ஹோலி' வாட்டர் கெட்டது போங்கள்! 'ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக்கற..' என்ற சொல் வழக்கை வியாபார - தேவவாக்காகக் கொண்டு, அவசரமாக 'ஆனி'யிலேயே 'ஆடி'விட்ட நீங்கள் ஆவணியிலாவது ஆவன செய்வீர்களா?

இப்படிக்கு
கடும் கோபத்துடன்
சாரிகா



திருமதி ச(ா)ரிகா அவர்களுக்கு,

சாவகாசமாக ஒன்பது கஜம் சேலையைக் கட்டிக் கொள்வது போல சுற்றிச் சுற்றி விளக்காமல் நேராகவே விஷயத்துக்கு வந்து விடுகிறேன். நினைத்த போது புடவையையோ அல்லது உளுந்தையோ ஊறப் போடுங்கள். பாதகமில்லை. ஆனால் எந்த நீரில்? (அ) கிணற்று நீரிலா? (ஆ) மினரல் நீரிலா? (இ) சென்னை மெட்ரோ நீரிலா? பதில் (இ) மெட்ரோ நீர் என்றால் நாங்கள் பொறுப்பல்ல. ஆடிக்கொரு தரம், அமாவாசைக்கொரு தரம் நனைக்கப்படும் கெட்டிச் சாயப் புடவைகளுக்கு மேலே குறிப்பிட்டுள்ள பிரச்னைக்குரிய நீர் தண்ணீர் காட்டுகிறது என்று கூறப்படும் நிலையில், அவ்வாறு நீங்கள் தொடர்ந்து செய்திடின், 'காந்தாரி மாதிரி கண்களைக் கட்டிக் கொண்டபிறகுதான் அப் புடவைகளை உடம்பில் கட்டிக் கொள்ள முடியும்' என்ற கடுமையான வார்த்தைகளையும் வாங்கிக் கட்டிக் கொள்ள நேரிடும் என்பதை அறி



கழிவிரக்கம்

யவும்.

இப்படிக்கு
நிஜக் கோபத்துடன்
கிருஷ்ணன்

சேலை ரட்சகர் ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுக்கு,

'நினைத்தபோது நீ வரவேண்டும்'னு முருகனைத்தான் பாடி அழைப்பதுண்டு. நினைக்கும்போது 'நீர்' வர வேண்டும்னு நல்ல நீரை அழைத்துப் பாடியதாக புராணமோ / சரித்திரமோ இல்லை. 'காயமே இது பொய்யடா'ன்னு வேதாந்த உச்ச நிலையில் உணர்வது போல, 'சாயமே இது பொய்யடா'ன்னு உங்கள் கடைப் புடவையை நனைத்தபோது விரக்தியின் உச்சத்தில் உணர்ந்தேன். என்னது? சேலையை அலச மினரல் வாட்டரா? மை காட்! புடவை ஸ்ரீகிருஷ்ணன் சார்! உங்கள் கடை கஸ்டமர்கள் எல்லாருமே கோடீஸ்வரர்கள் என்ற நினைப்போ? 'கோடி' வாங்க, தள்ளுபடிக்காக 'ஆடி'யை நாடும் நடுத்தர வர்க்க 'லேடி'களும் உண்டு என்பதை தாங்கள் மறந்தால், உங்கள் நிலை ஆடிக் காற்றில் அகப்பட்டுக் கொண்ட அம்மியாகிவிடும். கவனம் இருக்கட்டும்! சரி! வீண் வாதம் எதற்கு? நீங்கள் யார்? கிருஷ்ணன்! குறும்பாகப் புடவைகளை ஒளித்து வைக்கிறதும், 'காப்பாற்று'ன்னு வேண்டிக்கும்போது விதம்விதமா, தொடர்ச்சியாகப் புடவைகளை அளிக்கிறதும் உங்கள் பெயர் கொண்ட கடவுளுக்குக் கைவந்த கலை அன்றோ! ஆகவே வேறு புடவைகளையும் அபராதமாக பணவுசையும் உடனே அனுப்பி வைக்கவும். இல்லாவிடில் சாரி! கன்ஸ்யூமர் கோர்ட்டின் ஆராய்ச்சி மணியை அடிக்க



நேரிடும்.

இப்படிக்கு
வாதி
சரிகா

திருமதி சரிகா அவர்களுக்கு,

மதுரை ஸ்ரீகிருஷ்ணா சில்க்கின் ஏகபோக உரிமையாளரான கிருஷ்ணனாகிய நான், எங்கள் கடைப் புடவையின் தரம் பற்றித் தரக்குறைவாக எழுதப்பட்ட அபாண்ட குற்றச்சாட்டு சம்பந்தமாக இதனால் தெரிவிப்பது என்ன என்றால் :

தாங்கள் சம்பவம் நடந்ததாக ஜோடித்துச் சொல்லும் தினத்தன்று, தங்களால் உபயோகித்த தண்ணீர் விலை உயர்ந்த புடவைகளை நனைக்கவோ, துவைக்கவோ, அலசவோ லாயக்கானது என்று மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட சோதனைக் கூடத்திலிருந்து இரண்டு நகல்களுடன் சான்றிதழ் பெற்று எங்களுக்கு அனுப்பினால், எமது சட்ட ஆலோசகர்கள் 'சேலையப்பன் அண்டு சோலையப்பன்' அவர்களின் ஆலோசனையைப் பொறுத்து, அடுத்த ஆடி மாதத்தில் உங்களுக்கு அதே ரக, நிற மாற்றுப் புடவை ஸ்டாக் இருந்தால் அனுப்பி வைக்க

ஜெ.எஸ்.ராகவன்

முயற்சி செய்வோம் என்று இதனால் கோரப்படுகிறது.

இப்படிக்கு
பிரதிவாதி பயங்கரவாதி
கிருஷ்ணன்

இளம் சகோதரி சரிகாவிற்கு,

பல வருடங்களாகப் பத்திரிகைகள் வாயிலாக அன்புச் சகோதரிகளுக்கு ஆலோசனை வழங்கி வரும் எனக்கு, நீங்கள் அனுப்பிய கலாட்டாக் கடிதங்களும், விளக்கமும் கிடைத்தது. உங்கள் பிரச்னையை நீங்களே மனோதத்துவ ரீதியில் சமாளித்தது சுவாரஸ்யமாக இருந்தது.

புதிதாக மணமான நீங்களும் உங்கள் கணவர் கிருஷ்ணா சில்க்கின் உரிமையாளர் கிருஷ்ணனும், பழைமையில் ஊறிய பெரியவர்கள் கெடுபிடியால் ஆடிக்காகப் பிரிக்கப்பட்ட பரிதாப நிலையிலும், பிரிவை நினைத்து உஷ்ணப் பெருமூச்சுகள் விடாமல், பொரிகள் மேல் பாயாமலும், பேசிக் கொண்டபடி ஒரு கற்பனைப் பிணக்கில் / ஊடலில் ஈடுபட்டு அதற்கு ஒரு 'வியாபாரி - நுகர்வோர்' வடிவம் கொடுத்து, பிரச்னையை ஃபுல் வாயில் புடவையைவிட இலேசாக்கி, தமாஷாக ஏசிக் கொள்ளும் நலங்குப் பாடல் பாணியில் கொண்டு போய்ச் சமாளித்திருக்கிறீர்கள். ஆடியில் பிரித்து வைப்பதே சித்திரை வெப்பத்தில் பிரசவம் வேண்டாமே என்பதால்தான்! இடையே உள்ள மாதங்களைக் கூட்டிப் பாருங்கள், கணக்கு புரியும். பிரச்னைகளைத் தீர்ப்பது எப்படி என்று மலைத்து அட்வைஸ் கேட்பவர்கள் ஒருபுறம் இருக்க, வித்தியாசமாக எப்படிச் சமாளித்தோம் என்று எனக்கு எடுத்துக் காட்டியதற்கு நன்றி. இவ்வளவு நகைச்சுவை உணர்வுள்ள தம்பதியின் பரஸ்பர அன்பு கெட்டியானது- ஒரு போதும் சாயம் போகாது என்கிற திடமான நம்பிக்கையுடன் உங்களை வாழ்த்தும்.

அன்புச் சகோதரி
ராதா ரமணன்.



புக்பேங்க்



யுத்தம் வேண்டாம் - மாக்சிம் கார்கி

யுத்தத்தினால் ஏற்படும் பிரச்னைகள் குறித்து மாக்சிம் கார்க்கி எழுதிய கட்டுரைகளைக் கொண்டுள்ளது இப்புத்தகம். அடிக்கடி யுத்தம் பற்றிய பேச்சும் பதற்றமும் ஏற்படும் இச்சூழ்நிலையில் இப்புத்தகம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று.

தமிழ்ப் புத்தகாலயம், ஜி.3/8 மாசிலாமணி தெரு, பாண்டிபஜார், தி.நகர்., சென்னை - 17. விலை ரூ.25.

ஸ்ரீராகவேந்திர மகிமை 5ம் பாகம் - அம்மன் சத்தியநாதன்

ஸ்ரீ ராகவேந்திரரின் மகிமையை உணர்த்தும் நூல். பல புராண கதைகளை, சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று எழுதியுள்ள விதமும் புத்தகத்தின் இடையிடையே வரும் சசியின் ஓவியங்களும் சுவாரஸ்யமாக இருக்கின்றன.

அருள்மிகு அம்மன் பதிப்பகம், 8, கங்கையம்மன் கோயில் தெரு, (அஜந்தா எதிரில்) ராயப்பேட்டை, சென்னை - 14. விலை ரூ.130.

தரிசனம் - நந்தி

சிறுகதைகள். இலங்கையிலிருந்து எழுதும் ஆசிரியரின் 12 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. வாசகரின் பார்வையையும் எண்ணங்களையும் விசாலப்படுத்தக் கூடிய வகையில் எழுதப்பட்டுள்ள கதைகளில், எழுதும் முறையிலும், சிந்தனையிலும் புதுமையைக் காண முடிகிறது.

குமரன் புக் ஹவுஸ், 3, மெய்கை விநாயகர் கோயில் தெரு, குமரன் காலனி, சென்னை - 26. விலை ரூ.45.

தேசியத் தலைவர் காமராஜர் - கலைமணி

'**கி**ங்மேக்கர்' என்று அனைவராலும் போற்றப்பட்ட காமராஜரின் வாழ்க்கை வரலாற்று நூல் இது. அழகான வடிமைப்புடன் வந்துள்ள புத்தகத்தில், பல புதிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

சாந்தி பதிப்பகம், 27, அண்ணாசலை, சென்னை - 2. விலை ரூ.125.

தஞ்சை கதைக் களஞ்சியம் : சோலை சுந்தரபெருமாள்.

நெல்லைச் சிறுகதைகள், சென்னைச் சிறுகதைகள் என்று மாவட்ட வாரியான தொகுப்புகள் வந்து கொண்டிருக்கும் காலமிது. அந்த வகையில் இது தஞ்சை தொகுப்பு. உ.வே. சாமிநாதய்யரில் தொடங்கி தஞ்சை மாவட்டத்தில் வாழ்ந்த, வாழ்ந்துவரும் ஐம்பத்தோரு எழுத்தாளர்களின் கதைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

சிவசக்தி பதிப்பகம், 20/43, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 1. விலை ரூ.150.

— தம்பி



(பிற பத்திரிகைகளில் வெளியான சில கடிதங்கள் — சற்றே சுருக்கமாக.)

எதற்கெடுத்தாலும் யாகம் வளர்க்கும் நம் முதல்வர் இதற்கும் (காவிரி நீர் கர்நாடகத்திலிருந்து வருவதற்கும்) ஒரு யாகம் வளர்த்து, வருண பகவானை நிர்பந்தித்தால் மட்டுமே இனி வானம் பார்த்த பூமி செழிக்கும்.

(இந்தியா டுடே - ஆர்.பி.ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்)

பிரமோத் மகாஜன் ஏவுகணை ஒன்றை (அதாவது அப்துல் கலாமை) வெற்றிகரமாக ஏவிட்டதற்காகத் தன்னையே பாராட்டிக் கொண்டிருக்கிறார். கூடவே மற்றொரு ராக்கெட்டையும் (அதாவது உதவி ஜனாதிபதி) விரைவில் அனுப்புவோம் என்றிருக்கிறார். வரவர அமைச்சர்கள் தங்கள் அறிவியல் ஞானத்தை வெளிக்காட்டுவதில் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆனால் தாங்கள் கூறுவதன் உண்மையான அர்த்தத்தை அறிந்து கொள்ள வேண்டாமா? தவிர அப்துல் கலாம் (என்ற ராக்கெட்) யாரைச் சுற்றி வரவேண்டுமென மகாஜன் நினைக்கிறார்? தேசிய ஜனநாயகக் கூட்டணியையா?





ஒவ்வொரு ரன்னுக்கும் 500 ரூபாய்!

பா.ஜ.கவையா? அல்லது பிரதமரையா?

(தி ஹிண்டு – வி. சுந்தரேசன், ஹைதராபாத்)

இந்திய பண்பாடு என்பதில் பெருமை கொண்ட அனைவரும் நீலப்படங்களைத் திரையிடுவதற்கென்றே சில அரங்குகளை ஒதுக்கலாம் என்ற யோசனைக்குக் கண்டனம் தெரிவிக்கவேண்டும். இப்போ சென்ஸாரால் அனுமதிக்கப்பட்டு வெளியாகும் திரைப் படப்பாடல்களே ஆபாசமாகத்தான் உள்ளன.



பிரமோத் மகாஜன்

(டைம்ஸ் ஆஃப் இண்டியா - எஸ்.ஜி.பலேக்கர், மும்பை)

சிங்கப்பூரைச் சேர்ந்த டி.வி. நடிகர் பியரி பாங்க் என்பவர் தமது காதலியின் உயிரைக் காப்பாற்ற தமது கல்லீரலில் ஒரு பகுதியைத் தானம் செய்த செய்தியைப் படித்து நெகிழ்ந்தேன். இதற்கு நேர்மாறாக உள்ளது டைட்டானிக் நாயகி கேட் வின்ஸ்லெட்டின் கதை. இவரை விவாகரத்து செய்திருக்கிறார் அவரை மணந்து கொண்டவர்.

(உமன்ஸ் எரா - அகிலேஷ் குமார் ஷா, புது டெல்லி)

எடுக்கும் ஒவ்வொரு ரன்னுக்கும் கிரிக்கெட் வீரருக்கு 500 ரூபாய் அளிக்கவேண்டும். சதமெடுத்தால் போனஸ் தொகை அளிக்க வேண்டும். எடுக்கும் ஒவ்வொரு விக்கெட்டுக்கும் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கலாம். மூன்றுக்கு மேற்பட்ட விக்கெட்டுகளை எடுத்தால் போனஸ் தொகை. கேட்ச் பிடித்தால் மற்றும் ஸ்டம்பிங் செய்தால் அதற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம். இப்படியெல்லாம் செய்தால் நமது கிரிக்கெட் வீரர்களின் விளையாட்டுத் திறமை பிரகாசிக்கும்.

(தி வீக் - ஆர். பாலசுந்தரம், மும்பை)

தொகுப்பு: **ஜி.எஸ்.எஸ்.**





'வைகோ' கைதுக்குப் பின் டாக்டர் ராமதாஸின் தனி மாநிலப் பேச்சு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இது பற்றி ராமதாஸிடம் கேட்டோம்:

என் நோக்கத்தையே புரிந்து கொள்ளாமல் ஆளாளுக்கு எதிர்ப்புக் குரல் கொடுக்கிறார்கள். ஒரு மாநிலத்தின் பின் தங்கிய பகுதியில் உள்ள மக்கள், நிர்வாகம் கைக்கெட்டும் தொலைவில் இருக்க வேண்டும் என்பதாகவும், அரசின் திட்டங்கள் மக்களை விரைவாகச் சென்றடைய வேண்டும் என்பதற்காகவும் தனி மாநிலங்களை விரும்புகிறார்கள். நான் சொல்வது தனி நாடு அல்ல, தனி மாநிலம்தான். இன்று தேசம் முழுவதும் பல மாநிலங்களில் மாநிலத்திற்குள்ளேயே தனி மாநிலம் கேட்டும் கோரிக்கைகள் வலுவடைந்து கொண்டுதான் வருகின்றன. கர்நாடகத்தில் குடகு பகுதியைத் தனி மாநிலமாக்கக் கேட்டு போராட்டம் நடக்கிறது. இதற்காகத் தில்லியில் பேரணி கூட நடந்தது. ஆந்திராவில் தெலுங்கானா, மகாராஷ்ட்ராவில் விதர்பா, உத்தர பிரதேசத்தில் ஹரித் பிரதேஷ், ஒரிஸ்ஸாவில் கோஷல், மத்திய பிரதேசம் - உத்தர பிரதேசம் எல்லைப் பகுதியில் பண்டல்காண்ட், அஸ்ஸாமில் போடோலாந்து, மேற்கு வங்கத்தில் கூர்க்காலாந்து, இப்படித் தனி மாநிலங்கள் கேட்போர் பட்டியல் வளர்ந்து கொண்டே இருக்கிறது. அங்கேயெல்லாம் இதற்காகப் போராடுபவர்களை யாரும் பிரிவினைவாதிகள் என்று சொல்லுவதில்லை. சிறிய மாநிலங்கள் என்றால் நிர்வாகத்துக்கும் மக்களுக்கும் நல்ல தொடர்பு இருக்கும். வளர்ச்சிப் பணிகளை விரைந்து கவனிக்க முடியும்.



கே: புலிகள் பிரச்னை, வைகோ கைது போன்ற பரபரப்பான சூழலில், உங்கள் கருத்து பிரிவினைக்குத் தூபம் போடுவது போல் அமைந்து விட்டதே!

டாக்டர் ராமதாஸ்: ஒரு கருத்தை மக்களிடம் உரத்த சிந்தனைக்கு எடுத்து வைத்திருக்கிறேன்; அவ்வளவுதான். இந்தக் கருத்தை ஏன் சொல்ல நேர்ந்தது என்றும் பார்க்க வேண்டும். உத்தரமேரூரில் சமீபத்தில் வன்னியர் வாழ்வுரிமை மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில் தமிழ்நாட்டின் வட மாவட்டங்கள் (சென்னை நீங்கலாக) பிற்பட்டு இருப்பதாகப் புள்ளி விவரங்களுடன் சொல்லி, இந்த மாவட்டங்களைத் தனிமாநிலமாக அறிவித்து முன்னேற்ற வேண்டும் என்று தீர்மானம் போட்டார்கள். அந்தத் தீர்மானத்தில் வன்னியருக்கு என்று தனிமாநிலம் என்றோ, தனி நாடு என்றோ தீர்மானம் போடப்படவில்லை. ஒரு உதாரணம் சொல்கிறேன். தமிழ்நாட்டில் வேலையற்று இருப்போரின் எண்ணிக்கை 49 லட்சம். அதில 30 லட்சம் பேர் இந்த மாவட்டங்களில் தான் இருக்கிறார்கள். பெரிய தொழிற்சாலைகள் இடையாது. இப்படி பல வகைகளில் பிற்பட்டு இருக்கின்றன இந்த மாவட்டங்கள். அந்த மாவட்ட மக்களின் உணர்வாகத்தான் இக்கோரிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

கே: உங்களைப் பிரிவினை

– டாக்டர் ராமதாஸ் பேட்டி

ஜெ. மனத்தில்தான் பிரிவினை!

வாதியென்றும், பொது ஜனங்களால் நீங்கள் விரட்டியடிக்கப்பட வேண்டும் என்றும் ஜெயலலிதா சொல்கிறாரே!

ராமதாஸ்: என்னைப் பிரிவினைவாதி என்று சொல்ல அவருக்குத் தகுதி கிடையாது. எரியும் பிரச்னைகளிலிருந்து மக்களைத் திசை திருப்ப இது போன்று செயல்படுகிறார் அவர். கலைஞர் அரசால் அமல்படுத்தப்பட்ட பல நலத்திட்டங்கள் இன்று ஓரங்கட்டப்பட்டு விட்டன. சமுதாயத்தின் அத்துணைப் பிரிவினரும் இன்று ஜெயலலிதா அரசை பழித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசின் கஜானா காலி என்று சொல்லிவிட்டு இவர் ஐந்து கோடி செலவில் ஆடம்பர விழாக்கள் நடத்திக் கொண்டிருக்கிறார். நலிந்த பிரிவினருக்கு இஸ்திரி பெட்டி, மூன்று சக்கர வண்டி கொடுப்பது தாசில்தார் வேலை. இவர் கோடிக்கணக்கில் செலவு செய்து விழா நடத்தி, தாசில்தார் வேலையைச் செய்கிறார்.

கே: எதிர்க்கட்சிகள் மற்றும் ஆதரவு கட்சிகள் கூட தனி மாநில விஷயத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு தெரிவிக்கவில்லையே!

ராமதாஸ்: அதுதான் முதலிலேயே சொன்னேனே. தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுவிட்டது. என் கருத்து இன்னமும் பரந்துபட்ட அளவுக்கு விவாதத்துக்கு வருமானால் ஆதரவு கூடும் என்பதே என் எண்ணம்.

கே: உங்கள் கட்சியில் இருந்த இரண்டு எம்.எல்.ஏக்கள் பிரிந்து செயல்படுவது, உட்கட்சி பூசல், இப்படிப் பல பிரச்னைகளிலிருந்து உங்கள் கட்சிக்காரர்களைத் திசை திருப்பத்தான் இதுபோன்ற கருத்தை எடுத்து விட்டிருப்பதாகச் சொல்கிறார்களே.

ராமதாஸ்: தவறு! இரண்டு எம்.எல்.ஏக்கள் விலை போய்விட்டார்கள் என்பதுதான் உண்மை. மத்திய அமைச்சரவையில் ஆட்களைப் போட்டதால் எந்த பிரச்னையும் இல்லை. எங்கள் கட்சியை உடைத்து, எம்.எல்.ஏக்களைப் பிரிக்க வேண்டும் என்று முழுமூச்சாகப் பிரிக்கும் வினை (தொழில்) செய்யும் "பிரிவினைவாதி" ஜெயலலிதான். அவர் மனத்தில்தான் இருக்கிறது பிரிவினை.

சந்திப்பு: ப்ரியன்
படம்: ராஜன்

புன்னகைப் போட்டி முடிவு — 22

ஆடி ஜோக்ஸ் கேட்டிருந்தோம். வந்து குவிந்த ஜோக்ஸ்களில் தலா நான்கு கிராம் தங்கம் பரிசு பெற தேர்ந்தெடுக்கப்பட்டவை கீழே:

"எங்களுக்குக் கல்யாணம் முடிஞ்ச ரெண்டு நாள்லயே ஆடி வந்திடிச்சி... ஆனாலும் எங்களைச் சந்தோஷமா இருங்கன்னு சொல்லிட்டாங்க.."

"உங்களைப் பிரிச்சு வைக்கலையா?"

"பிரிச்சு வச்சதைத்தான் சொன்னேன்..."

— சே. சரிதா,
18/49 -ஏ, பூச்சக்காடு 3-வது வீதி,
திருப்பூர் - 641 604

"ஏங்க இந்தத் துணிக்கடைக்கு எதுத்தாப்ல பிளாட் பாரத்துல எடங்கெடச்சா இப்பவே பார்த்து வச்சுக்கோங்க."

"எதுக்கு?"

"ஆடித்தள்ளுபடில துணி பர்சேஸ் பண்ண போறேன். திரும்பி வர்ர ஒரு வாரம் ஆகும். அதுவரைக்கும் நீங்க தங்கியிருக்கத்தான்."

— ஆர்.பி.கேவி. மூர்த்தி,
ட்ரஸ் மேக்கர்ஸ் டெய்லரிங்
கண்டமங்கலம் அஞ்சல்,



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Pvt. Ltd. Editorial Team : C. Egnath Raj, Anuradha Sekhar, Jesudoss. Layouts : S.Stephen, P.R. Rajan.
Editor : Mrs. Seetha Ravi.
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



மார்பக புற்றுநோய் பரவாமல் தடுக்கவும், கட்டுப்படுத்தவும், வராமல் பாதுகாக்கவும் தேவையான தெய்வீக மூலிகைகள் & இயற்கை சிகிச்சை முறைகள்



பெண்களுக்கு தோன்றும் புற்று நோய்களில் மார்பகபுற்று நோய் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. இது ஹார்மோன் குறைபாடு, வைரஸ் போன்ற நோய்க்கிருமி, பரம்பரை தன்மை, உணவு பழக்கம், வாழ்க்கை முறை, சுற்று சூழல் மனநிலை பாதிப்பு போன்ற ஏதேனும் ஒரிரு காரணங்களால் உடலில் நச்சுக்கள் அதிகமாகி புற்று நோயாக மாறிவிடுகின்றது. இவைகளை நாம் உட்கொள்ளும் உணவில் கசப்பு சுவையுள்ள காய்கள், கீரைகள், பழங்கள், நம் அருகில் உள்ள சில வகையான கசப்பு சுவையுள்ள மூலிகைகள் உட்கொள்வதால் எல்லாவிதமான புற்று நோய்களையும் குணமாக்கி கொள்ளலாம். வராமலும் தடுத்துக் கொள்ளலாம். கசப்பு சுவையானது நச்சுக்களை முறிப்பதிலும், நோய்க்கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. சுமார் 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குத் தான் மார்பக புற்று நோய் வருகின்றது. இதற்கு ரேடியோ தெரபி, கீமோ தெரபி, அறுவை சிகிச்சை போன்ற முறையில் சிகிச்சைகள் தரப்படுகின்றது. இவைகளில் பக்க விளைவுகள் உண்டு. முழுமையான நிவாரணத்திற்கு உத்திரவாதமில்லை. எனவே எல்லா பெண்களும் மார்பக புற்று நோய் பற்றியும் அவைகளை குணப்படுத்தும் மூலிகை, உணவு முறைகளை தெரிந்து கொள்வது அவசியம்.

மார்பக புற்று நோய் வருவதற்கான காரணம் : • குறிப்பிட்ட வயதிற்கு முன்பே மாதவிடாய் ஏற்படுவது. • 45 முதல் 50 வயதிற்கு பிறகு மாதவிடாய் வருவது நின்று விடும். 45 வயதிற்கு பிறகும் மாதவிடாய் ஏற்பட்டால் மார்பகபுற்று நோய் வரலாம். குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்காமல் இருப்பது, காலதாமதமாக முதல் குழந்தை பெறுவது, குழந்தையில்லாதவர்கள், மார்பகபுற்று நோய் ஏற்கெனவே இருக்கும் குடும்பத்தில் பிறந்தோர் ஆகியோருக்கு இந்நோய் வரும் அபாயம் அதிகம்.

மார்பக புற்று நோயின் அறிகுறிகள் : மாதவிடாய் ஏற்படுவதற்கு ஒரு வாரம் முன்போ (அ) மாதவிடாய் காலத்திலோ அல்லாமல் மற்ற நாட்களில் மார்பகத்தில் தனிதனியாக, வலியற்ற சிறிய அல்லது பெரிய கட்டிகள் தோன்றுதல், மார்பகங்களின் அளவில் மாற்றம், மார்பக காம்புகள் உள்மடித்து இருத்தல், மார்பக காம்பில் இருந்து இரத்தம் வடிதல், மார்பக காம்பைச் சுற்றி அரிப்பு, மார்பகம் அசைக்க முடியாத உறுதியான நிலையில் காணப்படுதல் போன்றன மார்பக புற்று நோயின் அறிகுறிகள் ஆகும். மேலும் 40 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மார்பக சுய பரிசோதனை செய்தும் மேற்கூறிய அறிகுறிகள் உள்ளதா என்பதை தெரிந்துக் கொள்ளலாம்.

மார்பக புற்று நோயாளிகள் உட்கொள்ள வேண்டிய தெய்வீக மூலிகைகள் : வேப்பிலை, வில்வம், அத்தி, துளசி, அருகம்புல், தும்பையிலை, மாவிலை, நித்தியகல்யாணி, கீழாநெல்லி, முட்டைக்கோஸ், நெல்லி, குப்பைமேனி, நாவல், ஆவாரம்பூ போன்ற மூலிகைகளை பறித்து வெயிலில் உலர்த்தி பொடி செய்து சம அளவில் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து அரை அல்லது ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக தினம் காலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளையும் சாப்பிட்டு வரவும். இந்த மூலிகைகளில் உள்ள சக்தி புற்று நோய் செல்களை அழித்து நோய் பரவாமல் தடுக்கின்றது. நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக்கி நோயை குணமாக்குகிறது.

மார்பக புற்று நோயாளிகள் பின்பற்ற வேண்டிய உணவு முறைகள் : செயற்கையாகத் தயாரிக்கப்படும் உணவுகளும், சில உணவுத் தயாரிப்பு முறைகளும் புற்று நோய்க்கு காரணமாகின்றன. எனவே நிறத்திற்காகவும், மணத்திற்காகவும், இனிப்புக்காகவும் சேர்க்கப்படும் செயற்கை வேதிப் பொருட்களை தவிர்த்து, புற்று நோயை விரட்டியடிக்கின்ற பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், காய்களை அதிகம் உட்கொள்ள வேண்டும். எனவே காலை உணவாக தினம் இந்நோயாளிகள், பச்சையாக சாப்பிடும் பழங்கள், காய்கள், வெஜிடபிள் சாலட், பழச்சாறுகள் இளநீர் போன்றவைகளாக உட்கொள்ள வேண்டும். அந்தந்த காலங்களில் கிடைக்கும் பழங்கள், காய்கள், வெஜிடபிள் சாலட், பழச்சாறுகள், இளநீர் போன்றவைகளாக உட்கொள்ள வேண்டும். பகல் வேளை உணவை 50% சமைத்த உணவாகவும், 50% அளவு காய்கள், கீரைகள் இருக்கும்படியாக உள்ள உணவுகளை சாப்பிடவும் மாலையில் வெஜிடபிள் சூப், சத்துமாவு கஞ்சி, பட்டாணி சூப், கீரைகள் சூப் போன்றன சாப்பிடலாம். இரவு சமைத்த உணவாக வாரம் நான்கு நாட்களும், இயற்கை உணவை வாரம் மூன்று நாட்களும் சாப்பிடவும். இவ்வாறான உணவில் உடலுக்குத் தேவையான சரிவிகித உணவு கிடைக்கும். இதனால் நோய் விரைவில் குணமாகும்.

இயற்கை சிகிச்சை முறைகள் : இரண்டு மார்பகங்களுக்கும் மண்பற்று போட்டு 20 முதல் 30 நிமிடங்களுக்கு பிறகு தண்ணீரால் சுத்தம் செய்யலாம். இதனை இரண்டு நாட்களுக்கு ஒரு முறை காலை (அ) மாலை வேளைகளில் செய்துக் கொள்ள வேண்டும். வெந்நீர் ஒத்தடம் தினம் காலை (அ) மாலை வேளைகளில் 20 நிமிடம் தர வேண்டும். வேப்பிலை + மஞ்சள் தூள் அரைத்து மார்பகம்மீது பற்று போட்டு 30 நிமிடம் கழித்து சுத்தம் செய்யலாம்.

மேற்கூறியவைகளை பின்பற்றினால் இந்நோயினை முழுமையாக கட்டுப்படுத்தலாம். நலமுடன் இருக்கும்போதே வாரம் ஒரிரு முறைகள் பின்பற்றினால் வராமல் தடுத்துக் கொள்ளலாம்.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள் **Chennai Cell : 98410 45138**

தலைமை முகவரி : **Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்**

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) - 635 601 ✆ 04179-20469, 22769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 6424285, 6427638

7 & 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589, 4083879

9ந் தேதி - பெங்களூர் : காலை 11 to மாலை 1 மணி வரை, ஹோட்டல் பிரசிடேன், (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பேகவுடா ரோடு. ✆ 080-2266374, 2873013

18 & 19ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, : 5717126, 5723651

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

